

ஆர். ரஹ்மான்
ன் இல்லை?

கல்கி

KALKI 4.10.98 ரூ. 4.50



மாமியார்-98!



பட்டுதான் பட்டுதான்,
சாரதா'ஸின் பட்டுதான்,
பூவரசம் பூவைப் போல
பூத்திருக்கும் பட்டுதான்,
தரத்துக்கேத்த பட்டுதான்,
கட்டிக்கிட்டா சிட்டுதான்!

மீனு



மோனிஷா



கச்சிதமான கூந்தலுக்குத் தேவை
கச்சிதமான கண்டிஷனர்.
GARNIER
Ultra DOUX
கண்டிஷனர்
கூடுதல் பளபளப்பு. கூடுதல் மென்மை. கூடுதல் துடிப்பு.
சூரிய ஒளி, காற்று மற்றும் அடிக்கடி வாருவதால் உங்கள் கூந்தல் சேதமடைகிறது. இயற்கைச் சாறுகளைக் கொண்டு ஃபார்முலேட் செய்த உல்ட்ரா தூ என்ரிச்சிங் கண்டிஷனர், மற்ற ஷாம்ப்பூகளினால் இயலாத அளவில், உங்கள் கூந்தலை மிருதுவாக்கி, உயிர்ப்பித்து, கூடுதல் பளபளப்பு மற்றும் மென்மையை அளிக்கிறது.
சேதமடைந்த கூந்தல்
உல்ட்ரா தூ கண்டிஷண்ட் கூந்தல்
உலர்ந்த, சாதாரண மற்றும் போஷாக்கு குறைவான கூந்தலுக்காக எங்கள் தயாரிப்புகளிலிருந்து தேர்ந்தெடுக்கவும்.
GARNIER
Ultra DOUX
Enriching
CONDITIONER
for
DRY Hair
Natural extract of Wheatgerm
Extra Shine, Softness & Vitality
Ultra DOUX
இயற்கையின் ஆழத்தைக் கண்டுணர்ந்த விஞ்ஞானம்.
GUARANTEED BY LABORATOIRES
GARNIER PARIS


உள்ளத்தை
கொள்ளை
கொள்ளும்
கனவுமாளிகை
ஆஷிகா
ஸாரீஸ்
ASHIKA
ASHIKA
SAREES
MAOSHMI
அனைத்து எல்லா ஷோரூம்களிலும் கிடைக்கிறது
BENSONS-98

"தவறு செய்யும் எம்.பிக்களைத் தண்டிக்கும் தைரியம் எந்தக் கட்சிக்குமே இல்லை!"

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய மாநாடு அண்மையில் சென்னையில் நடைபெற்றது. கட்சியின் அகில இந்தியத் தலைவர்கள் பலரும் வந்திருந்தனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும், முன்னாள் மத்திய உள்துறை அமைச்சருமான இந்திரஜித் குப்தா, கல்கிக்கு பேட்டியளித்தார். மாநாடு நடந்து கொண்டிருந்த காமராஜர் அரங்கில் தேநீர் இடைவேளையின் போது, மேடையின் பின்னால், தனியறையில் அமர்ந்து நம்மிடம் பேசினார்...



"கடந்த முப்பதாண்டுகளாக நீங்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து வருகிறீர்கள். தற்போது, பாராளுமன்றம் கூச்சலும், குழப்பமும் நிறைந்த சபையாகி விட்டது. அமளிகளால், சபை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்படுவது தினசரி வாடிக்கையாகிவிட்டது. இது உங்களை விசனப்படுத்துகிறதா?"

"பாராளுமன்றத்திலேயே என் கவலையைத் தெரிவித்துப் பல சமயங்களில் பேசியிருக்கிறேன். பாராளுமன்ற நடவடிக்கைகள், விவாதங்களின் தரம் தாழ்ந்து போய் விட்டன. பாரம்பரிய மரபுகள் காற்றில் பறக்க விட்டப்பட்டு விட்டன. மரியாதைக்குரிய சபாநாயகருக்குக் கூட இப்போது

கல்கி இண்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ஈ மெயில் : kalki@md2.vsnl.net.in

காதில் விழுந்தவை!

மாறன் போட்ட மார்க்!

● "என்னிடம் எதற்காக பேட்டி காண்கிறீர்கள். நான் என்ன கட்சிக்காரனா?" என்று ஓர் அரசியல் பத்திரிகையின் மதுரை நிருபரிடம் பாய்ந்திருக்கிறார் மு.க. அழகிரி. மகள் திருமணத்தை நடத்துவதற்காக சமீபத்தில் சென்னை வந்திருந்த அழகிரிக்கு, 'தென் மாவட்ட கழகக் குடும்பத்தில் எந்தக் குழப்பமும் விளைவிக்க வேண்டாம்' என்று நல்லமுறையில் உப தேசம் செய்து அனுப்பினார் அப்பா என்கிறது தி.மு.க வட்டாரம்.

● தமிழகத்தில் தொழில் துறையில் மீண்டும் ஒரு பரபரப்பு தெரிகிறது. இப்போதைய தொழில் துறை செயலாளர் எம்.எஸ். ஸ்ரீனிவாசனுக்கும், முரசொலி மாறனுக்கும் நல்ல ஒரு ரேப்போ இருப்ப தால், மாறனின் ஆலோசனைகளுக்குச் செயல் வடி வம் கொடுக்கப்படுகிறதாம். கழக அமைச்சர்களின் செயல்பாடுகள் குறித்து மாறன் மார்க் போட்டு வைத் திருக்கிறாராம். பன்னிரண்டு பேர் பெயில் மார்க் வாங்கி இருக்கிறார்களாம்!

● ம.தி.மு.க பிரமுகர்கள் கொஞ்சம் படபடப் போடு இருக்கிறார்கள். காரணம், மத்தியில் அமைச் சரவை விரிவு படுத்தப்படப்போகும் சமயத்தில் வைகோ அமெரிக்க சுற்றுப்பயணத்தில் இருப்பது தான். அமைச்சரவையில் சேர வைகோ சிறிது தயங்கி னாலும் ம.தி.மு.க.வை சேர்ப்பதில் தீவிரமாக இருக் கிறாராம் பிரதமர். "இதென்ன பிரமாதம்; அமைச்ச ரவையில் சேர்வது பற்றி அமெரிக்காவிலிருந்து ஒப்பு தல் கொடுக்க முடியாதா என்ன? என்று கட்சிப் பிரமுகர் ஒருவரிடம் கேட்டதற்கு "எங்கள் கவலை அது இல்லை ஸார்... எங்கள் தோழர் பதவியேற்கும் போது பொதுச்செயலாளர் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடியாதே... அதுதான் எங்கள் கவலை" என்றார் அவர்.

● தமிழகம் முழுவதும் உள்ள நூல் நிலையங் களை நிர்வகிப்பது நூலக ஆணைக்குழுவின் பொறுப்பு. ஆனால் கடந்த பல வருடங்களாகவே ஆணைக்குழுவுக்கு தலைவர் நியமிக்கப்படவில்லை. பொதுவாகவே ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் தலைவர்களாக நியமிக்கப்படுவது வழக்கம். தலைவர் தலைமையில் குழு இல்லாததால், நூலகத் துறையின் உயர் அதிகாரி ஒருவர் சர்வாதிகாரமாகச் செயல்பட்டு வந்தார். இப்போது தலைவராக சா. கணேசன் நியமிக்கப்பட்டிருப்பதால் அதிகாரப்

உரிய மரியாதை தரப்படுவதில்லை."

"இதற்கு அடிப்படைக் காரணம் என்ன வென்று நீங்கள் கருதுகிறீர்கள்?"

"பொதுவாகவே, எல்லாவற்றிலும் சமீப காலமாக ஒரு சீர்கேடு ஏற்பட்டு வருவதை நாம் கவனிக்கலாம். அதுதான் பாராளு மன்றத்திலும் பிரதிபலிக்கிறது. இதற்கு, இன் னும் சில காரணங்களையும் சொல்லலாம். எவர் வேண்டுமானாலும் பாராளுமன்ற உறுப்பினர் ஆகலாம் என்று இன்று நிலவும் சூழ்நிலையும் அவற்றுள் ஒன்று. கிராமப்புறப் பின்னணி கொண்டவர்களால், பாராளு மன்ற விவாதங்களில் ஆக்கபூர்வமாய்ப் பங்கு கொள்ள முடியவில்லை என்பது இன் னொரு பாயிண்ட்."

"பாராளுமன்றத்தில் நடைபெறும் அமளிகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பது என்பது சாத்தியமே இல்லையா?"

"அது சபாநாயகர், பாராளுமன்ற விவ கார அமைச்சர், அவைத் தலைவர், பல்வேறு எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் என்று பலருடைய கையிலும் இருக்கிறது. இவர்கள் எல்லோரும் ஒருமித்த கருத்துக் கொண்டு, இதுபோன்ற அநாகரிகமான செயல்களுக்கு முடிவு கட்ட வேண்டும் என்ற உறுதியுடன் செயல் பட வேண்டும். அப்படிச் செய்தால், சில உறுப்பினர்கள் மீது கடுமையான நட வடிக்கை எடுக்க வேண்டியிருக்குமே என்று தயவு தாட்சண்யம் பார்த்துக் கொண் டிருக்கக் கூடாது.

சமீபத்திய பாராளுமன்றத் தொடரில், மகளிர் இட ஒதுக்கீட்டு மசோதா அறிமுகப் படுத்தபட்டபோது, என்ன நடந்தது? மசோதா சம்பந்தப்பட்ட பேப்பரைப் படித் துக் கொண்டிருந்தபோது, சபாநாயகரிட மிருந்து சில காகிதங்கள் பறிக்கப்பட்டன. பாராளுமன்ற விவகார அமைச்சர், மசோதா அறிமுக உரையைத் துவக்கியவுடன், அவர் கையிலிருந்த காகிதங்கள் பறிக்கப்பட்டன! இப்படிப்பட்ட தவறுகளைச் செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டால்தான், மற்றவர்களுக்கு அது ஒரு பாடமாக அமையும். ஆனால், அதைச் செய்யும் தைரியம் யாருக்கும் இல்லை என்பதுதான் துரதிருஷ்டம். இது விஷயமாக, நான் பொது ஜனத் தொடர்பு சாதனங் களையும் குறை சொல்லுவேன். பாராளு மன்றத்தில், பொருளாதாரம் பற்றிப் பேசி னால் உங்களுக்கெல்லாம் கவலை கிடை யாது; கண்டு கொள்ள மாட்டீர்கள். அதே நேரம் யாராவது, பரபரப்பாக ஏதாவது பேசி னால் தலைப்புச் செய்தியாக்கி விடுவீர்கள். அதனால், பப்ளிசிடி கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே பாராளுமன்றத்தில் நடந்து கொள்ளுகிறவர்கள் நிறைய பேர் உள்ளனர்."

"ஆறுமாத பி.ஜே.பி. அரசு பற்றிய உங்கள் கருத்து என்ன?"



பகிர்வுகளில் மோதல் துவங்கியிருக்கிறது. சா. கணேசன் தலைமை பொறுப்பேற்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்புதான் சுமார் ஏழு கோடி ரூபாய் மதிப்புள்ள புத்தகங்கள் 'பேச்சு வார்த்தை' நடத்தி வாங்கப்பட்டு விட்டதாம். பதவியேற்றதும் நூலகத் துறையின் செயல்பாடுகளுக்குப் புதிய வடிவம் கொடுக்க சா. கணேசன் சில யோசனைகளை முன் வைத்திருக்கிறார். ஆனால் அந்த உயர் அதிகாரியோ 'தலைவருக்கு ஒரு அதிகாரமும் கிடையாது' என்று சொல்கிறாராம். தமது எதேச்சாதிகாரச் செயல்கள் மூலம் பல ஊழியர்களையும் பழி வாங்கியிருக்கிறார் அந்த அதிகாரி. ஊழியர்களிடம் மிகவும் அன்-பாப்புலர் ஆகிவிட்டபடியால் சமீபத்தில் சா.க.வுக்கு ஊழியர்கள் நடத்திய பாராட்டு விழாவில் அந்த உயரதிகாரிக்கு அழைப்பு இல்லையாம். ''நான் இந்தத் துறையின் அமைச்சருக்கு வேண்டியவன்'' என்று அந்த அதிகாரி சொல்லிக் கொள்கிறாராம். ''அவர் யாரைச் சொல்கிறாரோ அந்த அமைச்சரின் நன்மதிப்பைப் பெற்றவர் சா.க என்பது அந்த அதிகாரிக்குத் தெரியாது போலும்!'' என்கிறார் ஒரு ஊழியர்.

● நெல்லையில் தி.மு.க. பேரணியைத் தலைவர்கள் பார்த்துக் கொண்டிருந்த மேடைக்குக் கீழே பத்திரிகையாளர்களும் செய்தி சேகரிப்பதற்காக நின்று கொண்டிருந்தார்கள். இரவு நேரம் ஆக ஆக பெரும்பான்மை நிருபர்கள் சென்றுவிட, விரல் விட்டு எண்ணக்கூடிய சிலரே இரவு இரண்டு மணி அளவில் இருந்தனர். அப்போது அமைச்சர் ஒருவர் வந்து அன்பாக ''பத்திரிகையாளர்களுக்குக் கொடுப்பதற்கு ஒரு ப்ரீஃப்கேஸ் இருக்கிறது. உங்களில் யாராவது பொறுப்பெடுத்துக் கொண்டு அவற்றை வாங்கி, உங்கள் உங்கள் ஆட்களுக்குக் கொடுத்து விடுங்கள்'' என் பத்திரிகையாளர்கள் மறுத்து விட்டனர். ''ப்ரீஃப்கேஸ் மட்டும்தான். உள்ளே பணம் ஏதும் கிடையாது!' என்று ஜோக் அடித்தார் அமைச்சர். ●

— தில்லப்பா

"செய்ய வேண்டியவைகளை விட்டு விட்டு, தேவையில்லாதவைகளைச் செய்வதில் கவனம் செலுத்துகிறார்கள்."

"மேற்கு வங்காளத்தில் இருபது வருடங்களாகக் கூட்டணி ஆட்சி தொடர்ந்து வெற்றிகரமாகச் செயல்படுகிறது. ஆனால், மத்திய அரசில், கூட்டணி ஆட்சி, தொடர்ந்து தோல்வியடைகிறதே! இதற்கு என்ன காரணம்?"

"மே. வங்காளத்தில், கூட்டணி ஆட்சியில் இடம் பெற்றிருப்பவை அனைத்துமே இடது சாரிக் கட்சிகள்தான். எனவே அவற்றால் ஒன்றுபட்டுச் செயல் பட முடிகிறது. ஆனால், மத்தியில் கூட்டணி ஆட்சியில் இடம் பெறும் கட்சிகள் அப்படியில்லையே!"

"நீங்கள் ஐக்கிய முன்னணி ஆட்சியின் போது மத்திய உள்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டபோது எப்படி உணர்ந்தீர்கள்?"

"அமைச்சர் பதவி ஏற்றதில் மகிழ்ச்சியில்லை."

"ஏன்?"

"எங்கள் கட்சி, மத்திய அமைச்சரவையில் சேரக் கூடாது; வெளியிலிருந்து ஆதரவு தரவேண்டும் என்பதே என் கருத்து."

"ஆனால் கட்சி அதற்கு மாறாக முடிவெடுத்து, உங்களை உள்துறை அமைச்சராக்கியது எப்படி?"

"கட்சி நிர்வாகக் குழுவில் வாக்கெடுப்பு நடந்தபோது மெஜாரிடி கருத்து, அமைச்சரவையில் பங்கேற்க வேண்டும் என்பதுதான். கட்சி முடிவுக்குக் கட்டுப்பட்டு, என் தனிப்பட்ட விருப்பத்துக்கு மாறாக நான் அமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன்."

"மத்திய உள்துறை அமைச்சர் என்ற முறையில் நீங்கள் செய்த முக்கியமான காரியம் எது?"

"பெரிசாய் எதையும் சாதிக்கப் போதிய அவகாசமில்லை. காஷ்மீரில் தேர்தல் நடத்தியது குறிப்பிடத்தக்க ஒன்று. மத்திய - மாநில உறவு மேம்பட உதவும் கவுன்சிலை செயல்படச் செய்ததையும் சொல்லலாம்."

"அரசியல் சாசனத்தின் 356வது பிரிவைப் பயன்படுத்துவது பற்றி அவ்வப்போது சர்ச்சை நடந்து கொண்டிருக்கிறதே?"

"நான் உள்துறை அமைச்சராக இருந்த போது, நடத்திய முதலமைச்சர்கள் கூட்டத்தில், 356வது சட்டப் பிரிவை, நீக்கிவிட வேண்டும் என எந்த மாநில முதல்வரும் குறிப்பிடவில்லை. அது தவறாகப் பயன்படுத்தப்படு வதைத் தடுக்கப் போதிய வழிவகைகள் செய்யப்பட வேண்டும் என்றுதான் விருப்பம் தெரிவித்தார்கள். என் கருத்தும் அதுதான்." ●

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

படம் : **ரவிசங்கரன்**



• குடும்பத்தோடு...

‘மாமியார் ’98’ விருது வழங்கும் விழா, சென்னையில் நடைபெற்றாலும், சென்னை மருமகள்கள் யாரும் போட்டியில் கலந்து கொள்ளவில்லை!

மாமியார்

திருமதி மதுராபாய் மகேஸ்வரி. முக்கால் செஞ்சுரி போட்ட மூதாட்டி. எழுதப் படிக்கத் தெரியாதவர். மகாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த ஜல்கான் என்ற ஊரைச் சேர்ந்தவர். அவருக்குச் சென்ற வாரம் சென்னையில் நடந்த ஒரு எளிய விழாவில் மிகப் பெரிய கௌரவம் வழங்கப்பட்டது. அது ‘மாமியார் ’98’ என்ற விருது. இந்த விருதுக்குத் தகுதியானவர் என்று திருமதி மதுராபாயை சிபாரிசு செய்தவர் யார் தெரியுமா? அவருடைய மருமகளான டாக்டர் அஞ்சலி மகேஸ்வரி.

எப்படி இந்த விருது இவருக்குக் கிடைத்தது? பெங்களூரைச் சேர்ந்த பெண் சாதனையாளர்களின் அமைப்பு, கடந்த மூன்று வருடங்களாக ‘சிறந்த மாமியார்’ விருதினை வழங்கி வருகிறது. இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் ‘மாமியார் ’98’ விருதுக்குத் தகுதியானவராக உங்கள் மாமியாரைக் கருதுகிறீர்களா? அப்படியெனில், எந்தெந்தக் காரணங்களால் அப்படிக் கருதுகிறீர்கள் என்று எங்களுக்கு எழுதி அனுப்புங்கள்’ என்ற அறிவிப்பை பிரபலமான தினசரிகளில் பெண் சாதனையாளர்கள் அமைப்பு வெளியிட்டது. நாடெங்கிலுமிருந்து நூற்றுக்கணக்கான மருமகள்கள் தங்களின் மாமியார் பற்றிய சிறப்புகளை எழுதி அனுப்பியிருந்தார்கள். அவர்களில் விருதுக்குரியவராய் நடுவர் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு, சென்னையில் கௌரவிக்கப்பட்டவர் திருமதி மதுராபாய் மகேஸ்வரி.

“என் மாமியாருக்குச் சிறு வயதிலேயே திருமணம் ஆகி விட்டது. என் மாமனார் திருமணமானவுடன், தம் குடும்ப உதவிகளை மறுத்து, இளம் மனைவியுடன் மலைப்பிரதேசம் ஒன்றில் வாழ்க்கையை ஆரம்பித்தார். அங்கே ஏகப்பட்ட இடர்ப்பாடுகள். பொருளாதார வசதி இல்லாத சூழ்நிலை. அந்த நிலையிலும், கஷ்டப்பட்டு, உழைத்துத் தம் இரண்டு மகன்கள், ஒரு மகள் ஆகிய மூவரையும் டாக்டராக்கினார்கள். என் மாமியாரின் பரிவும், பாசமும் அந்தப் பகுதி முழுக்கப் பிரபலம்.

“என் கணவர் டாக்டர் நந்தன் மகேஸ்

வரிக்கு வரன் தேட ஆரம்பித்தபோது, தமது மருமகள் ஒரு டாக்டராகத்தான் இருக்க வேண்டும் என்று கண்டிப்பாக இருந்தார். நான் முதல் பையனைப் பெற்றெடுத்த சில மாதங்களிலேயே, எம்.டி. படிப்புக்காக புனே செல்ல வேண்டியதாகிவிட்டது. அப்போது என் குழந்தையை முழுக்க முழுக்க பார்த்துக் கொண்டவர் அவர்தான். என் இரண்டாவது குழந்தையை வளர்த்ததும் அவர்தான். ரோட்டரி எக்ஸ்சேஞ்ச் புரோகிராமின் கீழ் நான் அமெரிக்கா செல்லத் தேர்ந்தெடுக்கப் பட்டபோது, 'நீ கிளம்பிப் போ. குழந்தை களைப் பற்றி கவலையே படாதே!' என்று முதன் முதலில் வாழ்த்தியவர் அவர்தாம்!

"கட்டுப் பெட்டித்தனத்தை, மிக அவசிய மான சமயங்களில் கைவிடத் தயாராகிற அவரது முற்போக்குச் சிந்தனை எனக்கு பிரமிப்பூட்டும். ஆண்டுதோறும் குறிப்பிட்ட தொரு நாளில் ஒரு சில பிராமணர்களுக்கு, சாப்பாடு போடும் வழக்கத்துக்குப் பதிலாக, ஒரு பள்ளிக்கூடத்தில், நன்றாகப் படிக்கிற மாணவனுக்குப் பரிசு தரலாம் என்றபோது மகிழ்ச்சியுடன் அவர் சம்மதித்ததை மறக்கவே முடியாது" என்கிறார், விருது பெற்ற மாமி யாரின் மருமகளான டாக்டர் அஞ்சலி.

"உங்கள் இரண்டு பேருக்கும் சண்டையே வந்தது இல்லையா?"

"85-ல் கல்யாணம். அதன்பின் இந்தப் பதி னாலு வருடங்களில், பல விஷயங்களில் கருத்து வேறுபாடுகள் வந்திருக்கின்றன. ஆனால் மனக் கசப்பு ஏற்படுத்தும் சண்டைகளாக அவை மாறியதில்லை. அவர் ரொம்ப பொறுமைசாலி. நான் சட்டென்று கோபப்படுகிறவள். நான் கோபப்பட்டுக் கத்தினால் கூட, அவர் பொறு மையாய் இருந்து விட்டு, மறுநாள் என்னை அழைத்து நான் கத்தியது அவசியமில்லாதது என்று சுட்டிக் காட்டுவார். டாக்டர் என்பதால், படுபிசியான பிராக்டிஸ். ஆனாலும் தினமும் கொஞ்ச நேரம் அவருடைய அறைக்குப் போய் அன்போடு சில நிமிடங்கள் பேசிக் கொண் டிருக்க நான் தவறியதில்லை. நான் அவர் மீது கொண்ட மரியாதையும், அவர் என் மீது கொண்ட பாசமும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருவதை நாங்கள் இரண்டு பேருமே பரிபூரணமாய் உணர்கிறோம்!"

"உங்களுக்கு இந்த விருது கிடைக்கும் என்று எதிர்பார்த்தீர்களா?" என்று மாமி யாரிடம் கேட்டபோது, மருமகள் பதில் சொன்னார்: "விருது கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை; ஆனால், இவர் அந்த விருதுக்கு முற்றிலும் தகுதியானவர் என்று மனப் பூர்வமாக நம்பினேன்!"





'மாமியார் '98' விருது வழங் கும் விழா, சென்னையில் நடை பெற்றாலும், சென்னை மரு மகள்கள் யாரும் தங்கள் மாமியாரை இந்த விரு துக்குச் சிபாரிசு செய்ய வில்லை! தமிழ்ப் பத்திரிகைகளில் வெளிவரும். 'மாமி யார் – மருமகள்' லடாய் ஜோக்ஸ் எல்லாம் நிஜம் தான் போலும்!

— பாரதி மௌலி

அட்டை வண்ணப்படமும் படங்களும்: ஸ்ரீஹரி

சுகாசினியை

• பிங்கி விரானி





அருணாவுக்கு இப்போது வயது ஐம்பது. இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு, கற்பழிப்புக் கொடுமைக்கு இலக்காகி, அந்த அதிர்ச்சியிலேயே இன்றுவரை கோமா நிலையில் உயிரை மட்டும் கையில் பிடித்துக் கொண்டிருக்கும் பரிதாபத்துக்குரிய ஜீவன். நெஞ்சை உருக்கும் அவருடைய கண்ணீர்க் கதையை முழுமையாக ஆராய்ச்சி செய்து, புத்தகமாய் எழுதியிருக்கிறார் மும்பையைச் சேர்ந்த பிங்கி விரானி. அண்மையில் சென்னை வந்திருந்தார் பிங்கி. லேண்ட் மார்க் புத்தக நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு பிரத்யேக நிகழ்ச்சியில், அவர் கலந்து கொண்டார். அப்போது, 'அருணாவின் கதை' புத்தகத்தின் சில பகுதிகளைப் படித்துக் காட்டினார் நடிகை சுகாசினி.

அருணாவின் கதையைப் பற்றியும், அதை எழுதுவதற்கு பிங்கி எடுத்துக் கொண்ட சிரமமான முயற்சிகள் பற்றியும் அருணாவின் கதையின் பகுதிகளைப் படித்த தம் அனுபவம் பற்றியும் சுகாசினி பேசுகிறார்:

அருணா சென்பக், மும்பையின் பிரபலமான கிங் எட்வர்ட் நினைவு மருத்துவமனையில் நர்ஸ். வயது 25. கர்நாடக மாநிலம் ஹல்திபூர் என்ற ஊரில் சாதாரணக் குடும்பத்தில் பிறந்தவர். ஆனால், ஆசைகள் நிறைய உண்டு. நன்றாகப் படிக்க வேண்டும். நல்ல வேலைக்குப் போக வேண்டும். கடுமையாய் உழைக்க வேண்டும். மற்றவர்களுக்கு உதவ வேண்டும். வாழ்க்கையில் சொந்தக் காலில் நிற்க வேண்டும். நம்மையும் நாலுபேர் 'அட!' என்று பார்க்கும்படி, வாழ்க்கையில் செட்டில் ஆக வேண்டும். இப்படிக் கனவுகளைத் தேக்கிக் கொண்டு, அருணா படித்தாள். நர்ஸ் பயிற்சி பெற்றாள். மும்பையில் பிரபல ஆஸ்பத்திரியில் நர்ஸ் ஆக வேலை கிடைத்தது.

ஆஸ்பத்திரியில் நல்ல பெயர் அருணாவுக்கு. அந்த ஆஸ்பத்திரியில் வேலை பார்த்த ஒருவரை விரும்பினாள். அவரும் அப்படியே. இருவரும் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தார்கள். எதிர்பாராதவிதமாய், அருணாவை, பொது நோயாளிகள் பிரிவிலிருந்து, மருத்துவமனையின் கீழ்த்தளத்தில் உள்ள நாய்கள் மருத்துவப் பரிசோதனைப் பிரிவுக்கு மாற்றினார்கள். நாய்களை மருத்துவப் பரிசோதனை என்கிற பெயரில் சித்திரவதை செய்வது, அருணாவுக்குப் பிடிக்கவில்லை. அங்கே பணிபுரிந்த கடை நிலை ஊழியரான சோகன்லால், நாய்களுக்குத் தர வேண்டிய உணவில் தில்லுமுல்லு செய்வதை அருணா

டிஸ்டர்ப் செய்த அருணாவின் கதை!

கண்டுபிடித்து எச்சரிக்கவே, அவனுக்கு, அருணா மீது கடுப்பு! அருணாவின் புகாரின்பேரில், அவனுக்கு வேலையே போய் விடும் சூழ்நிலை!

27 நவம்பர், 1973. பின் மாலைப் பொழுது. பணி நேரம் முடிந்து, உடை மாற்றிக் கொண்டு புறப்பட தனியறைக்கு வந்தார் அருணா. அருணாவைப் பழிவாங்குவதற்குத் தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த சோகன்லால் அருணாவைப் பின் தொடர்ந்து அறைக்குள் வந்து, கதவையடைத்தான். அதிர்ச்சியடைந்த அருணாவை, நாய்ச் சங்கிலியால் கட்டிப் போட்டு விட்டு, பலாத்காரத்தில் இறங்கினான்.

தன் கொடூரச் செயலை முடித்த பின், அருணா மயக்க நிலையில் அங்கேயே கிடக்க, சப்தமில்லாமல் வெளியேறினான்...

... இதோ இருபத்தைந்து வருடங்கள் ஓடி விட்டன. இன்னும், அதே மருத்துவமனையில், படுத்த படுக்கையாய் கோமாவில் இருக்கிறார் அருணா. அவருடைய உறவினர்கள் யாருமே அருணாவை வைத்துப் பராமரிக்கத் தயாராக இல்லை. இடையில் ஆதரவற்றோர் இல்லத்துக்கு அனுப்பப் பட்டாலும், அடுத்த சில தினங்களிலேயே அருணாவை ஆஸ்பத்திரிக்கே திரும்ப அனுப்பி விட்டார்கள். உணர்வற்றுக் கிடக்கும் அருணாவின் பெண்மைக்குரிய பிரத்யேக மற்றும் இயற்கை உபாதைகள் முதற் கொண்டு அனைத்து விஷயங்களிலும், அந்த ஆஸ்பத்திரியின் சக நர்ஸ்கள் காட்டும் பரிவும், ஈடுபாடும் வணக்கத்துக்குரியவை. அவர்கள் மட்டும் இல்லாமல் போயிருந்தால், அருணா கதை என்றோ முடிந்திருக்கும்!

ஒரே மூச்சில் அருணாவின் கதைச் சுருக்கத்தைச் சொல்லி முடித்த சுகாசினி, "இந்தப் புத்தகத்தைப் படிக்கிறபோது, எனக்கு முதலில் வருத்தம், ஆதங்கம் எல்லாம் ஒருபுறம் ஏற்பட்டாலும், கோபமும் வந்தது. குறிப்பாக, ஒரு அப்பாவிப் பெண்ணை, இந்த நிலைக்கு ஆளாக்கிய பாதகன் பேரில் போலீசில் புகார் கொடுப்பதற்குக்கூட யாரும் முன்வரவில்லை. போலீஸ் இன்ஸ்பெக்டர் கேஸை பதிவு செய்யத் தாமாக முன் வந்தார். பலாத்காரம் செய்தவன், அருணாவின் தங்கச் செயின், பர்ஸ் ஆகியவற்றையும் எடுத்துக் கொண்டு போய் விட்டதால், அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்தார். மருத்துவ ரீதியாய் கற்பழித்ததை நிரூபிக்க முடியாத சூழ்நிலையில் அவரால் அதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியவில்லையாம். வழக்கில், பாதகன் சோகன்லாலுக்கு ஏழாண்டு சிறை தண்டனை கிடைத்தது. ஜெயிலிருந்து வெளியே வந்தவன், சௌகரியமாய் வாழ்கிறான்' என்று படித்த போது, சே! என்ன ஒரு சமூகம் இது? என்று தோன்றியது.

"இந்தப் புத்தகத்தை எழுதிய பிங்கி விரானி துடிப்பான பெண்மணி. எதேச்சையாகத்தான் அருணாவின் சோகக் கதை அவருக்குத் தெரிய வந்துள்ளது. அதைப்பற்றி சண்டே டைம்ஸ் இதழில் அவர் எழுதிய கட்டுரைக்கு வாசகர்களிடமிருந்து ஆத்மார்த்தமான வரவேற்பு. அதன்பின் பெங்குயின் நிறுவனம் பிங்கியை அணுக, அவர் அருணாவின் கதையை முழுமையாய்த் தெரிந்து கொள்ளும் பணியை ஆரம்பித்திருக்கிறார்.

"ஏறத்தாழ ஓர் ஆண்டு காலம் சளைக்காமல் உழைத்திருக்கிறார் பிங்கி. அருணாவின் சொந்த ஊருக்குப் போய் அவருடைய இளமைக் காலம் பற்றித் தெரிந்து கொண்டார். மும்பையில் அவர் வசித்த பகுதியில் அக்கம் பக்கத்தினர், ஆஸ்பத்திரி நர்ஸ்கள், டாக்டர்கள் என்று பலரையும் பார்த்துப் பேசியிருக்கிறார். பெரும் பாலானவர்கள் இவருக்கு உதவ முன்வரவில்லை என்றாலும் மும்பை போலீஸ் இந்த விஷயத்தில் அளித்த அபார ஒத்துழைப்பை நன்றியுடன் நினைவு கூர்ந்தார் பிங்கி. அருணாவைக் காதலித்த டாக்டரைத் தேடிச் சென்று கண்டுபிடித்தது ஒரு தனிக் கதை. அவர் அருணா விஷயம் பற்றிப் பேச மறுத்தாலும், அவரை விடாமுயற்சி மூலம் பேச வைத்திருக்கிறார். பிங்கி விரானி தாம் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பற்றி விவரித்தபோது, நான் பிரமித்துப் போனேன். அருணாவின் கதை என் மனதை ரொம்பவே டிஸ்டர்ப் செய்து விட்டது. நிச்சயம் இந்தப் புத்தகத்துக்கு விருது கிடைக்கும்!" என்றார் சுகாசினி.

சந்திப்பு: **மௌலி**

வசீகரிக்கும் வண்ணங்கள்!



லண்டனில் வசிக்கிற அறிவானந்தம் என்கிற தமிழர் சமீபத்தில் சென்னைக்கு வந்திருந்தார். மெரீனா, சினிமா, உடுப்பி ஓட்டல், கபாலி கோயில் என்று பார்த்த ஞாபகங்களைப் புதுப்பித்துக் கொண்டே வந்தவர், **மயிலாப்பூர் வடக்கு மாடவீதியில்** நடந்து கொண்டிருந்த போது, கண்ணில் பட்டிருக்கிறது அந்தப் புடைவைக் கடை. எடுப்பான தோற்றமும் துடிப்பான இயக்கமும் கவர்ந்துவிட, மனதுக்குள் ஒரு பட்ஜெட் வைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தார்.

என்ன ஸ்பெஷல்? பட்டுப் புடைவைகள். இங்கே காஞ்சிபுரம் அங்கே தர்மாவரம். கொஞ்சம் பெங்களூர். மேலும் பனாரஸ். எங்கும் கிடைக்கிற வகைகள்தாம் என்றாலும் இங்கே ஏன் இத்தனை கூட்டம்?

கேள்விக்கு விடை அவருக்கு இரண்டு விதத்தில் கிடைத்திருக்கிறது.

வண்ணங்களின் அணிவகுப்பில் வந்து குவிந்த ரகங்கள். இதுவா? அதுவா? ஐயோ, அங்கே இன்னொன்று கிறங்க அடிக்கிறதே?



• சந்திரன்

தேர்ந்தெடுக்கத் திணறிப் போனவர் விலையைப் பார்த்ததும் மயங்கியே போனார்!

பிரபல ஜவுளிக் கடைகளில் உள்ள விலைகளுக்கும் இங்கே அவர் பார்த்த விலைக்கும் ஏராள வித்தியாசம். எப்படி? **எப்படி இத்தனை குறைந்த விலை கட்டுபடி ஆகிறது?** போதாக் குறைக்குப் பண்டிகைக் காலங்களில் 20% தள்ளுபடி வேறு தருகிறார்களே?

தம் தயக்கத்தை **B.M. SILK Sarees**-ன் நிர்வாகப் பங்குதாரர் சந்திரனிடம் கேட்ட போது சிரிப்பு வந்திருக்கிறது சந்திரனுக்கு.

"இது ஏமாற்று வேலை அல்ல. யதார்த்தம். ஒரு புடைவையின் அடக்க விலைக்கு மேல் கணிசமாக லாபம் வைத்து விற்பதென்பது

எல்லோருமே செய்வதுதான். நான் என் லாபத்தைக் குறைத்துக் கொள்கிறேன். குறைவான விலை வைப்பதன் மூலம் என் லாபம் குறைந்தாலும் வாடிக்கையாளர்கள் நிறைய வருவதால் அதற்கு இது காம்பன்ஸேட் ஆகி விடுகிறது!'' என்கிறார் சந்திரன்.

''இது என் வாடிக்கையாளர்கள் அனைவரையும் என் நிறுவனத்தின் நண்பர்களாக்கிக் கொள்ள நினைத்ததால்தான்!'' என்கிறார் சிரித்தபடி.

இப்படி நண்பர்களாகி விடும் வாடிக்கையாளர்கள், இங்கிருந்து நிறைய புடைவைகள் மொத்தமாக வாங்கிச் சென்று சிறு அளவில் வியாபாரம் செய்வதும் உண்டாம்.

பிரமாதமான டீவி விளம்பரங்களில் தமக்கு நம்பிக்கை இல்லை என்று சொன்னார், சந்திரன்.

ஏனென்று கேட்டபோது, சொன்ன பதில் வியப்பாக இருந்தது.

''என் புடைவைகளுக்கு என் வாடிக்கையாளர்களே இலவச



விளம்பரதாரர்களாக இருக்கிறார்களே! இங்கு வருகிற ஒவ்வொரு புது கஸ்டமரும் வேறொருவரின் பெயரைச் சொல்லி அவர் அனுப்பினார் என்றே சொல்கிறார்கள்!

''இன்னொன்று தெரியுமா? மக்கள் மிகா புத்திசாலிகள். பத்துக் கடை பார்த்து விட்டு இங்கே வந்தால் ஒரு புடைவையைப் பார்த்ததுமே தோராயமான விலை அவர்களுக்குத் தெரிந்திருக்கும்! அவர்களின் கணிப்பை ஒருபோதும் நான் பொய்யாக்குவதில்லை என்பது தவிர, **புதிய புதிய டிஸைன்களைக் கொண்டு வந்து குவித்துக் கொண்டே இருப்பதன் மூலம் அவர்களை** மேலும் உற்சாகப்படுத்திக் கொண்டே இருப்பேன்'' என்கிறார்.

பி.எம். சில்க் சாரீஸில் புடைவை வாங்க வந்திருந்த ஒரு பெண்மணி சொன்னார் : ''பல கடைகளில் பத்தாயிரம், இருபதாயிரம் விலைக்குப் புடைவைகள் விற்கிறார்கள். ஆனால், மத்தியதர மக்கள் வாங்கக்கூடிய சக்திக்குட்பட்ட விலையில் அதே பத்தாயிரம், இருபதாயிரம் விலைகொண்ட ரகங்களின் டிஸைன்கள் உள்ள புடைவைகள் இங்கே கிடைக்கின்றன. **இது வேறெங்கும் இல்லாத விசேஷம்!''**

பி.எம். சில்க் சாரீஸுக்கென்று காஞ்சிபுரத்தில் பிரத்தியேகமான நெசவாளர் படையே இருக்கிறது! அவ்வப்போது மாறும் ஃபாஷனுக்கேற்ப, உடனுக்குடன் அங்கே இரவு பகலாகப் புடைவைகள் நெய்யப்பட்டு, இங்கு வந்து விடுகின்றனவாம்.

''அதைவிட, அவை வந்த சூட்டில் விற்றுப் போய் விடுகின்றன என்பது தான் விசேஷம்'' என்கிறார் சந்திரன்.

''ஒருமுறை **B.M. Silk Sarees**-க்கு வருகிற வாடிக்கையாளர் மறுமுறை வேறு இடம் தேடிப் போக மாட்டார் என்பது என் அனுபவ உண்மை. காரணம், இங்கு வருபவர்கள்தாம் உடனுக்குடன் நண்பர்களாகி விடுகிறார்களே!'' என்று சிரிக்கிறார்.



தமது ஆயிரக்கணக்கான கஸ்டமர்களுக்கு வருஷம் தவறாமல் தீபாவளி வாழ்த்து அனுப்பும் ஒரு வித்தியாசமான அணுகுமுறையே **B.M. Silk Sarees**-ன் வியாபார ரீதியிலான வெற்றிக்கு மிகப் பெரிய சான்றாகத் தெரிகிறது.

-ADVT.

அந்தக் கட்டடத்தின் உட்புறம் பார்த்தபோது பகிரென்றது. சமையல் அறை இதுதான் என்று கும்மிருட்டு பகுதியைக் காண்பித்தார் நண்பர். ஆங்காங்கே பெருச்சாளிகள் சுரங்கம் தோண்டி வைத்திருந்தன. 'டாய்லெட்' என்று சொல்லப்பட்ட அறை மூடப்பட்டிருந்தது. "திறக்காதீர்கள்!" என்று பதறினார் நண்பர். மின் ஒயர்கள் ஆங்காங்கே தலைவிரி கோலமாக இருக்கின்றன. குடி தண்ணீர் வசதி கிடையாது. கட்டடச் சுவர்களில் உள்ள விரிசல்கள் வரும் மழைக் காலத்தை அது தாங்காது என்று உறுதியாகச் சொன்னது.



"ஸார் மழை பெஞ்சா, வெளியே இருப்பதை விட உள்ளேதான் அதிகமாகத் தண்ணீர் தேங்கி இருக்கும்!" என்றனர்.

இது எந்தக் கட்டடம் தெரியுமா? தமிழ்நாடு அரசின் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படும் குழந்தைகள் காப்பகம்தான்!

சென்னை - ஷெனாய் நகரில் திரு.வி.க பூங்கா அருகில் கெஜலட்சுமி காலனியில் நகர துணை மேயர் வீட்டருகில் இருக்கிறது. இந்தக் குழந்தைகள் காப்பகம். காலை முதல் மாலை வரை முப்பது குழந்தைகள் இங்கே பராமரிக்கப் படுகிறார்கள்.

முற்றிலும், பாதுகாப்பற்ற, சுகாதாரமற்ற இந்த கட்டடத்தில் குழந்தைகள் பராமரிக்கப் படுவதைப் பார்த்தால் 'குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்' என்பதற்குப் பதில், 'தளர்ச்சித் திட்டம்' என்றால்தான் சரியாக இருக்கும்.

"கரண்ட் பில் கட்டாததால், ஃப்யூஸை எடுத்துக்கிட்டுப் போயிட்டாங்க. இந்த இருட்டிலே என்ன சமைக்கறாங்கன்னு தெரியலை. பல குழந்தைகளுக்கு அவ்வப்போது வாந்தி, பேதி என்று வேறு வருகிறது!" என்றார் பக்கத்து வீட்டில் உள்ள ஒரு பெண். டாய்லட்டை உபயோகப்படுத்த முடியாத அளவில் இருப்பதால் காப்பகத்தைச் சுற்றி, திறந்தவெளி கழிப்பறையாக இருக்கிறது.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் (I.C.D.S) கீழ் தமிழகமெங்கும் அங்கன்வாடிகள் என்று சொல்லக்கூடிய குழந்தைகள் காப்பகங்கள் இருக்கின்றன. ஒரு சமுதாய ஊழியர், இரண்டு ஆயாக்கள் பொறுப்பில் இருக்கிறார்கள் குழந்தைகள். நகர்ப் புறங்களில் வீட்டு வேலை, மற்றும் கட்டட வேலைக்குச்

குழந்தைகள் வளர்ச்சித் திட்டமா? தளர்ச்சித் திட்டமா?



• கட்டடத்தின் வெளிப்புறம்....



• உட்புறம்....

செல்லும் பெண்கள் ஆறு மாதத்திலிருந்து ஆறு வயது வரை உள்ள தங்கள் குழந்தைகளை, காலையிலிருந்து மாலை வரை இந்தக் காப்பகங்களில் விட்டுச் செல்லலாம். கிராமப் புறங்களில் வயல் வேலைக்குச் செல்லும் பெண்களும் இப்படி விட்டுச் செல்லலாம். இரண்டு வயது வரை உள்ள குழந்தைகளுக்குச் சத்து மாவும் மற்ற குழந்தைகளுக்குச் சத்துணவும் கொடுக்கப்படுகிறது. ஊழியர்களுக்கான சம்பளம், சத்து மாவுக்கு ஆகும் செலவு ஆகியவை மத்திய அரசு நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறது.

கெஜலட்சுமி காலனி குழந்தைகள் காப்பகத்தின் நிலையை சமூக நலத் துறையின் கவனத்துக்குக் கொண்டு வருவதற்காக அந்தத் துறையின் இயக்குனர் அலுவலகத்துக்குச் சென்றோம். தட்டிக் கழிக்கப் பார்த்த மூத்த அதிகாரி ஒருவரை மடக்கினோம். "நீங்கள் சொல்லுகிற அந்த காப்பகத்தைச் சென்று பார்த்து தக்க நடவடிக்கை எடுக்கிறோம். நகர்ப்புறங்களில் காப்பகத்துக்கு இடம் கிடைப்பது சிரமமாக இருக்கிறது. பெரும்பாலும் மாநகராட்சிக் கட்டடங்கள்தான். அவையும் கூடிய வரை நன்றாகவே இருக்கின்றன" என்றார் அவர்.

இந்த காப்பகங்களைக் கண்காணிக்க ஏகப்பட்ட அலுவலர்கள் இருக்கின்றனர். கெஜலட்சுமி காலனி காப்பகம் இருக்கும் கட்டடம் யாருக்குச் சொந்தம் என்பது சம்பந்தப்பட்ட திட்ட அலுவலருக்கே தெரியவில்லை. மாநகராட்சி 'எங்களுடையது இல்லை' என்கிறது!

இது தவிர அங்கு பணிபுரியும் ஆயாக்களிடம் எதற்காக என்று தெரிவிக்காமலேயே அவர்களுடைய சம்பளத்தில் மாதம் 20 ரூபாய் பிடிக்கப் படுகிறதாம். "எங்களுக்கு 400 ரூபாய்தான் சம்பளம். அதிலும் இது போன்ற பிடித்தம்!" என்றார் ஒரு ஆயா.

திட்டத்தின் பெயருக்கேற்ப காப்பகத்தை நிர்வகிக்க சமூகநலத் துறை முயல வேண்டும். குறிப்பாக அந்தக் கட்டடத்தை (இது போல் உள்ள மற்றவற்றையும்தான்) ரிப்பேர் செய்வது உடனடித் தேவை! இல்லையேல் இங்குள்ள முப்பது குழந்தைகளின் உயிருக்கு மழைக் காலத்தில் உத்தரவாதம் கிடையாது. ●

— ஸ்ரீநிவாசன்

படங்கள்: வெங்கடேஷ்



'சில நாட்களில் நான் நானாகவே இல்லை...

"ஆனால் ஷேப்பர்ஸ் எப்படி வித்யாசமானது?"

விஞ்ஞான பூர்வமாக தயார் செய்யப்பட்ட சேனிடரி நேப்கின் ஷேப்பர்ஸ் இப்பொழுது எனக்கு முழு சௌகரியமும், சுதந்திரமும் கூடுதல் பாதுகாப்பும் கொடுக்கிறது.

"ஆனால் ஷேப்பர்ஸ் நீண்ட சதுரமாக இல்லையே?"



ஷேப்பர்ஸ் கச்சிதமாக பொருந்தும்படி வடிவமைக்கப்பட்டிருக்கிறது. பின்புறம் ப்ளாஸ்டிக்கினால் சீல் செய்யப்பட்டிருப்பதால், **ஓரம் கறை படிவதில்லை, உப்பல் இல்லை.**

"ஆனால் தடிமனான நீண்ட சேனிடரி நேப்கின்தானே நல்ல உறிஞ்சும் தன்மையுள்ளது?"



இல்லை. இனி கிடையாது. ஷேப்பர்ஸ் மெல்லியது கச்சித வடிவுடையது. ஏனெனில் அதன் **ஸ்பெஷலாக கம்ப்ரெஸ் செய்யப்பட்ட** உள்ளிழுக்கும் பொருள், **அதிகமாக உறிஞ்சிவிடுகிறது.** அதனால் தடிமனான நேப்கின் கொடுக்கவே முடியாத சுதந்திரம் உங்களுக்குக் கிடைக்கிறது.

ஒரு இலவச சாம்பிள் பேக்கிற்காக இந்த கூப்பனை நம்பிக்கையோடு குமாரி ஜானகிக்கு அனுப்பவும்.

பெயர்: ______________ வயது: ________ தொழில்: ______________

விலாசம்: ______________ பின்கோடு: ________ போன் நம்.: ______________

குஃபிக் ஹெல்த்கேர் லிமிடெட், சுபாஷ் ரோடு-A, வில்லே பார்லே மும்பை 400057.

குஃபிக் லிமிடெட்டின் ஒரு தரமான தயாரிப்பு


அதன்
தனித்தன்மையான
அப்சார்ப் ப்ரொடக்ஷன் டெக்னாலஜி
மூலமாக ஷேப்பர்ஸ் மட்டுமே எனக்கு
நம்பிக்கையை அது அதிகமாகத்
தேவைப்படும் பொழுது
அளிக்கிறது.
"எல்லா சேனிடரி நேப்கின்களும் நடுவில் திரண்டு விடுவதில்லையா? சமமாகப் பரப்பாதா?"
ஷேப்பர்ஸ் அப்படி இல்லை அதன் தனித்தன்மையான அப்சார்ப் ப்ரொடக்ஷன் டெக்னாலஜி சேனல் ஈரத்தை கீழே இழுத்து பேடின் முழு அளவிலும் சமமாகப் பரப்பி மேற்பரப்பை சௌகர்யமான உலர்வாக்கி நீண்ட நேரம் உபயோகிக்க உதவுகிறது.
வாருங்கள், நம்பிக்கை பெறுங்கள் - அது உங்களுக்கு அதிகமாகத் தேவைப்படும்பொழுது ஷேப்பர்ஸ் வாங்குங்கள்.
Shapers
Shapers
AB-SORB
நம்பிக்கையின் வடிவம்.
ரூ. 27/- மட்டுமே (10 கொண்ட ஒரு பேக்)

வந்தேமாதரம் — 2

பரத் பாலாவைத் தெரியாமல் இருக்க முடியாது. டெலிவிஷனில் 'வந்தேமாதரம்' என்று ஏகப்பட்ட ஒரு நிமிடப் படங்கள் காட்டப்படுகின்றனவே அவற்றை எடுத்தவர்! சென்ற வருடம் ஏ.ஆர். ரஹ்மான் இசையில் 'வந்தேமாதரம்' இசை ஆல்பத்தை உருவாக்கியவர்! அவர்தான், இப்போது, 'வந்தேமாதரம் -2', ஆல்பம் உருவாக்கியுள்ளார். இதன் ஸ்பெஷாலிடி, என்ன? 1952ல் ஹேமந்த் குமார் இசையில் 'ஆனந்த மடம்' என்ற படத்துக்காக லதா மங்கேஷ்கர் 'வந்தேமாதரம்' பாடலைப் பாடினார். மறுபடி இப்போது அதே பாடலை இந்த ஆல்பத்துக்காகப் பாடியிருக்கிறார். தமிழ்ப் பதிப்பில், உபரியாய் நித்யஸ்ரீயும் வந்தேமாதரம் பாடியுள்ளார்.

மும்பைக்கும், சென்னைக்குமிடையே இறக்கை கட்டிக் கொண்டு பறந்து கொண்டிருக்கும் பரத் பாலா மற்றும் அவரது மறுபாதி கனிகா மயர் இருவரையும் சென்னையில் அவர்கள் அலுவலகத்தில் சந்தித்தபோது:

"வந்தேமாதரம் I, II இவற்றுக்கிடையே என்ன வித்தியாசம்?"

"சுதந்தரப் பொன் விழா தருணத்தில், அதற்குப் பொருத்தமாக முதல் ஆல்பத்தை உருவாக்கினோம். என் (பரத் பாலா) பள்ளித் தோழரான ரஹ்மான் இசையில் வெளியான அது, மிகவும் பிரபலமடைந்தது. இது, அதன் தொடர்ச்சி எனலாம். இதில் இடம் பெற்றுள்ள ஆறு பாடல்களுமே வந்தேமாதரம்தான். ஆனால் ஆறு மாறுபட்ட பின்னணி கொண்டவர்கள் பாடியிருக்கிறார்கள். லதா மங்கேஷ்கர், கௌசிகி முகர்ஜி, சுபா முட்கல், சாதிக் கான், நித்யஸ்ரீ என்று ஆறு பேருக்கும் ஆறு இசை வடிவங்களில் ஹிந்துஸ்தானி கிளாசிகல், ராஜஸ்தானிய கிராமியம், கர்நாடக சங்கீதம்... இப்படி....

"லதா மங்கேஷ்கரைப் பாட வைத்த அனுபவம் பற்றி?"

"அவரைப் பாடச் செய்யும் நோக்கத்துடன் அணுகியபோது, 'உங்களது வந்தே மாதரம் முதல் ஆல்பமும், ஒரு நிமிடத் துண்டுப் படங்களும் என்னை மிகவும் நெகிழ வைத்து விட்டன. ஒவ்வொரு முறையும் அவை டி.வியில் வரும்போது நான் ஓடோடி வந்து, கண்டு ரசிப்பேன். எனக்கு வந்தேமாதரம் ஆல்பத்தில் பாட வாய்ப்புக் கிடைத்துள்ளது. பெரும் பாக்கியம்,' என்று சந்தோஷப்பட்டார்.

• படப்பிடிப்பில் லதா மங்கேஷ்கருடன்...



ஏ.ஆர்.ரஹ்மான் ஏன் இல்லை?

இசையமைப்பாளருக்கு முழு சுதந்தரம் கொடுத்து, பத்து நாட்களை ஒத்திகைக்கென ஒதுக்கி, அவர் பாடிக் கொடுத்தது சம்திங் கிரேட்! வீடியோ படப்பிடிப்பின் போது முழு ஒத்துழைப்புத் தந்ததை மறக்கவே



முடியாது! ஷூட்டிங், எடிட்டிங் எல்லாம் முடிந்து அவருக்குப் போட்டுக் காட்டிய போது, மனம் நெகிழ்ந்து போய், ஆனந்தக் கண்ணீர் வடித்தார்!"

"படப்பிடிப்பு அனுபவம் எப்படி இருந்தது?"

"சென்ற வருடம், முதல் ஆல்பத்துக்காக, ஷூட்டிங்கிற்குச் சென்ற போது, 'வந்தேமாதரம்' என்ற மந்திர வார்த்தையால் மக்களைத் தட்டி எழுப்பி, அனைவரும் மூவண்ண தேசியக் கொடியின் கீழே ஒன்றிணைப்பதுதான் எங்கள் நோக்கமாக இருந்தது. அடுத்த கட்டத்துக்குச் செல்ல வேண்டியதுதான் இந்த ஆல்பத்தின் லட்சியம். அதனால்தான், குதிரையில் ஏறி, மூவண்ணக் கொடியேந்திப் புறப்படும்படியாய்ப் படம் பிடித்திருக்கிறோம். சென்ற முறை முடியாது போன காஷ்மீர் மக்களை, இப்போது படம் பிடித்திருக்கிறோம். பனி படர்ந்த காஷ்மீர் பின்னணியில் லதா மங்கேஷ்கர் தமது குயில் குரலில் 'வந்தேமாதரம்' என்று பாடினால் அற்புதமாய் இருக்கும்! நாங்கள் விரும்பினாலும், செக்யூரிடி காரணங்களுக்காக, அது சாத்தியமில்லாது போனதில் எங்களுக்குக் கொஞ்சம் வருத்தமே! காஷ்மீர் பள்ளத்தாக்கில் பிரம்மாண்டமான தேசியக் கொடியை மக்கள் நாட்டும் காட்சியைப் படம் பிடித்தபோது, சுற்றிலும் இருநூறு எல்லையோரக் காவல் படை வீரர்கள் பாதுகாப்புக்காக நின்று கொண்டிருந்தனர். அதுவே இன்றைய யதார்த்தம்!"

"இந்த இரண்டாவது ஆல்பத்திற்கு ஏன் ரஹ்மான் இசையமைக்கவில்லை?"

"ரஹ்மான் என் பால்ய நண்பர்தான். எனக்கும் அவருக்கும் எந்தவித பிரச்னையும் இல்லை என்பதை ஆல்பம் வெளியீட்டு நிகழ்ச்சிகளின் போது (மும்பை + சென்னை) அவர் கலந்து கொண்டு பேசியதிலிருந்தே புரிந்து கொள்ளலாம். நிறையப் பேரை இந்த வந்தேமாதரம் வலைக்குள் கொண்டு வர வேண்டும் என்பதே எங்கள் ஆசை."

"புதிய இசையமைப்பாளரான ரஞ்சித் பரட் யார்?"

"அவர் அடிப்படையில் ஒரு டிரம்ஸ் கலைஞர். ஏ.ஆர். ரஹ்மானுடன் பணிபுரிந்திருக்கிறார். எங்களுடைய விளம்பரப் படங்கள் பலவற்றுக்கும் கடந்த ஏழெட்டு ஆண்டுகளாக அவர் இசையமைத்திருக்கிறார். துருதுருப்பான இளைஞர். திறமைசாலி."

"வந்தேமாதரம் - III எப்போது?"

"அநேகமாய் அடுத்த வருடம்!"

— மௌலி

"**நீ**ங்களும் உங்கள் மகனும் சினிமாவில் நடிக்கிறீர்களாமே?" என்று லட்சுமி பார்வதியை ஹைதராபாதில் சந்தித்துக் கேட்டோம்.

"ஆமாம். என் மகன் கோட்டி வரபிரசாத் (முதல் கணவரின் மகன்); 'பிரேம வீருடு' என்னும் படத்தில் நடிக்கிறான். மும்பை மாடல்



சினிமாவில் நடிக்கும் லட்சுமி பார்வதி!

அ ழ கி ஒருவர்தான் கதாநாயகி. நானும் அதில் அரசியல்வாதியாக நடிக்கிறேன். அரசியல்வாதி என்பவர் மக்களுக்கு எப்படியெல்லாம் உதவிகரமாகச் செயல்பட முடியும் என்பதை விளக்கும் கேரக்டர் என்னுடையது. ஆயினும் எனது அரசியல் வாழ்க்கைக்கான பிரசாரப் படம் அல்ல இது. இருந்த போதிலும் நானே படத்துக்கான வசனத்தையும் பாடல்களையும் எழுதியிருப்பதால் ரொம்ப இயல்பாகச் சில காட்சிகள் படத்தில் அமைந்து விட்டன. அவை இக்கால அரசியலைத் தாக்குவது போல் இருக்கிறதென்று தயாரிப்பாளர் சொன்னார்."


"ஆக, நீங்கள் சினிமாவை உங்கள் அரசியல் வாழ்க்கைக்கு உபயோகப்படுத்திக் கொள்கிறீர்கள், இல்லையா?"

"அப்படியொரு எண்ணம் தற்சமயம் எனக்கு இல்லை. என்றாலும் சினிமாவின் மீது மக்களுக்கு இருக்கும் கவர்ச்சி பற்றிச் சொல்லவே தேவையில்லை. இந்த நிலையில் அந்த மீடியாவை நான் எனது அரசியல் வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொண்டாலும் அதில் தவறில்லையே!"

"உங்கள் கட்சியின் நிலை இப்போது எப்படியிருக்கிறது? எங்களைப் போன்ற வெளி மாநிலத்தவர்களுக்கு உங்களின் குரல் தற்சமயம் கேட்கவில்லையே!"

"ஆந்திர கஜானாவை திவாலாக்கிய சூழ்நிலையில்தான் சந்திரபாபு நாயுடு வெளிநாடுகளுக்குச் சென்று 'பிச்சை'யெடுத்துக் கொண்டிருக்கிறார் என்பதை மக்கள் உணர்ந்து வருகிறார்கள். ஹைதராபாதில் தினமும் எட்டு மணி நேரத்துக்கு அறிவிக்கப்படாத மின்வெட்டு. இதுவும் மக்கள் மனத்தில் பதிந்து வருவதால் எங்களுடைய பொதுக் கூட்டங்களுக்கு ஏராளமானோர் வருகிறார்கள். இன்னும் பத்து மாதங்களில் பொதுத் தேர்தல் என்கிற நிலையில் நானும் கட்சி ஊழியர்களும் தினசரி மக்களைச் சந்தித்து வருகிறோம். ஒரு துரோகக் கட்சியும் இன்னொரு துரோகக் கட்சியும் (பி.ஜே.பியும் சந்திரபாபு நாயுடுவும்) இணைந்து ஆந்திர மக்களுக்குச் செய்து வருகிற துரோகங்களை மக்களிடம் எடுத்துச் சொல்லி வருகிறோம். நிச்சயம் வெல்வோம்!" ●

சந்திப்பு : **சிம்மம்**





1998 அக்டோபர் 4
வெகுதான்ய புரட்டாசி 18
மலர் : 57
இதழ் : 10

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

ஆட்சிக் கலைப்பு: அவசரக் கோலம்!


பீஹாரில் ஜனாதிபதி ஆட்சி கோரிய மத்திய அமைச்சரவையின் சிபாரிசை மறு பரிசீலனைக்குத் திருப்பியனுப்பி விட்டார் குடியரசுத் தலைவர். இதன் காரணமாக மத்திய அரசு ஒரு தார்மிகத் தோல்வியைக் கண்டிருக்கிறது. அதே சமயம் லல்லு பிரசாத் யாதவ் ஒரு 'வெற்றி'யைக் கொண்டாடவும் வழி செய்யப்பட்டிருக்கிறது!

பீஹாரில் ஜனாதிபதி ஆட்சிக்கு சிபாரிசு செய்வது குறித்து முடிவெடுக்க நடந்த அமைச்சரவைக் கூட்டத்திலேயே பிரச்னை ஆரம்பித்துவிட்டது!

பீஹார் அரசைக் கலைக்க குடியரசுத் தலைவரிடம் சிபாரிசு செய்வதற்கு முன்பாக, தமிழக அரசைக் கலைத்தாக வேண்டும் என்கிற கோரிக்கையைப் பரிசீலிக்கும்படி வற்புறுத்திக் கேட்டிருக்கிறார் சட்டத்துறை அமைச்சர் தம்பிதுரை.

அது இயலாது என்று அறிந்ததும் பீஹார் ஆட்சிக் கலைப்புக்கு அ.தி.மு.க. ஆதரவு கிடைக்காது என்று பகிரங்கமாகவே தெரிவித்திருக்கிறார்.

ஒரு தவறு செயல்படுத்தப்படுவதற்கு முன்-அது சிந்தனையாக இருக்கிற நிலையிலேயே இன்னொரு தவறுக்கு முன்னுதாரணமாகிவிடும் என்பதையே இந்த நிகழ்ச்சி எடுத்துக்



காட்டுகிறது.

தமிழகத்தில் நிர்வாகமும் சட்ட ஒழுங்கும் சீராக இருப்பது எத்தனைக்கு உண்மையோ அத்தனைக்கத்தனை பீஹாரில் அரசு நிர்வாகம் ஸ்தம்பித்துக் கிடப்பதும் உண்மை.

எனவே, பீஹாரில் ஜனாதிபதி ஆட்சியை சிபாரிசு செய்ய மத்திய அமைச்சரவை கொடுத்துள்ள காரணங்கள் கற்பனையல்ல. ஆனால், அக்காரணங்களின் அடிப்படையில் மெஜாரிட்டி அரசைக் கலைப்பது எதிர்காலத்தில் தவறான முன்னுதாரணமாக நிலைத்துப் போகும்.

மத்திய அமைச்சரவைக்குள்ளேயே பீஹார் விஷயத்தில் கருத்து மோதல் இருக்கிறது. ஜனாதிபதி ஆட்சிக்கு வழிவகுப்பதை ஹெக்டே எதிர்க்கிறார்.

தமிழக முதல்வரும் இவ்விஷயத்தில் மத்திய அரசு தவறிழைப்பதாகவும் அவப்பெயர் வந்து சேரும் என்றும் எச்சரித்திருக்கிறார்.


எல்லா எதிர்க்கட்சிகளும் மத்திய அரசின் இந்த முடிவைக் கடுமையாகக் கண்டனம் செய்திருக்கின்றன.

குடியரசுத் தலைவர் அயல்நாட்டுச் சுற்றுப் பயணம் முடித்துத் திரும்புகிற தினத்தில் பிரதமர் அயல்நாட்டுப் பயணம் புறப்படத் திட்டமிடப்பட்டிருந்தது. அந்த ஒரு தினத்தைத் தவற விட்டுவிடக் கூடாது என்கிற அவசரத்தில் அமைச்சரவை கூடி பீஹாரில் மத்திய ஆட்சிக்கு சிபாரிசு செய்ய முடிவெடுத்தது. அம்முடிவை குடியரசுத் தலைவரிடம் தெரிவித்தது.

பிரதமர் தமது பயணத்தை முடித்துத் திரும்பும்வரை காத்திருக்க இயலாத அளவுக்கு நெருக்கடி எதுவும் பீஹாரில் ஏற்பட்டுவிடவில்லை.

எனினும் உள்துறை அமைச்சர் அத்வானியும் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜார்ஜ் ஃபெர்னான்டஸும் இவ்விஷயத்தில் அவசரம் காட்டியிருக்கிறார்கள்.

இந்த அவசரத்தின் பின்னால் அரசியல் உள்நோக்கம் இயங்குவதை உணர முடிகிறது.



இதன் காரணமாகவே பீஹாரில் நடக்கிற லல்லுவின் (பினாமி) ஆட்சிக்கு எதிரான வாதங்கள் நீர்த்துப் போகின்றன.

லல்லு பிரசாத் யாதவ் ஒரு யோக்யமான அரசியல்வாதியோ திறமையான நிர்வாகியோ அல்ல என்பது ஊரறிந்த ரகசியம்தான். எனினும் மக்களின் பேராதரவைப் பெற்று பதவிக்கு வந்தவர். ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு கைதான பின், மனைவியை பினாமியாக்கி அவரையும் பீஹாரையும் ஆட்டி வைத்துக் கொண்டிருப்பவர். அது மட்டுமல்ல, மத்திய அரசின் நடவடிக்கைகளை ஒருவாறு எதிர்பார்த்து, தடாலடியாக சட்ட சபையில் ஒரு நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தி வெற்றி பெற்றிருக்கிறது ராப்ரி தேவி அரசு.

அரசியல் ரீதியாக இவ்வாறு தம்மை பலப்படுத்திக் கொண்டதோடு அல்லாமல், தமக்கு இழைக்கப்படும் அநீதியை எதிர்த்து உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும் அறிவித்து, உணர்வு ரீதியாக மக்கள் ஆதரவை வளைத்துப் போட்டுக் கொண்டிருக்கிறார் ராப்ரி தேவி.

ஆட்சிக் கலைப்பு நடந்தால் லல்லுவிடம் அனுதாபம் பெருகி, பீஹார் ரணகளமாகிவிடும் என்று கூறக் கூடிய அளவுக்கு மக்களின் உணர்வுகள் தூண்டப்பட்டு வெடிக்கக் காத்திருக்கின்றன.

லல்லு பிரசாத் யாதவுக்கு எதிரான கிரிமினல் குற்றச்சாட்டுகள் யாவும் என்னவாயின?... அந்த விசாரணைகளை துரிதப்படுத்தி, விரைவில் முடிவு தெரிய மத்திய அரசு வழி செய்ய வேண்டும்.

சட்ட ரீதியான இந்த நடவடிக்கை தவிர, அரசியல் ரீதியாகத் திறமையான வியூகங்கள் வகுத்து, லல்லுவின் ஆட்சியை பலமிழக்கச் செய்யலாம்.

இந்த நேர்மையான அணுகுமுறைகளை விடுத்து, குறுக்கு வழியில் பீஹார் ஆட்சிக்கு குட்பை சொல்லிவிட்டு, தாம் அம்மாநிலத்தில் ஆட்சிக்கு வரமுடியும் என பி.ஜே.பி. தலைமை எண்ணுவது பகல் கனவு; அதுவும் நேர்மையற்ற பகல்கனவு!



3



6



8



4



7



9

1



5



2



"வேலை நாட்களில் பொதுக்கூட்டம் ஊர்வலம் கூடாது!"

"நீங்கள் தமிழக முதல்வராக இருந்தால்" என்று கேட்டதுதான் தாமதம், முதல்வர்களாகவே மாறி ஏகப்பட்ட திட்டங்களைத் தீர்மானமாக அறிவித்தார்கள், திருச்சி சீதாலக்ஷ்மி ராமசாமி பெண்கள் கல்லூரி மாணவிகள்.

1. ஆர். பவித்ரா (பி.காம், இரண்டாம் ஆண்டு):

இப்போ அதிகரிச்சிட்ட தீவிரவாத மற்றும் தீயசக்திகளை ஒழிக்க மிலிட்டரி ரூல் மாதிரி கடுமையா நடந்துக்குவேன். மத்திய அரசுக்கும் அதையே பரிந்துரைப்பேன். அனைவருக்கும் சம உரிமை என்ற சமதர்ம சமுதாயத்தை உருவாக்குவேன்.

2. எம். நித்யா (பி.ஏ ஆங்கிலம், மூன்றாம் ஆண்டு):

பெண்களுக்கான 33 சதவீத ஒதுக்கீடு கொண்டு வரேன்னு எல்லாரும் சொல்லிக்கிட்டே இருக்காங்க. கொண்டு வர்றாப் போல தெரியல. மாநில அளவிலாவது நான் நிச்சயம் கொண்டு வருவேன்.

3. எம். சோலச்சி (பி.ஏ ஆங்கிலம், மூன்றாம் ஆண்டு):

ஒவ்வொரு ஆட்சியிலும் பட்ஜெட் போட்டா, அது நடுத்தர மக்களுக்காகப் போடப்பட்ட பட்ஜெட்னு சொல்றாங்க. பத்திரிகை, டீ.வில நடுத்தர மக்களைப் பேட்டி எடுத்தா அப்படி இல்லேங்கிறாங்க. நான் முதலமைச்சரானால் திருப்தியான பட்ஜெட் போடுவேன். அதே போல விலை ஏறினா ஏத்தறவங்க, விலை இறங்கினா மட்டும் இறக்கறதே கிடையாது. அதை சரி பண்ணுவேன்.

4. எஸ். பாரதி (எம்.ஏ வரலாறு, இரண்டாம் ஆண்டு):

இந்தியன் படத்துல லஞ்சத்தை ஒழிக்கணும்னு சொல்லுவாங்க. அந்தப் படத்தையே ப்ளாக்ல டிக்கெட் வாங்கித்தான் பார்க்க முடிந்தது. அப்படி இல்லாம பண்ணுவேன். முதல்வரா வந்ததும் முதல்ல ஊழலை ஒழிப்பேன். பெண்கள் முன்னேற்றத்திற்கு நிறைய செய்வேன்.

5. எஸ். அகிலா (பி.ஏ வரலாறு, இரண்டாம் ஆண்டு):

நான் முதல்வரா இருந்தா, என் கட்சி சார்புல மாநாடு ஏதும் நடத்தாம, அதற்காக ஆகப் போகும் தொகையைக் கல்வி நிறுவனங்களுக்குத் தருவேன். அதை பேப்பர்ல, டீ.வில விளம்பரப்படுத்தி கட்சி வளரவும்

10



11



நல்ல பேர் எடுக்கவும் செய்வேன்.

6. கே. மேனகா (பி.ஏ வரலாறு, முதல் ஆண்டு):

வன்முறை தோன்றும் முன்பே அதன் வேர்களைக் கண்டறிந்து ஒழிப்பேன். தன்னிகரற்ற தலைவர்கள் கஷ்டப்பட்டு வாங்கிக் கொடுத்த சுதந்தரத்தைக் காப்பேன்! இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பை விரிவுபடுத்துவேன்.

7. எஸ். ராஜேஸ்வரி (பி.எஸ்ஸி இயற்பியல், முதல் ஆண்டு):

நான் முதலமைச்சரானால் 'தாலிக்குத் தங்கம்' தருவேன்னு சொல்ல மாட்டேன். சமுதாயத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கும் சினிமாவை திருத்த சென்சார் சட்டங்களை கடுமையாக்குவேன். தங்களுக்கு உள்ள குறைகளை எடுத்துச் சொல்ல ஸ்ட்ரைக் பண்றதுதான் வழி என்பது இல்லை. எனவே, 'வேலை நிறுத்தத்தை' அனுமதிக்க மாட்டேன்!

8. ம. அசுதா (பி.ஏ தமிழ், இரண்டாம் ஆண்டு):

குற்றவாளிகளுக்கான தண்டனை சட்டத்தை அடியோடு மாத்துவேன். கொலை பண்ணினா அவனுக்கும் கொலைத் தண்டனைதான். அதே துன்பத்தை அவனும் அனுபவிக்கணும். என்னைப் பொறுத்த வரைக்கும் 'கண்ணுக்குக் கண், கைக்கு கை' பாலிசிதாங்க!

9. ஜெ. பத்மா (பி.எஸ்ஸி கணிதம் இரண்டாம் ஆண்டு):

கல்வி பயில உதவித்தொகை அளிக்கப்படுகிறது. அதை ஜாதி அடிப்படையில் தருவதை நிறுத்தி, பொருளாதார ரீதியில் பின் தங்கியவர்களுக்குத் தர ஏற்பாடு செய்வேன். 69 சதவீதத்தில் தகுதியானவர்கள் கிடைக்கவில்லையென்றால் மற்ற பிரிவினரை இட்டு நிரப்புவேன்.

10. கே.எஸ்.போது (பி.எஸ்ஸி கணிதம், இரண்டாம் ஆண்டு):

தமிழ்நாடு கிராமங்கள் நிறைந்த மாநிலம். நிறைய கிராமங்களில் அடிப்படைத் தேவைகளான ஆஸ்பிட்டல், போக்குவரத்து வசதிகள் என பல விஷயங்கள் கிடையாது. அந்தக் குறைகளை போக்கணும். என்னால முடியலேன்னா மக்களே தங்கள் தேவைகளை தீர்த்துக் கொள்ளும் வகையில் திட்டங்களை அறிவித்து அரசு நிதி உதவி கிடைக்க வழி செய்வேன்!

11. சி.உமா (பி.எஸ்ஸி கணிதம், மூன்றாம் ஆண்டு):

அறிவியல் துறை சார்ந்த வல்லுனர்களை ஊக்குவிப்பேன். மாநில முன்னேற்றத்திற்கு அவர்களின் திறமையை நிறைய பயன்படுத்துவேன்.

12. ஆர். ப்ரீதா (பயோ கெமிஸ்ட்ரி, மூன்றாம் ஆண்டு):

மேத்ஸ், பிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி போன்ற படிப்பு படிக்கறதெல்லாம் இப்போ ஒத்து வராது. அதனால



19



16



20



12



14



17



13



15




18



23

24






25



22



வேலை வாய்ப்புக்கான ஜாப் ஓரியண்டட் படிப்புகளை நிறைய அறிமுகம் பண்ணுவேன். கைத்தறி துணி நெய்தலைப் படிப்பாக்குவேன். சிறு தொழில் துவங்க நிறைய உதவி செய்வேன். இதனால் நாட்டின் பொருளாதாரமும் பலப்படும். வேலை இல்லாத் திண்டாட்டமும் குறையும்.

13. எம். லக்ஷ்மி (பி.ஏ ஆங்கிலம், மூன்றாம் ஆண்டு):

நான் முதலமைச்சர் ஆனேன்னு வச்சுக்கங்க, வார வேலை நாட்களில் பொதுக்கூட்டங்கள், ஊர்வலம் நடக்க அனுமதிக்க மாட்டேன். ஏன்னா, ஆபீஸ், பள்ளி - கல்லூரிகளுக்குப் போறவங்க எல்லாமே பாதிக்கப்படறாங்க.

14. ஆர். ஷர்மிளா (பி.ஏ ஆங்கிலம், மூன்றாம் ஆண்டு):

புற்றீசல் போலக் கிளம்பி மக்களை ஏமாற்றும் நிதி நிறுவனங்களை முதல்ல கட்டுப்படுத்தணும். அங்கீகாரம் பெற்ற நிதி நிறுவனங்கள் மாசா மாசம் எனக்கு ரிப்போர்ட் அனுப்பணும். அப்பதான் அவங்க பித்தலாட்டத்தை கண்ட்ரோல் பண்ண முடியும்னு நினைக்கிறேன்!

16. வி.பீனா (எம்.சி.ஏ இரண்டாம் ஆண்டு):

அரசியலும், மதமும் கலக்காம பார்த்துப்பேன். மதம், ஜாதி பத்தி மேடையில பேசக் கூடாதுன்னு ஆர்டர் போடுவேன்.

16. ஆர்.எஸ்.கே. ப்ரியா (பி.காம், மூன்றாம் ஆண்டு):

கார்ப்பரேஷன் ஆபீஸுக்கோ, கவர்ன்மெண்ட் ஆபீஸுக்கோ போனால் வேலை சீக்கிரம் ஆகாதுன்னு சொல்றாங்க. யார், எந்த வேலையாக வந்தாலும் அப்போதே, அன்னிக்கே முடியறாப்போல செய்வேன். லஞ்சம் வாங்கறவங்களை, - சோம்பேறிகளை தூக்கிட்டு, திறமையான ஆட்களை வேலைக்கு நியமிப்பேன்.

17. எஸ். ஸ்வப்னா (பி.எஸ்ஸி கெமிஸ்ட்ரி, இரண்டாம் ஆண்டு):

பொது மக்களின் தேவைகளை முதலில் பூர்த்தி பண்ணுவேன். பொதுப்பணித் துறையை நன்றாகச் செயல்படும்படி செய்வேன். இப்ப இருக்கற ரோடெல்லாம் சரியில்ல. கலப்படமில்லாத சிமெண்டில் உறுதியான வீடுகளைக் கட்ட மட்டுமே அனுமதி அளிப்பேன். உறுதியான ரோடு போடுவேன். தமிழ்நாட்டிலே முக்கிய பிரச்னையே ட்ரைனேஜ்தான். அதை ஒழுங்கு பண்ணணும்.

18. எஸ். சத்யா (பி.எஸ்ஸி கெமிஸ்டரி, இரண்டாம் ஆண்டு):

இந்தியா இன்னும்கூட வளர்கிற நாடாகவே இருக்கக் காரணம், இங்கே நல்லா படிச்சுட்டு வேலைக்காக வெளிநாட்டுக்குப் போயிடறதுதான். நான் ஒரு அக்ரீமெண்ட் போடுவேன். குறிப்பிட்ட காலம் வரை படிப்பையோ, வேலையையோ வெளிநாட்டுல முடிச்சிட்டு சொந்த மாநிலத்துக்கே திரும்பணும். அவர்களுடைய மூளைத்திறனை சொந்த நாட்டுக்குப் பயன்படுத்தணும்!

19. கே. விமலா ரமணி (தமிழ் இலக்கியம், மூன்றாம் ஆண்டு):

தமிழ்நாட்டுல தமிழுக்குத்தான் முக்கியத்துவம் தருவேன். பிறமொழி படிக்கலாம். ஆனால் தமிழ் படிக்காம இருக்கக் கூடாது!

20. எம். தமயந்தி (தமிழ் இலக்கியம், மூன்றாம் ஆண்டு):

ஜாதியை ஒழிக்கணும். முடிஞ்சா அதுக்குச் சட்டமே போடுவேன். அப்பத்தான் அடுத்த தலைமுறையிலாவது ஜாதி பற்றிய பேச்சே இல்லாமல் பண்ண முடியும்.

21. எஸ். இளவரசி (தமிழ் இலக்கியம், மூன்றாம் ஆண்டு):

நான் செய்யும் நல்ல காரியங்களை, திட்டங்களை அரசியல் காரணமாக மற்ற கட்சியினர் வேண்டுமென்றே விமர்சிப்பதை அனுமதிக்க மாட்டேன். தேவைப்பட்டால் இதற்காக புது சட்டமே கொண்டு வருவேன். தவறான

பிரசாரங்கள் செய்து மக்களை திசை திருப்பக் கூடாது.

22. ஜி. வித்யா (பி.காம், இரண்டாம் ஆண்டு):

காவல் துறையில் அரசியல் தலையீடுகள் இருக்கின்றன. எதைச் செய்யணும்னாலும் அரசியல்வாதிகளையே காவல் துறை சார்ந்து இருக்க வேண்டியிருக்கிறது. நான் முதல மைச்சர் ஆனவுடன் எடுக்கற பர்ஸ்ட் ஸ்டெப்பே இந்த அரசியல் தலையீடுகளைத் தடுப்பதுதான்.

23. எல்.என். அனுசுதா (பி.காம், முதல் ஆண்டு)

ஒரு வாரம் முழுக்க ஒரு ஊர்ல தங்கி அந்த ஊர் மக்களோடயே வசிப்பேன். அவர்களின் குறைகளை ஒட்டு மொத்தமாக நீக்க வழி வகை செய்துட்டு அடுத்த ஊருக்குப் போவேன். இப்படி ஒவ்வொரு ஊரிலும் தங்குவேன். நம்மை வளர்த்து, பொறுப்பான பதவியில் அமர வைக்கும் அப்பா, அம்மாவை 'முதி யோர் இல்லத்துக்குப் போ'ன்னு துரத்தறவங்கள அரசு வேலையை விட்டே தூக்கிடுவேன்.

24. ஜி. சாந்தா (பி.எஸ்ஸி கெமிஸ்ட்ரி, இரண்டாம் ஆண்டு):

நான் என்ன நினைக்கிறேனோ அது மக்களை போய்ச் சேர வேண்டும், மக்கள் என்ன நினைக் கிறார்களோ அவை என்னை வந்து சேர வேண்டு மானால் எங்களுக்கிடையே பாலமாகச் செயல் படும் தகவல் தொடர்புச் சாதனங்களை நான் முக்கியமானதாகக் கருதுகிறேன். நல்லாட்சி நடக்க அவர்களுடைய உதவியையும் ஒத்துழைப் பையும் பயன்படுத்திக் கொள்வேன்.

25. டி. விமலா (பி.எஸ்ஸி, கெமிஸ்ட்ரி, இரண்டாம் ஆண்டு):

தமிழ் கலாசாரத்தைக் கெடுக்கும், இளைஞர்களைத் திசை திருப்பும், இண்டர்நெட் மற்றும் கேபிள் டீவி போன் றவற்றைத் தடை செய்வேன்.

26. ஆர். சரளா (பி.எஸ்ஸி கெமிஸ்ட்ரி, இரண்டாம் ஆண்டு):

ஒயின் ஷாப்புகளிலும், பொது இடங்களிலும் பெண் களை இழிவு படுத்தும் வகையில் ஒட்டப்படும் போஸ் டர்களை முதலில் ஒழிப்பேன். மீறி ஒட்டினால் தண்டனை உண்டு!

27. கே. லலிதாகுமாரி (பி.ஏ தமிழ், மூன்றாம் ஆண்டு):

நாட்டுல குழந்தைத் தொழிலாளர் பிரச்னையை இப்ப இருக்கறவங்க, சரி பண்ணிக்கிட்டு வந்தாலும், அதைப் பூரணமாக ஒழிக்கப் பாடுபடுவேன். காந்தி சொன்னா மாதிரி இந்தியாவின் முதுகெலும்பே கிராமங்கள்தான். அதனால் கிராமத் தொழில்கள் மற்றும் குடிசைத் தொழிலுக்கு ஊக்கமளிப்பேன்.

28. ஜி.எஸ். வித்யா (பி.எஸ்ஸி கெமிஸ்ட்ரி, இரண்டாம் ஆண்டு):

சாமான்ய மக்களில் ஒருத்தியா இருப்பேன். எல்லா வேலையிலும் என் நேரடிப் பார்வை இருக்கற மாதிரி பார்த் துப்பேன். தேசிய மொழியான ஹிந்தியை அனைவரும் படிக் கச் செய்வேன். எதிர்க்கட்சிகளிடமும் நல்ல உறவு வச்சுப் பேன். அவங்க சொல்ற நல்ல கருத்துகளையும் ஏத்துப்பேன்.

26



27




28



29



30



29. பி. ஸ்வர்ணா (பி.எஸ்ஸி கெமிஸ்ட்ரி, இரண்டாம் ஆண்டு):

முதலமைச்சரானால் சுவிஸ் பேங்க்லயெல்லாம் கணக்கு வச்சுக்க மாட்டேன். தனி விமானத்துல போகாம சாதாரண பிரயாணிகள் விமானத்திலேயே பயணம் செய்வேன்!

30. பி. சுகந்தி (பி.காம் மூன்றாம் ஆண்டு):

நாட்டுல இப்போ பத்து சதவிகிதம் பேருக்குத்தான் தேசப் பற்றே இருக்கு. அதை எல்லோருக்கும் வரவழைக்க ஏதாவது வழி இருக்கான்னு யோசிக்கணும். ●

பேட்டி, படங்கள்:
ஜெ. ஞானசேகர்

அமோகமாக விற்பனையாகும் கழுதைப் படங்கள்!



"மதுரையைச் சுத்தின கழுதை வேறெங்கும் போகாது" என்றொரு பழமொழி மதுரை சுற்றுவட்டாரங்களில் சரளமாகப் புழங்குகிறது. அது உண்மைதான் என்பது போல மதுரையில் எங்கு பார்த்தாலும் கழுதைதான். அதாவது கழுதைப் படங்கள்...!

சிறிய பெட்டிக்கடை முதற் கொண்டு, பெரிய நகைக் கடை, ஜவுளிக் கடையிலெல்லாம் திருஷ்டிக்காக கழுதைப் படங்களை மாட்டி வைத்திருக்கிறார்கள். சைக்கிள் ரிக்ஷா, ஆட்டோக்களில்கூட கழுதை தொங்குகிறது. சிலர் தங்கள் டூ வீலர்களில் கூட கழுதை ஸ்டிக்கரை ஒட்டி வைத்திருக்கிறார்கள். தெருத் தெருவாய் கூடை சுமந்து மீன் வியாபாரம் செய்யும் பெண்மணிகூட கூடைக்குள் கழுதை ஸ்டிக்கர் ஒட்டியிருப்பது ஆச்சர்யமான அதிர்ச்சி!

போட்டோ கடை நடத்தும் மணவாளன் "தினசரி ரெண்டு கழுதைப் படமாவது விற்பனையாகிடும்" என்று கூறுவதோடு, தன் கடைக்கென்று பிரத்யேக கழுதையையும் மாட்டி வைத்துள்ளார்!

"எதற்காகக் கழுதை? எப்படி ஏற்பட்டது இப் பழக்கம்?..." போன்ற கேள்விகளுக்கு விடை தேடி பல இடங்களில் அலைந்தும் நமக்கு ஏமாற்றமே! "வச்சுக்கிட்டா நல்லதுன்னு சொல்லி எல்லோரும் வச்சிருக்காங்க. நானும் வச்சிருக்கேன்" என்ற பதில்தான் பெரும்பாலும் கிடைத்தது.

"இதுவும் திருஷ்டி பொம்மை மாதிரிதான். கடைக்கு வர்றவங்க கழுதையைப் பார்த்தால் கவனம் சிதறும். கண்ணு போட மாட்டாங்க" என்கிறார்கள் 'ஹிண்டு, முஸ்லீம், கிறிஸ்டின்' என்ற பெயரில் டைல்ஸ் கடை நடத்தும் மாரியும், ராஜேந்திரனும்.

"முதல்ல திருஷ்டிக்காகன்னு தான் வச்சாங்க. இப்ப படிப்படியாய் அதையே கழுதை சாமின்னு பூ, ஊதுபத்தியெல்லாம் வைக்க ஆரம்பிச்சிட்டாங்க. எப்படியோ நமக்கு பிஸினஸ் ஓடுது" என்கிறார் மீனாட்சியம்மன் கோவில் கடைகளுக்கு சாமி படங்களோடு கழுதைப் படமும் சப்ளை செய்யும் ரமேஷ்.

கணபதி பாண்டியன் என்ற ஆட்டோ டிரைவர் தமது ஆட்டோவிற்கே 'கழுதை' என்று பெயரெழுதி கழுதைப் படத்தோடு பத்து வருடமாய் ஓட்டி வருகிறார்! "திருஷ்டிக்கு திருஷ்டியுமாச்சு. நமக்குன்னு ஒரு அடையாளமுமாச்சு" என்கிறார் கணபதி.

போகிற போக்கில் கழுதையப்பன், கழுதையம்மாள் என்று குழந்தைகளுக்கே பேர் வைப்பார்கள் போலிருக்கிறது. அது சரி... எத்தனையோ மிருகங்களிருக்கும் போது 'கழுதைக்கு வந்த வாழ்வு' எப்படி சாத்தியமானது?

"கழுதை தான் சைவப் பிராணி; பிறரை இம்சிக்காத பிராணி; மிகுந்த பொறுமைசாலி; கடின உழைப்பாளி... அதனால்தான் கழுதைக்கு இந்த மரியாதை. நம்ம கடை மேல விழுகிற கண் திருஷ்டியையெல்லாம் அந்தக் கழுதை தெய்வமே சுமந்துக்கிட்டு நம்மைக் காப்பாத்தும்னு ஒரு நம்பிக்கை" என்று தமக்குத் தெரிந்ததைச் சொன்னார் பேப்பர் கடை வைத்திருக்கும் சக்தீஸ்வரன்.

சந்திப்பு, படம் :

'கிரண்நியூஸ்' ப. சரவணன்

சுமி சூப்பர் மார்க்கெட்!

சில பழைய பாக்கிகளை முதல்ல தீர்த்துடலாம்னு நினைக்கறேன்.

பிள்ளையாரை ஏன் கடல்ல கரைக்கணும்னு கேட்டிருந்தேன் இல்லையா? நிறையப் பேர் நிறையக் காரணங்கள் எழுதியிருக்கிங்க. (முழுக்கப் படிச்சதுல, இதுக்குத் தத்துவார்த்தமான காரணங்கள் எதுவும் இல்லைன்னு தெரியுது)

'எத்தனையோ வருஷங்களா பிள்ளையார் உற்சவம் கொண்டாடறோம்; வருஷா வருஷம் லட்சக்கணக்கான பிள்ளையார்களைக் கரைக்காமல் சேர்த்து வெச்சா, ஜனத்தொகைக்கு ஈடா பிள்ளையார் தொகை வளர்ந்துடாதா'ன்னு கேட்கிறார் கும்பகோணம் கே.என். பாலகிருஷ்ணன்.

ஒரு தடவை வாங்கின பிள்ளையார் பொம்மையை அப்படியே வெச்சிக்கிட்டா, அடுத்தடுத்த வருஷங்கள்ல பொம்மை செய்யற தொழிலாளிகளுக்கு பூவாவுக்கு என்ன வழி?ன்னு பிராக்டிகலா யோசிச்சிருக்கார். விசாகப்பட்டினத்துல ஒரு கூல்ட்ரிங்க் கம்பெனி ஜெனரல் மேனேஜரா இருக்கற காஞ்சனா முரளி. (கோலா விலையெல்லாம் ஏன் மேடம் திடீர்னு குறைஞ்சுடுச்சி?)

'வெறும் மண்ணால பொம்மை செய்யறபோது, நாள்பட அதில் விரிசல்கள், உடைப்புகள் வந்துடும். விக்ரகம் பின்னமா இருக்கக் கூடாதுங்கறது முக்கியமில்லையா? அதுனாலதான் கரைச்சுடறதுங்கறார் அ. கலையம்புத்தூர் லக்ஷ்மி நரசிம்மன்.

பை த வே, கோலா மேடம் ஒரு ஜோக் அனுப்பியிருக்காங்க – இது தொடர்பாக.

ஒரு கிறிஸ்டியன், ஒரு முஸ்லிம், ஒரு ஹிந்து. மூணு பேரும் ஒரே படகுல போறாங்க. திடீர்னு படகுல ஓட்டை. மூழ்கற அபாயம்.

முஸ்லிம், அல்லாவை வேண்டிக்கறாரு: ''காப்பாத்து அல்லாவே!''

அல்லா அவனை காப்பாத்தி, கரையேத்திட்டார்.

தேங்காய் உடைக்கும் ஜோக்ஸ் பல!

தென், கிறிஸ்டியன் :

''ஜீஸஸ்! ப்ளீஸ் ஸேவ் மி.''

யேசுநாதர் உடனே ஒரு லைஃப் போட் அனுப்பி, அவனையும் காப்பாத்திட்டார்.


ஹிந்து என்ன செய்தார்?

''பிள்ளையாரப்பா! நீதான் என்னைக் காப்பாத்தணும்!'' பிள்ளையார் சொன்னாராம் : ''அஸ்கு புஸ்க்! நீ இப்படித்தானே 'கணபதிபப்பா மோரியா'ன்னு டான்ஸ் ஆடி என்னைக் கடல்ல தூக்கிப் போடுவே? அப்ப எனக்கு எப்படி இருக்கும்?''

(தீவிர பிள்ளையார் பக்தர்கள் இதை ஜோக்கா மட்டும் எடுத்துக்கணும்னு கேட்டுக்கறேன்)

* * *

சிட்லப்பாக்கம் ஷண்முகசுந்தரம் அனுப்பியிருந்த 'புதிய கணித விதி', அவரோட சொந்தக் கண்டுபிடிப்பு இல்லைன்னு மதுரவாயல் தா.





பகவதி எழுதியிருக்கார். அது Jeff Rovinn ஜோக்னு ஒரு ரீடர்ஸ் டைஜெஸ்ட் கட்டிங்கை ஆதாரமா இணைச்சு அனுப்பி இருந்தார். நம்ம Columnக்கு அனுப்பற ஜோக்செல்லாம் சொந்த சரக்காத்தான் இருக்கணும்னு கட்டாயம் இல்லை. But, உருவல்னா ஆதாரம் அனுப்பிச்சுடறது better. ஏன்னா, ரீடர்ஸ் ரொம்ப ஷார்ப்!

* * *

'விஷ்ணுபுரம்' நாவல் பத்தி எழுதினாலும் எழுதினேன், போன்லேயும் தபால் மூல மாவும் நிறைய ரியாக்ஷன்ஸ். அதைப்படிச்ச பெரும்பாலானவங்க என் கருத்தை ஆதரிக் கறதைத் தெரிஞ்சுக்கிட்டேன். சில கண்ட னங்களும் வந்தன.

செந்தூரம் ஜகதீஷுக்கு நான் அதை சரியா படிக்கலைன்னு ஒரு சந்தேகம். அதைப் படிக்கறது ஒரு மறக்க முடியாத அனுபவம்னு ரொம்ப சிலிர்த்துப் போய்க் குறிப்பிட்டிருக்கார். அது அவர் அபிப் பிராயம்; தப்பில்லை. But, இப்படி உணர்ச்சி வசப்படறவர் விஷ்ணுபுரம் - விமர்சன மலர் கொண்டு வரப் போறதா சொல்லியிருக்கறது தான் இடிக்குது. உணர்ச்சி வசப்படறது உடம்புக்கும் நல்லதில்லை; விமர்சனத்துக்கும் நல்லதில்லை!

மாநகரப் பேருந்துல ரெகுலரா போற வங்களுக்குக் கொஞ்சநாளா ஓர் இனிய ஆச் சர்யம். சூப்பர் டீலக்ஸ் பஸ்கள் சில ரூட்ல ஓடுது. எதுக்காக இந்த மாறுதல்னு புரியலை. ஆனா, பீக் அவர்ஸ் நெரிசலுக்குப் பழைய லேலண்ட் சரக்குதான் லாயக்கு. இந்த டீலக்ஸ் பஸ்கள்ல கைப்பிடி ரொம்ப உயரம். ப்ரேக் போட்டா பத்தடி முன்னால இருக் கறவன் மண்டைல நம்ம மண்டை மோதி, தேங்காய் உடைக்குது. ஸீட்களும் இதமா இல்லை. ஹாஃப்னவர் உட்கார்ந்தால் முதுகு வலி பிராணன் போவுது. 21G ரூட் கண் டக்டர் ஒருத்தர் சொன்னார் : "இந்த மாதிரி வண்டிகள்ல ஆக்ஸிடெண்ட் ஆச்சுன்னா, ஒரு தகரம் கூடத் தேறாது. இதெல்லாம் வெறும் ஷோ. லாஸ் நிறைய."

போக்குவரத்துக் கழகங்கள் லாஸ்ல ஓடுதுன்னு காட்டப் புது வழி?

'An Unknown's Diary'ன்னு ஒரு ஸ்பானிஷ் படம் டீவில பார்த்தேன். (நடு ராத்திரி!) ஒரு நாய், ஒரு பத்து வயசுப் பொண்ணு, ஒரு காது கேக்காத கிழவன். மூணே கேரக்டர்ஸ். Second World War சமயம் நாஜிப்படைகளுக்கு, சாராயம் சப்ளை பண்ற வேலை பார்த்துட்டிருந்தவன் அந்தக் கிழவன். ஒரு ஹோட்டல் நடத்தி, நொடிச்சிப் போயி, காது கேட்காமல் போயி, சொந்தக்காரங்க பிரிஞ்சி போயி, வயசும் போயி தனியா இருக்கறவனுக்கு ஒரே துணை, பக்கத்து வீட்டுப் பொண்ணு. ஆனா அந்தப் பொண்ணு ஊமை! டயலாக் முழுக்க 'ஒன்வே'லதான்! கிழவன் பேசினா அவளுக் குக் கேட்கும். அவ பதில் பேச முடியாது. (பேசினாலும் கிழவனுக்குக் கேட்காது!)

இப்படி ரெண்டு கேரக்டரை வெச்சிக் கிட்டு என்னமா ஸ்கிரிப்ட் பண்ணிருக்காங்க தெரியுமா? க்ளாஸ்!


அந்தக் கிழவனோட டைரிலேருந்து அவ னோட முன் கதைச் சுருக்கம் அந்தப் பொண்ணுக்குத் தெரியுது. போர்க்களம் பத்தி, பாம்ஸ் பத்தி, ஸ்பைஸ் பத்தியெல்லாம் நிறைய தெரிஞ்சிக்க ஆசைப்படறா. கம்யூனி கேஷன் ப்ராப்ளம் காரணமா எல்லாம் துண்டு துண்டா நின்னு போறது.

கிடைச்ச வரைக்கும் துண்டுகளை ஒட்டி அவளா ஒரு film தயார் பண்றா - மனசுக் குள்ளயேதான். அதுவே பயங்கரமா இருக்கு. தன்னோட செல்ல நாயை இறுக்கிக் கட்டிக் கறா - நைட்ல!

போர் விகாரமானதுங்கற பிரசாரம்தான் சப்ஜெக்ட். But, பிரசாரமே தெரியாமல் ரொம்ப அழகா பண்ணியிருந்த விதத்தை ரசிச்சேன். தமிழ்ல இது மாதிரியெல்லாம் கவித்துவமா படங்கள் வரணும்னா ஒரு கோடியே எட்டு தடவை அஸ்வமேத யாகம் பண்ணணும்.

— சுமி

ஓர் வேண்டுகோள்



விழாக்களும், பண்டிகைகளும் குடும்பங்களிலும், சமுதாயத்திலும் மகிழ்ச்சியையும், குதூகலத்தையும் ஏற்படுத்துகின்றன.

தீபாவளிப் பண்டிகை ஒரு தேசீய பண்டிகையாக குழந்தைகள் மற்றும் பெரியோர்கள் புத்தாடை அணிந்து இனிப்புகளுடன் அறுசுவை அருந்தி பட்டாசு வெடித்து கொண்டாடுகின்றனர்.

கடவுளுடைய ஆசியினால் பலருக்கு வசதியுடன் தீபாவளி திருநாளை கொண்டாட வாழ்க்கை அமைந்துள்ளது.

சிவானந்த ஆசிரமத்தில் சுமார் 300 ஆதரவற்ற குழந்தைகளும், முதியோர்களும் இந்தத் தீபாவளி திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாட பொது மக்கள் மனமுவந்து உதவுமாறு வேண்டுகிறோம்.

பொது மக்கள் அன்புடன் அளிக்க விரும்பும் நன்கொடை பணம், பொருள் எதுவாக இருந்தாலும் இக் குழந்தைகளின் நலனை முன்னிட்டு ஏற்றுக் கொள்ளப்படும். பொது மக்கள் தங்களால் இயன்ற உதவியை பணமாக அல்லது பொருட்களாக, கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பலாம்.

நிர்வாகி,
"சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்"
நெ. 20, கம்பர் தெரு,
கிழக்கு தாம்பரம்,
சென்னை - 600 059.
தொலைபேசி எண்கள் : 2369078, 2369444.



38 வருடங்களாக பல லே அவுட்டுகளை அங்கத்தினர்களுக்கு வழங்கி வரும் JPV எஸ்டேட்டின் மற்றும் ஓர் வீட்டுமனைத் திட்டம் 'டயமண்ட் ஹவுஸிங் கிரஸ்ட்'.


* அரசு அங்கீகாரம் பெற்ற வீட்டு மனைகள்.

* சென்னையிலிருந்து 32 கி.மீ. தொலைவில் சென்னை – திருவள்ளூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது இப் புதிய லே அவுட்



* பிரதி மாதம் குலுக்கல்
* பம்பர் குலுக்கலில் தங்க நகைகள்
* மெகா பம்பர் குலுக்கலில் மாருதி கார் என பல பரிசுகள்...
* உடன் அங்கத்தினராகுங்கள்.

மாதத் தவணை ரூ. 999/- வீதம் 55 மாதங்கள்



J.P.V. ESTATES

154, Purasawalkam High Road,
Kellys, Chennai - 600 010.
Phone : 642 2672, 642 7826, 642 6471.
Fax : 044 - 641 5204.
Internet : http:www.jpvestates.com

'ஐடியல் ஹோம் காலனி' நிறைவு விழாவையொட்டி புதிய திட்டத்தில் ஒவ்வொரு மனைக்கும் முள் கம்பி வேலி அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

✉ நுகர்வோருக்கு பத்துக் கட்டளைகள் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. ஆனால் இன்று மக்கள் தாங்கள் வாங்கிய பொருள் சரியில்லை என்றால், இது நம் தலைவிதி, நமக்கு அதிர்ஷ்டம் இல்லை என்று எதிர்க் காமல் சும்மா இருந்து விடுகிறார்கள். அவர் களுக்கெல்லாம் இந்தத் தகவல் சிறந்த பயன ளிக்கும் என்பதில் ஐயமில்லை.

திருவண்ணாமலை, டி.கே. சீனிவாசன்.

✉ மரணத்திலிருந்து மயிரிழையில் தப்பிய அனந்தராம சுப்ரமணியத்தின் கைலாஷ் யாத்திரை அனுபவம், படிக்கும்போதே நம் மைச் சில்லிட வைத்தது.

சென்னை-1, கே.ஆர். உதயகுமார்.

✉ தீபாவளி மலர் மெகா பரிசு அறிவிப்பு மூலம் அசத்தியுள்ளீர்கள்! அத்துடன், உண் மையான பரிசு எது என்பதையும் தெளிவாக உணர்த்தியுள்ளீர்கள். பலே...!

திருச்சி-14, வி.ஆர். கிருத்திகா.

✉ அமரர் கல்கியின் 'தமிழ்ப் பாட்டி' கட்டு ரையைப் படித்துப் படித்து... சிரித்துச் சிரித்து மகிழ்ந்தேன்! இப்படியும் சிரிப்பாக எழுத முடியுமா? வியப்பு! வியப்பு!

கோட்டையூர், என். சங்கர்.

✉ ஆனந்தம், பரமானந்தம், பேரானந்தம் - என்ற மூன்று சொற்களுக்கு விளக்கம் தர, வாஜ்பாயை வைத்து 'தராசு' விளையாடி யதை ரசித்தேன்... ரசித்தேன்... ரசித்துக் கொண்டிருக்கிறேன்.

கோவை-14, ஏ.எஸ். இராமசாமி.

✉ 'ஷாருக்கான் நேரடி தமிழ்ப்படத்தில் அதுவும் ஏவி.எம்.பேனரில் விஜயுடன் இணைந்து நடிக்கப் போகிறார்' என்கிற செய்தி என்னைப் போன்ற ஷாருக்கான் அபிமானிகளை பெரிதும் குதூகலம் அடையச் செய்து விட்டது!

போடி நாயக்கனூர், எஸ். சையது முகமது.

✉ அமரர் கல்கி நூற்றாண்டு விழாவில் இசை நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிடுகை யில் ராகங்களை வர்ணித்திருக்கும் விதம் படிக்கும் எங்களை அடுத்த பக்கத்தைப் புரட்ட விடாமல் சிலிர்க்கச் செய்து விட்டது!

தேவனாங்குறிச்சி, பா. வடிவேல்.

✉ கோலாகலமிக்க கல்கி நூற்றாண்டு விழாவை நேரில் அனுபவித்த பிரமிப்பை ஏற்படுத்தி விட்டது கட்டுரை!

மேலகிருஷ்ணன் புதூர், பிரபாலிங்கேஷ்.

✉ தமிழகத்தில் தகவல் புரட்சி' தலை யங்கம் படித்தேன். தகவல் மையம், டானி டெக் என்கிற கல்வி மையம் என தமிழ கத்தை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்லும் நமது முதல்வரை பாராட்டத்தான் வேண்டும். நாட்டு முன்னேற்றத் திட்டங் களுக்கு அரசியல்வாதிகள், சுய நலன்களை மறந்துவிட்டு கட்சி பேதமின்றி உதவ முன் வர வேண்டும்.

மொரட்டுப்பாளையம்,

சு.நா. இராஜேஸ்வரன்.

✉ அழகியசிங்கரின் 'இழப்பு' தனியார் நிதி நிறுவனங்களில் முதலீடு செய்து விட்டுப் பணத்தை இழந்து தவிக்கும் அன்பர்களுக்கு உளவியல் ரீதியில் ஓர் ஆறுதல். "போவு துபோ. உறுத்தல் இல்லாத எவனாவது அனு பவிச்சிட்டுப் போகட்டும்" என்ற கடைசி வரி, அடுத்தவர் பணத்தை ஏப்பம் விட்டு விட்டு ஹாய்யாக இருக்கும் மனச்சாட்சி யற்ற முகம் மூடாத கொள்ளைக்காரர் களுக்குச் சரியான சவுக்கடி.

திருவண்ணாதபுரம்,

தி.சு. பாலசுப்பிரமணியன்.

✉ அழகியசிங்கரின் 'இழப்பு' சிறுகதை வெளியான பக்கத்திலேயே நிதி நிறுவன மோசடிகள் பற்றிய கட்டுரை! என்ன பொருத்தம்.

நெய்வேலி-3, எஸ். இந்துமதி.

✉ மதுரை தியாகராஜர் கல்லூரி மாணவர் களின் மினி பேட்டிகள் 'மணி'யாக இருந் தன!

மதுரை-10, எம். சுபத்திராதேவி.

விழாவை நேரில் அனுபவித்தோம்!

வட்டமேஜை



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்

16, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
சென்னை- 600 063. தொலைபேசி : 2376129



தீபாவளி நல்வாழ்த்துகள்

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர்! வணக்கம்

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த ஒன்பது ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, வசதியற்ற, திக்கற்ற 50 மாணவர்களும் 20 மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை, மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன் உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்த்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே, தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியை செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

காலை சிற்றுண்டி (70 பேருக்கு)	ரூ.	500/-
மதிய உணவு (இனிப்புடன்)	ரூ.	1,000/-
இரவு சிற்றுண்டி	ரூ.	750/-
இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	300/-
ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ.	1,000/-
ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	6,000/-
குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	40,000/-

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம்.

உங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு Cheque/DD/MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்
சுவாமி சர்வாத்மானந்தர்.

வருமான வரி விலக்கு (**Section 80 G**) உண்டு





* ஒரு வகுப்பு....

தமிழைக் கண்டு கொள்ளாத தமிழக அரசு

அரசுப் பள்ளிகளில் கூட 'தமிழ் மொழி வழிக் கல்விக்கு வரவேற்பு மிகக் குறைவு' என முடிவு செய்து அவை LKG, UKG என ஆங்கில வழித் தடத்தில் போக முற்பட்டு விட்ட இக்கால கட்டத்தில், தமிழால் நெகிழ்த்துகின்றன தாய்த் தமிழ்ப் பள்ளிகள்... அதிலும் திருப்பூர் தாய்த் தமிழ்ப் பள்ளியில் இந்த வருடம் சேர்க்கைக்கு இடம் இல்லை என பிள்ளைகளை திருப்பியனுப்பினதாகத் தகவல்! அப் பள்ளிக்கே ஒரு விசிட் அடித்துப் பார்த்தோம்...

'தமிழே உயிரே வணக்கம்...!' 'அன்பாய் நானுமிருப்பேனே...' 'ஓடி விளையாடு பாப்பா...!' - கோரஸாய் தமிழ்ப் பாடல்கள்.



• கோவை ஞானி

பாடல்களுடன் இணைந்து வந்த அந்த மழலைகளின் ராகம். ராகத்துடன் கைகளையும் கால்களையும் ஆட்டி ஆடிய நடனம்...

'மொட்டுக்கள்' (LKG) 'மலர்கள்' (UKG) வகுப்பு துவங்கி நான்காம் வகுப்பு வரையிலான அத்தனை குழந்தைகளிடமும் ஓர் ஒழுங்கு. ஆசிரியைகளை 'அக்கா' என்றும் ஆசிரியரை 'அண்ணா' என்றும் அவர்கள் அழைத்த பாங்கை விட ஆசிரியர்கள் சின்னக் குழந்தைகளைக் கூட 'வாங்க, உங்க பேர் என்னங்க...?' எனக் கேட்டது நம்மை வியப்பில் ஆழ்த்தியது. ஏன் இப்படி?

"அவர்களுக்கு நாம் மரியாதை கொடுப்பதன் மூலமே மரியாதையைக் கற்றுக் கொடுக்கவும் முடிகிறது; மரியாதையை இயல்பாய்ப் பெறவும் முடிகிறது. வன்முறையால் அடக்கப் பார்த்தால், வெற்று பயத்துடனேயே (போலியாய்) மரியாதை கொடுக்கத் துவங்குகிறார்கள் சிறார்கள். அது வாழ்க்கையிலும் தொடர்கிறது. (முகத்திற்கு நேராய் மரியாதை கொடுப்பதும் - பின்பு மறைமுகமாய்த் தூற்றுவதுமான நடைமுறை இதனாலேயே வருகிறது..)" - என்றார் ஓர் ஆசிரியை.

அதேபோல் 'உங்க பேர் என்ன...?' என்று குழந்தையைக் கேட்டதும் அதன் பெயர் சொல்லி அதற்குத் தமிழ் அர்த்தமும் சொல்லுகிறது. உதாரணமாக 'சுந்தரராஜன்' என்றால் 'அழகிய அரசன்' என்று பொருளும் சொல்லுகிறது.

குழந்தைகளுக்கு முதலில் பாடலுடன், ஆடலும் சொல்லிக் கொடுத்து, தாங்கள் சொல்லிக் கொடுப்பதில் ஒன்றிப் போகச் செய்து விடுகின்றனர். பின்புதான் எழுத்து வடிவம் எல்லாம். முதலில் கோடு வடிவிலான எழுத்துக்களே அறிமுகம் செய்யப்படுகின்றன. உதாரணமாக 'ட', 'ப', ம போன்ற எழுத்துக்களே... பிறகுதான் வட்ட வடிவ எழுத்துக்கள்!

'தினம் ஒரு திருக்குறள்!' இங்கே பள்ளி துவங்கப்பட்ட கடந்த நான்கு ஆண்டுகளாகவே நடைமுறையில் உள்ளதாம். ஒவ்வொரு வகுப்புக்கும் ஒவ்வொரு அதிகாரம் பிரித்துக் கொடுக்கப் பட்டு விடுகிறது. பத்துக் குறள்களையும் அத்தனை குழந்தைகளும் பாடி பொழிப்புரையும் சொல்லித் தேர்ந்த பிறகு அடுத்த அதிகாரத்திற்குச் செல்கிறார்களாம்.

கணக்கு சொல்லிக் கொடுப்பதில்கூட எண்முறை இரண்டாம் பட்சம்தான். குழந்தைகளின் விளையாட்டு உணர்வைக் கொண்டு மணிச் சட்டங்கள், பாசிகள் மற்றும் விளையாட்டுப் பொருள்கள் மூலமாய் சொல்லிக் கொடுக்கின்றனர். விஞ்ஞானத் தகவல்களைக் கூட பாடல் வழியே சொல்லி விளக்குகின்றனர். 'சுரபம்', 'கும்பம்', 'மேழம்' என தமிழ் மாதங்கள். அரசு பாடத் திட்டத்திலிருந்து விதி விலக்காய் காரிக்கிழமை (சனிக்கிழமை), அறிவன் (புதன்) கிழமை என்றெல்லாம் தமிழ்ப் பதங்களை உபயோகப் படுத்தி தமிழ் எண்களையும், புதிய தமிழ்ச் சொற்களை உருவாக்கித் தருகின்றனராம் ஆசிரியர்கள். பென்சில் - கரிக்குச்சி, பால் பாயிண்ட் பேனா - உருள்முனைத் தூவல்!



• பள்ளி நிர்வாகி

"இப்படி பயிற்றுவிப்பது இவர்கள் தனிமைப்பட்டுப் போக வழி வகுக்குமே. அடிப்படை ஆங்கில அறிவு இல்லாமல் கணிப்பொறி, இணையம் வந்து பயமுறுத்தும் இந்தக் காலத்தில் இக் குழந்தைகள் அவற்றை எப்படி எதிர் கொள்ளப் போகின்றன...?" என்கிற கேள்வியைப் பள்ளியின் நிர்வாகி தங்கராசுவிடம் கேட்டோம்.

"ஆங்கிலப் பாடத்திற்கு நாங்கள் எதிரிகளல்ல. அதற்காக தாய்ப்பால் கொடுக்க வேண்டிய தருணத்தில் யாராவது மாமிச உணவைத் தருவார்களா? அதனாலேயே தமிழால் பாலூட்டி, தாலாட்டி பிறகு மூன்றாம் வகுப்பில் துவங்கி ஆங்கிலத்தைத் தருகிறோம். அதைக்கூட பாடல் வடிவில் தெளிந்த தமிழ் விளக்கமளித்து!"

இந்தப் பள்ளி 1995-ல் துவங்கப் படும்போது பலரிடமும் (பொது மக்கள்) இந்தக் கேள்வி வந்ததாம். பலர் பள்ளியில் குழந்தைகளைச் சேர்த்து விடவே தயங்கினராம். இங்கே கல்வி கற்ற பிறகு குழந்தைகள் கற்றுக் கொண்ட ஒழுக்கம்; வீட்டில்

அக்கறையாகப் பாடம் படித்த பாங்கு; கொடுத்த மரியாதை இவற்றை உணர்ந்தே அடுத்தடுத்த வருடங்களில் 'தமிழ்ப் பள்ளியில்' சேரும் மாணவர்கள் எண்ணிக்கை அதிகரிக்க ஆரம்பித்து, இந்த வருடம் இடம் இல்லையென நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகளைத் திருப்பியனுப்பிவிட நேர்ந்ததாம்.

இது மாதிரியான பள்ளிகள் தமிழகத்தில் தற்போது பதினொன்றுக்கும் மேல் இயங்கினாலும் குழந்தைகளின் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ள பள்ளி என்கிற பெருமையைத் திருப்பூர் பள்ளியே தட்டிக் கொள்கிறது. (தற்போது 400 குழந்தைகள்). அபரிமித வளர்ச்சி, அசுரச் செயல்பாடு. சரி, இதற்கு அரசு உதவிகள்...

"அரசிடமிருந்து நாங்கள் எந்த உதவியும் பெறவில்லை. கேட்கவில்லை. தமிழுக்குக் கேட்டுப் பெறுவதில் எங்களுக்கு உடன்பாடில்லை. தமிழன்னைக்கு அவர்களாகப் பார்த்து ஏதாவது செய்தால்தான் உண்டு...!" என்று நிர்வாகி சொன்னாலும் அவர் முகத்தில் ஓர் எதிர்பார்ப்பு இருக்கவே செய்கிறது. குழந்தைகள் மாதந்தோறும் கொடுக்கும் கல்விக் கட்டணமான 35-40-45 ரூபாய்களில்தான் பள்ளி சிரமப்பட்டு நடக்கிறதாம்.

திருப்பூர் நகர் மன்றத் தலைவர், முன்னாள் எம்.எல்.ஏ ஆகியோர் எளிய தொகைகள் ஏற்பாடு செய்து கொடுத்திருக்கின்றனர். இலக்கியவாதிகள் சுப்ரபாரதி மணியன், கோவை ஞானி ஆகியோர் தாம் பெற்ற பரிசுத் தொகையில் ஒரு பகுதியை (சுப்ரபாரதி 1000 ரூபாய், ஞானி 15,000 ரூபாய்) அளித்தனராம்.

"தமிழ் அரசாங்கம் தமிழனோட அரசாங்கம். அப்படியென்றால் இதற்கு உடனடியாக ஏதாவது செய்திருக்க வேண்டும். அரசு விதிப்படி இதற்கு ஏதும் கொடுக்க வழியில்லையென்றால் முதலமைச்சர் தம் நிவாரண நிதியிலிருந்து ஏதும் தரலாமே... அவங்களைக் கூட விடுங்க. தமிழால் வாழுகிற நம் இலக்கியவாதிகளுக்கு தமிழ் உணர்வு இருக்கான்னுதான் எனக்கே சந்தேகமா இருக்கு!" என்கிறார் கோவை ஞானி.

தாய்த் தமிழ்ப் பள்ளிக்கு நாம் விசாரித்த வரை எந்த பொருளாதார வசதியும் கிடையாது. பள்ளிக்கு அடிப்படையான

''அந்த ஆள் அமெரிக்கா போயிட்டு வந்ததுல இருந்து ரொம்பத்தான் அலட்டிக்கிறார்!''

''ஏன்?''

''ஜீன்ஸ் துணியிலதான் வேஷ்டி கட்டறார்னா பார்த்துக்கயேன்!''

— எஸ். சரவணன்



அங்கீகாரம்கூட இன்னும் கிடைக்கவில்லை. அமைச்சரிடம் பள்ளிப் பாட திட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கல்வி உயர் அதிகாரி ஒருவர் வந்து பார்த்து விட்டு நெஞ்சு நெகிழ்ந்து போய் 'இது கல்விக்கூடமல்ல; கலைக் கோயில்!' எனப் பாராட்டி விட்டுச் சென்றாராம்.

எனினும் இதற்கு அங்கீகாரம் கிட்டாத நிலை. ஏனெனில் அங்கீகாரம் வேண்டுமென்றால் சொந்த இடம் வேண்டும்; ஸ்திரமான கட்டடம் அமைந்திருக்க வேண்டும். வங்கியில் குழந்தைகளின் தலைக்கு இவ்வளவு என ஒரு முன் வைப்புத் தொகை இருக்க வேண்டும். கட்டட உறுதிச் சான்று வேண்டும்.

ஆனால் இப்பள்ளி இருப்பதோ வாடகை இடத்தில், ஓலைக் கூரையில், ஆசிரியர்களின் எளிய வாழ்க்கையில்! அப்புறம் அங்கீகாரம் எப்படிக் கிடைக்கும்...?

இங்கே 14 ஆசிரியைகள். அனைவரும் இளம் வயதினர். ''எப்படி உங்கள் வாழ்க்கை? சம்பளம் போதுமா...? அரசு வேலை கிடைத்தால் சென்று விடுவீர்களா?'' எனக் கேட்டோம்.

"இப்போதைக்கு ஒரு நிழல் போலத்தான் எண்ணி இங்கே வந்தோம். சம்பளம் கருதினால் சம்மதமில்லை. ஆனால் இந்தக் குழந்தைகளோடு... தாய்த் தமிழோடு எங்களை அறியாமல் ஒன்றிப் போய் விட்டோம்... இனிப் பிரிவதும் - பிரிப்பதும் எண்ணிப் பார்க்கவே இயலாது!" என்று ஒருமித்துக் கூறியது போலியான வார்த்தையல்ல; உணர்வுபூர்வமான வார்த்தை!

கட்டுரை, படங்கள்: **கா.சு. வேலாயுதன்**

போட்டிக்கதை - 5

ஆகஸ்ட்-

"அல்உம்மாதானே நீ...?"

"இல்ல சார்."

"என்னடா சார்...? அய்யான்னு சொல்டா...?"

"இல்லிங்கைய்யா."

"பேரு...?"

சொன்னான்.

"அப்பன் பேரு...?"

சொன்னான்.

"என்ன வேல செய்யறான்...?"

"வெத்திலை யாவாரிங்கைய்யா."

"இப்ப எங்கிருந்து வர்ற...?"

"பெங்களூரில் இருந்து."

"அங்க என்ன பண்ற...?"

"ஓட்டல்ல சர்வரா இருக்கேன்."

"கோயமுத்தூர்ல குண்டு வெடிச்சி எழுபது பேர் செத்தாங்களே உனக்குத் தெரியுமா...?"

"தெரியாது சார்..."

"என்னடா மறுபடியும் சார்... மோர்ன்னு..." கை ஓங்கினார்.

"தெரியாதுங்கைய்யா..."

"கன்னடத்துக்காரன் எவனும் உனக்குத் தமிழ்ல சொல்லலையா...?"

"ஓட்டல விட்டு வெளியே வந்ததில்லைங்கைய்யா..."

"என்னடா... போலீஸ்காரனுக்கே காதுல பூ சுத்திறியா...? அத்வானிக்குக் குண்டு வச்சிட்டாங்கன்னு ஊரு, ஒலகமே ரெண்டு, பட்டுக் கெடக்கு. ஒண்ணுமே தெரியாதுன்றியே..." உறுமிக் கொண்டே மறுபடியும் கை ஓங்கினார்:

"இந்த ராத்திரியில பஸ்டாண்டுல ஏன் நின்ன?"

"நாளைக்கி என்னோட அக்கா கல்யாணம். வாப்பா லெட்டர் போட்டிருந்தாரு. அதான்... ஒரு வாரம் லீவு போட்டுட்டு ஊருக்கு ரயில்ல வந்தேன். பஸ்டாண்டு வந்து பஸ் பார்த்தா, கிராமத்துக்குப் போற கடைசி பஸ் போயிட்டு... கால மொத வண்டியில போகலாமுன்னு அங்கையே தங்கிட்டேன்."

"பொட்டியில என்னது?"

"துணிதாங்கைய்யா..."

"தொற."

திறந்தான். இரண்டு பேண்ட், இரண்டு ஷர்ட். ஒரு டி சர்ட். பேஸ்ட், பிரஷ், சீப்பு, கண்ணாடி, பவுடர். எடுத்து வெளியே போட்டான்.

"எங்களைக் கண்டதும் தூண் மறைவுல போயி நின்னயே, ஏன்?"

"இல்லீங்கைய்யா... அப்பத்தான் பொட்டிய அங்க ஓரமா வச்சிட்டு பக்கத்துல போயி ஒண்ணுக்கு இருந்துட்டு, பொட்டிய பார்க்க அவசரமா ஓடி வந்தேன்."

"நீ சொல்றத நாங்க நம்பணுமா? எத்தினி பேரு... குண்ட தூக்கிக்கிட்டு அலையறீங்க... சொல்லுடா?" என்று கழுத்தில் கை வைத்துத் தள்ளினார்.

இதை எதிர்பார்க்காத அவன் தடுமாறி சுவரில் சாய்ந்து, அதிர்ச்சியுடன் திரும்பிப் பார்த்தான்.

"என்னடா மொறக்கிற?"

"அய்யா... நா மொறக்கில."

"இந்தாப்பா கான்ஸ்டபிள். நம்பளையே முறைக்கிறான். இவனை விடக்கூடாது. இவன இப்படி கேட்டா ஒழுங்கா பதில் சொல்ல மாட்டான். 'குட்கா' இருந்தா கொடு. நா விசாரிக்



கிறேன்..." ஏட்டு முன்னேறினார்.

பான்பராக் இரண்டு பாக்கெட்டை சேர்ந்தார்ப் போல் கிழித்து வாயில் கொட்டினார் அந்த ஏட்டு. கப்பென்று தொண்டையில் இறங்கி அடைத்தது. தொண்டையைச் செருமி, நாக்கால் வெளியே தள்ளி, கடைவாயில் எச்சில் ஒழுக அடக்கினார்.

சற்று நேரத்தில் விழியை உருட்டிக் கொண்டே, "கமான், இங்க வாடா?" என்று கையைச் சொடுக்கி அழைத்தார். எதிரே வந்தவளை ஓங்கி வயிற்றில் ஒரு குத்து விட்டார்.

சத்திய சந்தன்

"அல்லா..." என்று அலறிக் கொண்டு கீழே விழுந்தான் அவன். விழுந்தவனின் சட்டை காலரை நிமிர்த்தி, "சொல்லுடா? நீ அல்உம்மாதானே? உன்னோட தலைவன் யாரு? இன்னும் குண்டு எங்கங்க வச்சிருக்க, சொல்லுடா?"

"அய்யா... என்ன விட்டுடுங்க. அல்லா மேல சத்தியமா நீங்க கேக்கிறது எதுவும் புரியல. நா ஓட்டல்ல வேலை செய்யற சர்வருங்க. என்ன விட்டுடுங்க!'' கை கூப்பினான்.

''கான்ஸ்டபிள். இவன லாக்கப்புல போடு."

இரவு மணி இரண்டு. சிகரெட் பற்ற வைத்த கான்ஸ்டபிள், லாக்கப் ரூமில் நுழைந்தார்.

"டேய்... தம்பி ஏந்திரி?"

"தம்பியா? அய்யா..."

"ஸ்... சத்தம் போடாத. அந்த ஏட்டு பொல்லாத ஆளு. திமிர் பிடிச்சவன். நீ என்னுட்ட உண்மையைச் சொல்லு! உன்னப் பாத்தா அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி ஓடிப்போன என் தம்பி மாதிரி இருக்க..." முதுகில் கை வைத்துத் தட்டினார்.

"ஒங்க தம்பிங்களா?"

"ஆமாம்..."

"ஏங்கைய்யா, அடிச்சீங்களா?"

"ம். +2 ஃபெயில் ஆயிட்டான். அதுக்காக அடிச்சேன். ஓடிட்டான். கொஞ்ச நாள் தேடினேன். அப்புறம் உட்டுட்டேன். அதான் உன்ன பார்த்தோன்ன அவன் ஞாபகம் வந்துட்டு..." கண் துடைத்தார்.

"நானும் வீட்டுல கோச்சிக்கிட்டு பெங்களூர் போனவன்தாங்கைய்யா!"

"அப்படியா?"

"உங்க தம்பி, என்ன மாதிரியே இருப்பாராங்களய்யா?"

"ம்." சற்று மௌனத்திற்குப் பிறகு, "அது போகட்டும், நீ என்னுட்ட உண்மையைச் சொல்லு! குண்டு எங்கங்க வச்சிருக்க? எல்லாம் எங்க தங்கிருக்கிங்க? உன்னோட குருப் போட தலைவன் யாரு?"

''அய்யா... எனக்கு ஒண்ணும் தெரியாதுங்கைய்யா..."

"இல்ல. நீ பயப்படுற? நா உன் அண்ணன் மாதிரி. என்னுட்ட உண்மையச் சொல்லு, இப்பவே உன்ன விட்டுடறேன்."

"சத்தியமா எனக்கு ஏதுவும் தெரியாதுங்கைய்யா. என்ன விட்டுடுங்கைய்யா... நாளைக்கி அக்கா கல்யாணத்துக்குப் போகணும். அய்யா... அய்யா..."காலில் விழுந்தான்.

"ஏந் தம்பி, வந்ததிலிருந்து அக்கா கல்யாணத்துக்குப் போகணும்... அக்கா கல்யாணத்துக்குப் போகணும்முன்னு சொல்றியே... அக்காவுக்கு என்ன கொண்டு போற?"

"பணங்கைய்யா..."

"எவ்வளவு?"

"பத்தாயிரங்கைய்யா. ரெண்டு வருஷ சம்பளம். டிப்ஸ் எல்லாம் சேர்த்து வச்சிருக்கேன். இதைக் கொண்டு போய்த்தான் அக்காவுக்குக் கட்டில், மெத்தை, பீரோ எல்லாம் வாங்கணும். அப்பா எனக்காகக் காத்திட்டுருப்பாரு..."

''எங்க வச்சிருக்க... பொட்டியில காணோம்?"

"அண்டிராயரில்."

"எடு அத...?"

"வேண்டாங்கைய்யா."

"பங்காளி என்ன சொல்றான்?" – பான் பராக்கை மென்றுக் கொண்டே உள்ளே நுழைந்தார் ஏட்டு.

''அக்கா கல்யாணத்துக்குப் பணம் பத்தாயிரம் கொண்டு போறான். காமிக்கச் சொல்றேன். காமிக்க மாட்டங்கிறான்."

இதை ஏன் அவன் முன்னாடியே சொல்லல? கல்யாணத்த இங்க வச்சிடலாமா?"

"வேண்டாங்கைய்யா."

"பணத்த எடுக்கப் போறியா இல்லியா?" எச்சிலை அவன் முகத்தில் 'புளிச்'சென்று துப்பினார் ஏட்டு.




''நம்ம பொண்ணு உங்க மானத்தை காப்பாத்துவான்னு நினைச்சேன். தப்பாயிடிச்சு. எவனையோ லவ் பண்றாளாம்!''

''விடு. பாங்க் பாலன்ஸையாவது காப்பாத்தினாளே!''

– எஸ்.எஸ். பூங்கதிர்

வைரம் ஜொலிக்கிறது
வாழ்க்கை இனிக்கிறது



“வழி காட்டும் வைரம்”

சந்தாதாரர் பரிசுகள்

1.	250x40	10,000	[illegible]
2.	500x30	15,000	[illegible]
3.	625x40	25,000	[illegible]
4.	500x60	30,000	[illegible]
5.	1,000x50	50,000	[illegible]
6.	2,500x30	75,000	[illegible]
7.	2,500x40	1,00,000	[illegible]
8.	5,000x30	1,50,000	[illegible]
9.	5,000x40	2,00,000	[illegible]
10.	10,000x30	3,00,000	[illegible]
11.	12,500x40	5,00,000	4 கிராம் தங்க நாணயம்.

ஸ்ரீராம்

ஸ்ரீராம் சிட்ஸ்

ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ் லிமிடெட்
ஸ்ரீராம் சிட்ஸ் தமிழ்நாடு லிமிடெட்

“சுப்ரமணியன் பில்டிங்”, 1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை-600 002. போன்: 8520700, 8520797, 8522651, 8523932, 8525536.

இழப்பற்ற, அதிக லாபம் தரும், என்றும் ஏற்புடைய முதலீட்டு முறை

"அய்யய்யோ... கண்ணு எரியுதே... முழிக்க முடியலையே... கத்திக் கொண்டே அவசரமாக லுங்கியைத் தூக்கி துடைக்க முற்படும்போதுதான்...

நின்ற நிலையில் இருந்து காலைத் தூக்கி அவன் இடுப்பில் உதைத்தார் கான்ஸ்டபிள். நிலை தடுமாறிக் கீழே விழுந்தான் அவன். இரண்டு கைகளையும் முறுக்கி மடக்கி, பின்புறம் முதுகில் வைத்துக் கட்டினார். காலைக் கட்டினார். சட்டை பட்டனை கழற்றப் பொறுமையில்லாமல் பிய்த்து எறிந்தார். லுங்கியை உருவினார். அண்டிராயரை உருவி, அதில் இருந்த நூறு ரூபாய்க் கட்டை எடுத்து பாண்டில் சொருகினார் ஏட்டு.

குப்புறக் கிடந்தவனைத் திருப்பி மல்லாக்க போட்டார் கான்ஸ்டபிள்.

"அய்யா என் பணம்... என் பணம்..."

சொல்லுடா நீ யாரு? உன்னோட கூட்டாளி யாரு? குண்டு எங்க வச்சிருக்கீங்க...?"

"அட பாவிகளா? யாரோ எங்கையோ குண்டு வச்சதுக்கு என் கையக் கால கட்டி, துணிய அவுத்துவிட்டு, ரெண்டு வருஷமா குருவி சேர்க்கிறமாதிரி சேர்த்த பணத்தையும் புடிங்கிட்டுக் கொடுமைப் படுத்திருங்களே... நீங்க நல்லா இருப்பீங்களா? ஆண்டவன் உங்களச் சும்மா விடமாட்டான்."

"எதிர்த்துப் பேசற அந்த வாயிலே குத்தினா?" – சொல்லிக் கொண்டே மாறி மாறி உதைத்தார்கள். லத்திக் கம்பால் வாயிலும் கன்னத்திலும் குத்தினார்கள். பல் உடைந்து வாயிலிருந்து ரத்தம் ஒழுகியது. திரும்பக் காலால் உதைத்து குப்புறப் போட்டுவிட்டு, "காலையில அவுத்து உடுறேன். சத்தம் போடாம... திரும்பிப் பார்க்காம... ஒடு... பணம், கிணமுன்னு வெளில கத்திக்கிட்டு நின்ன... குண்டு வச்ச தீவிரவாதியோட தம்பின்னு கேஸ் புக் பண்ணி உள்ள தள்ளிடுவேன்..." என்று சொல்லிக் கொண்டே வெளியேறினார்கள்.

அதிகாலை ஐந்து மணி. திடுக்கிட்டு விழித்தனர் ஏட்டும், கான்ஸ்டபிளும்.

"விடியறதுக்குள்ள அனுப்பிடணும்..." என்றார் ஏட்டு.


"ஆமாம்... ஆறு மணிக்கு சர்க்கிள் வந்துடுவாறு..."

அவசரமாக லாக்கப் ரூமிற்கு ஓடினார்கள். கை, கால் கட்டை அவிழ்த்தார்கள். தோளைத் தொட்டுத் தூக்கினார்கள். கால் சொடுக்கிக் கீழே சரிந்தான். கை, கால் வெட்டி, வெட்டி இழுத்தது. பார்வை செருகி நாக்கு வெளியில் தள்ளி ரத்தமும், நுரையுமாக வாயிலிருந்து வெளியேறியது. சற்று பதற்றத்துடன் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டே, சட்டையை மாட்டி விட்டு, லுங்கியைக் கட்டி விட்டு, அவனது கைப் பெட்டியுடன் கைத்தாங்கலாகத் தூக்கி, ஸ்டேஷன் காம்பவுண்ட் சுவரை தாண்டி பக்கத்தில் உள்ள பொது கழிப்பிடச் சுவரில் சாய்த்து வைத்து விட்டு, திரும்பிப் பார்க்காமல் ஓடி வந்தார்கள்.

பழைய மாணவர்களே, வருக! வருக!!

எண்பத்தைந்து மாணவர்களோடு துவங்கப்பட்ட எம்.ஐ.டி.க்கு (மெட்ராஸ் இன்ஸ்டிடியுட் ஆஃப் டெக்னாலஜி) இது பொன் விழா ஆண்டு. ஓராண்டு முழுதும் நடக்கப் போகும் விழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாய் இங்கு படித்து வெளியேறிய பழைய மாணவர்களை தேடி வலை வீசிக் கொண்டிருக்கிறது





எம்.ஐ.டி.யின் பழைய மாணவர்கள் சங்கம். இதுவரை இங்கிருந்து சென்ற 7000 மாணவர்களில் 3000 பேரை ஏற்கெனவே கண்டு பிடித்து இணைத்து விட்டார்கள். மேற்கொண்டு 4000 பேர் எங்கே, எப்படி இருக்கிறார்கள் என்பது புதிரான சங்கதி. அவர்களையும் கண்டறிந்து பழைய மாணவர் சங்கத்தில் இணைப்பதில் தீவிரமாக இருக்கிறார்கள். நமது பாதுகாப்பு அமைச்சகத்தின் அறிவியல் ஆலோசகர் அப்துல் கலாம், எழுத்தாளர் சுஜாதா, டிடி. தமிழ் செய்தி வாசிப்பாளர் செந்தமிழ் அரசு மூவரும் எம்.ஐ.டி.யின் பழைய மாணவர்கள் லிஸ்டில் அடக்கம்!

படம், தகவல் : ஞானசேகர்



இருபதாம் அத்தியாயம்

இரு பெண் புலிகள்

ஒற்றனைப் பிடித்துக் கட்டி வீதியில் கொண்டு வருகிறார்கள் என்ற செய்தியைத் தாதி ஓடி வந்து தெரிவித்ததும், அங்கிருந்த மூவரின் உள்ளங்களும் பரபரப்பை அடைந்தன. குந்தவையின் உள்ளம் அதிகமாகத் தத்தளித்தது.

"தேவி! நாம் போய் அந்தக் கெட்டிக்கார ஒற்றன் முகம் எப்படியிருக்கிறது என்று பார்க்கலாமா?" என்றாள் நந்தினி.

குந்தவை தயக்கத்துடன், "நமக்கென்ன அவ்வனைப் பற்றி?" என்றாள்.

"அப்படியானால் சரி!" என்று நந்தினி அசட்டையாய்க் கூறினாள்.

"நான் போய்ப் பார்த்து வருகிறேன்" என்று கந்தமாறன் தட்டுத் தடுமாறி எழுந்தான்.

"வேண்டாம்; உம்மால் நடக்க முடியாது; விழுந்து விடுவீர்!" என்றாள் நந்தினி.

குந்தவை மனத்தை மாற்றிக் கொண்டவள்போல், "இவருடைய அருமையான சிநேகிதன் எப்படியிருக்கிறான் என்று நாமும் பார்த்துத்தான் வைக்கலாமே! இந்த அரண்மனை மேன் மாடத்திலிருந்து பார்த்தால் தெரியுமல்லவா?" என்று கேட்டாள்.

"நன்றாய்த் தெரியும்; என்னுடன் வாருங்கள்!" என்று நந்தினி எழுந்து நடந்தாள்.

கந்தமாறன், "தேவி! அவன் என் சிநேகித



னாயிருந்தால், மாமாவிடம் சொல்லி, நான் அவனைச் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்ய வேண்டும்!" என்று சொன்னான்.

"அவன் உமது சிநேகிதன் தானா என்று எங்களுக்கு எப்படித் தெரியும்?" என்றாள் நந்தினி.

"அப்படியானால் நானும் வந்தே தீருவேன்!" என்று கந்தமாறன் தட்டுத் தடுமாறி நடந்தான்.

மூவரும் அரண்மனை மேன் மாடத்தின் முன் முகப்புக்குச் சென்றார்கள். சற்றுத் தூரத்தில் ஏழெட்டுக் குதிரைகள் வந்து கொண்டிருந்தன. அவற்றின் மீது வேல் பிடித்த வீரர்கள் வந்து கொண்டிருந்தார்கள். குதிரைகளுக்கு மத்தியில் ஒரு மனிதன் நடந்து வந்தான். அவன் கைகளை முதுகுடன் சேர்த்துக் கயிற்றினால் கட்டியிருந்தது. அந்தக் கயிற்றின் இரு முனைகளை இரு பக்கத்திலும் வந்த குதிரை வீரர்கள் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

வீரர்களுக்குச் சற்றுத் தூரத்தில் வேடிக்கை பார்க்கும் கும்பல் வந்து கொண்டிருந்தது.

அரண்மனை மாடத்திலிருந்து பார்த்தவர்களுக்குக் குதிரைகளுக்கு நடுவில் நடந்து வந்த மனிதனின் முகம் முதலில் தெரியவில்லை.

ஊர்வலம் அருகில் வரும் வரையில் அந்த அரண்மனை மேன் மாடத்தில் மௌனம் குடி கொண்டிருந்தது.

குந்தவையின் ஆவலும் கவலையும் ததும்பிய கண்கள் நெருங்கி வந்த ஊர்வலத்தின் மீது லயித்திருந்தன.

நந்தினியோ வீதியில் எட்டிப் பார்ப்பதும் உடனே குந்தவையின் முகத்தைப் பார்ப்பதுமாயிருந்தாள்.

கந்தமாறன் அங்கே குடி கொண்டிருந்த மோனத்தைக் கலைத்தான்.

"இல்லை; இவன் வந்தியத்தேவன் இல்லை!" என்றான்.

குந்தவையின் முகம் மலர்ந்தது.

அச்சமயம் அந்த விநோதமான ஊர்வலம் அரண்மனை மாடத்தின் அடிப் பக்கம் வந்திருந்தது.

கயிற்றினால் கட்டுண்டு குதிரை வீரர்களின் மத்தியில் நடந்து வந்தவன் அண்ணாந்து பார்த்தான்.

வைத்தியர் மகன் அவன் என்பதைக் குந்தவை தெரிந்து கொண்டாள்.

அண்ணாந்து பார்த்தவன் ஏதோ சொல்ல எண்ணியவனைப் போல் வாயைத் திறந்தான்.

அதற்குள் அவனை இரு புறமும் பிணைத்திருந்த கயிறு முன்னால் தள்ளிக் கொண்டு போய்விட்டது.

குந்தவை தன் மகிழ்ச்சியை வெளியிட்டுக் கொள்ளாமல் "இது என்ன பைத்தியக்காரத்தனம்? இவனை எதற்காகப் பிடித்து இழுத்து வருகிறார்கள்? இவன் பழையாறை வைத்தியர் மகன் அல்லவா?" என்றாள்.

"ஓ! அப்படியா? என் மைத்துனரின் ஆட்கள் எப்போதும் இப்படித்தான். உண்மைக் குற்றவாளியை விட்டுவிட்டு யாரையாவது பிடித்துக் கொண்டு வந்து தொந்தரவு செய்வார்கள்!" என்றாள் நந்தினி.

இதற்குள் கந்தமாறன் "வந்தியத்தேவன் இவர்களிடம் அவ்வளவு இலகுவில் அகப்பட்டுக் கொள்வானா? என் சிநேகிதன் பெரிய இந்திரஜித்தனாயிற்றே? என்னையே ஏமாற்றியவன் இந்த ஆட்களிடமா சிக்கிக் கொள்வான்?" என்றான்.

"இன்னமும் அவனை உம்முடைய சிநேகிதன் என்று சொல்லிக் கொள்கிறீரே!" என்றாள் நந்தினி.

"துரோகியாய்ப் போய் விட்டான். ஆனாலும் என் மனத்தில் அவன் பேரில் உள்ள பிரியம் மாறவில்லை!" என்றான் கந்தமாறன்.

"ஒருவேளை உம்முடைய அழகான சிநேகிதனை இவர்கள் கொன்று போட்டிருக்கலாம். இரண்டு ஒற்றர்களைத் தொடர்ந்து கோடிக்கரைக்கு இந்த வீரர்கள் போனதாகக் கேள்விப்பட்டேன்" என்று நந்தினி சொல்லிவிட்டு, குந்தவையின் முகத்தைப் பார்த்தாள். "கொன்றிருக்கலாம்" என்ற வார்த்தை குந்தவையைத்

துடி துடிக்கச் செய்தது என்பதை அறிந்து கொண்டாள்.

அடி கர்வக்காரி! உன் பேரில் பழி வாங்க நல்ல ஆயுதம் கிடைத்தது! அதைப் பூரணமாக உபயோகப்படுத்தாமற் போனால் நான் பழுவூர் இளைய ராணி அல்ல! பொறு! பொறு!

குந்தவை தன் உள்ளக் கலக்கத்தைக் கோபமாக மாற்றிக் கொண்டு, "ஒற்றர்களாவது ஒற்றர்கள்! வெறும் அசட்டுத்தனம்! வர வர இந்தக் கிழவர்களுக்கு அறிவு மழுங்கிப் போய் விட்டது! யாரைக் கண்டாலும் சந்தேகம்! இந்த வைத்தியர் மகனை நான் அல்லவா கோடிக்கரைக்கு மூலிகை கொண்டு வருவதற்காக அனுப்பியிருந்தேன்? இவனை எதற்காகப் பிடித்து வந்திருக்கிறார்கள்? இப்போதே போய் உங்கள் மைத்துனரைக் கேட்கப் போகிறேன்!" என்றாள்.

"ஓகோ! தாங்கள் அனுப்பிய ஆளா இவன்? தேவி! சந்தேகம் என்று சொன்னீர்களே? எனக்குக் கூட இப்போது ஒரு சந்தேகம் தோன்றியிருக்கிறது. மூலிகை கொண்டு வருவதற்கு இவனை மட்டும் அனுப்பினீர்களா? இன்னொரு ஆளையும் சேர்த்து அனுப்பினீர்களா?" என்று நந்தினி கேட்டாள்.

"இவனோடு இன்னொருவனையுந்தான் அனுப்பினேன்! இரண்டு பேரில் ஒருவனை இலங்கைத் தீவுக்குப் போகும்படி சொன்னேன்.

"ஆகா! இப்போது எனக்கு எல்லாம் புரிந்து விட்டது! நான் சந்தேகித்தபடிதான் நடந்திருக்கிறது."

"எனக்கு ஒன்றுமே புரியவில்லை. என்ன சந்தேகித்தீர்கள்? என்ன நடந்திருக்கிறது?"

"இனிச் சந்தேகமே இல்லை; உறுதிதான். தேவி! தாங்கள் இவனோடு சேர்த்து அனுப்பிய ஆள் ஏற்கெனவே உங்களுக்குத் தெரிந்தவனா? புதிய மனிதனா?"

குந்தவை சற்றுத் தயங்கி, "புது மனிதனாவது? பழைய மனிதனாவது? காஞ்சிபுரத்திலிருந்து ஓலை கொண்டு வந்தவன்; என் தமையனிடமிருந்து வந்தவன்" என்றாள்.

"அவனேதான்! அவனேதான்!"

"எவனேதான்?"

"அவன்தான் ஒற்றன்! சக்கரவர்த்திக்கு ஓலை கொண்டு வந்ததாகத்தான் இங்கேயும் அவன் சொன்னானாம்...."

"என்ன காரணத்தினால் அவனை ஒற்றன் என்று இவர்கள் சந்தேகித்தார்களாம்?"

"எனக்கென்ன தெரியும் அதைப் பற்றி? அதெல்லாம் புருஷர்கள் விஷயம்! பார்க்கப் போனால், அந்த ஒற்றனும் சந்தேகப்படும்படியாகத்தான் நடந்திருக்கிறான். இல்லாவிட்டால், இரகசியமாக இரவுக்கிரவே ஏன் தப்பி ஓட வேண்டும்? இந்தச் சாது மனிதருடைய முதுகிலே எதற்காகக் குத்திவிட்டுப் போக வேண்டும்?"

"இவருடைய முதுகில் அவன்தான் குத்தினான் என்பதையும் நான் நம்பவில்லை. குத்தியிருந்தால் இவரை மறுபடி தூக்கிக் கொண்டு போய் அந்த ஊமையின் வீட்டில் ஏன் சேர்த்து விட்டுப் போகிறான்?"

"கூட இருந்து பார்த்துபோல் சொல்கிறீர்களே, தேவி! என்னமோ அந்த ஒற்றன் பேரில் உங்களுக்கு அவ்வளவு பரிவு தோன்றியிருக்கிறது. அவனிடம் ஏதோ மாய சக்தி இருக்க வேண்டும். இவர் கூட அவனை இன்னும் தம் சிநேகிதன் என்று சொல்லிக் கொள்கிறார் அல்லவா? – எப்படியானால் என்ன? போன உயிர் திரும்பி வரப் போவதில்லை. அவனை இந்த வீரர்கள் கொன்றிருந்தால்..."

குந்தவையின் முகத்தில் வியர்வை துளித்தது. கண்கள் சிவந்தன. தொண்டை அடைத்தது. நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. "அப்படி நடந்திராது! ஒரு நாளும் நடந்திராது" என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டாள்.

"இவர் சொல்கிறபடி அந்த ஒற்றன் அவ்வளவு கெட்டிக்காரனாயிருந்தால்..." என்றாள்.

"ஆம், இளவரசி! வந்தியத்தேவன் இந்த


பத்மவாசன்

ஆட்களிடம் ஒரு நாளும் அகப்பட்டுக் கொண்டிருக்க மாட்டான்!'' என்றான் கந்தமாறன்.

“இப்போது அகப்பட்டிரா விட்டால் இன்னொரு நாள் அகப்பட்டுக் கொள்கிறான்!'' என்றாள் நந்தினி.

குந்தவை பற்களைக் கடித்துக் கொண்டு, ''நாளை நடக்கப் போவது யாருக்குத் தெரியும்?'' என்றாள்.

பின்னர் ஆத்திரத்துடன், ''சக்கரவர்த்தி நோயாகப்படுத்தாலும் படுத்தார்; இராஜ்யமே தலைகீழாகப் போய் விட்டது! மூலிகை கொண்டு வருவதற்கென்று நான் அனுப்பிய ஆட்களைப் பிடிப்பதற்கு இவர்களுக்கு என்ன அதிகாரம்? இதோ என் தந்தையிடம் போய்க் கேட்டு விடுகிறேன்'' என்றாள்.

“தேவி! நோயினால் மெலிந்திருக்கும் சக்கரவர்த்தியை இது விஷயமாக ஏன் தொந்தரவு செய்ய வேண்டும்? என் மைத்துனரையே கேட்டு விடலாமே? தங்கள் விருப்பம் ஒரு வேளை அவருக்குத் தெரியாமலிருக்கலாம். தெரிவித்தால் அதன்படி நடந்து கொள்கிறார். இந்தச் சோழ ராஜ்யத்தில் இளைய பிராட்டியின் விருப்பத்துக்கு மாறாக நடக்க யார் துணிவார்கள்?'' என்றாள் நந்தினி.

அந்த இரண்டு பெண் புலிகளுக்கும் அன்று நடந்த போராட்டத்தில் நந்தினியே வெற்றி பெற்றாள். குந்தவையின் நெஞ்சில் பல காயங்கள் ஏற்பட்டன. அவற்றை வெளிக் காட்டாமலிருக்க இளவரசி பெரு முயற்சி செய்ய வேண்டியிருந்தது.



இருபத்தோராம் அத்தியாயம்

பாதாளச் சிறை

உலக வாழ்க்கையைப் போல் அறிய முடியாத விந்தை வேறொன்றுமில்லை சுகம் எப்படி வருகிறது, துக்கம் எப் படி வருகிறது என்று யாரால் சொல்ல முடியும்? வானம் நெடுங்காலம் களங்கமற்று விளங்கி வருகிறது. திடீரென்று கருமேகங்கள் திரண்டு வந்து எட் டுத் திசைகளும் இருள் சூழ்ந்து இடி இடித்து மின்னல் மின்னி கொட்டு கொட்டு என்று கொட்டுகிறது. உலகி லிருந்து காற்று என்பதே அற்றுப் போய் விட்டதாகச் சில சமயம் தோன்றுகிறது. மரங்களின் இலைகளும் அசையாமலிருக் கின்றன. திடீரென்று எங்கிருந்தோ ஒரு சூறைக் காற்று வந்து சுழன்று அடிக்கிறது. அதன் வேகத்தில் பெரிய பெரிய மரங்கள் வேருடன் பெயர்ந்து விழுகின்றன. சற்று முன்னால் நேத்ரானந்தமாக வானளாவி நின்று காட்சியளித்த பசுமரச் சோலைகள் இப்போது அனுமார் அழித்த சோக வனமாக மாறி விடுகின்றன.

குந்தவையின் வாழ்க்கையில் அத் தகைய சூறைக் காற்று இப்போது சுழன்று அடித்துக் கொண்டிருந்தது. சில காலத் துக்கு முன்பு வரையில் அவள் கவலை என்பதை அறியாதவளாயிருந்தாள். வாழ்க்கை என்பது இடைவிடாத ஓர் ஆனந்த உற்சவமாக இருந்து வந்தது. அன்பும் ஆதரவும் ஆடலும் பாடலும் காவியமும் ஓவியமும் அணிபணியும் அலங்காரமும் உத்தியான வனமும் ஓய் யார ஓடமுமே வாழ்க்கை என்று எண் ணும்படியாக நாட்கள் சென்று கொண் டிருந்தன. தந்தையும் தாய்மார்களும் அண்ணனும் தம்பியும் அமைச்சர்களும் ஆசிரியர்களும் தாதிமார்களும் தோழி மார்களும் இளைய பிராட்டியைத் தங்கள் கண்ணின் கருமணியாகப் பாவித்து நடத்தி வந்தார்கள். துயரம் இன்னது என்பது காவியத்திலும் நாடகத்திலும் உள்ள கற்பனை மூலமாகவே அவளுக்குத் தெரிந்திருந்தது.

அத்தகைய பாக்கியசாலிக்குத் துன்பம் வரத் தொடங்கிய போது ஒன்றன் மேலொன்றாகத் தொடர்ந்து வந்து மோதியது. தந்தையின் நிலை கவலைக் கிடமாயிருந்தது. இராஜ்யத்துக்குப் பெரிய சோதனை ஏற்பட்டிருந்தது. தமையனும் தம்பியும் தூர தேசங்களில் இருந்தார்கள். இன்னதென்று சொல்ல முடியாத ஒரு பெரும் விபத்து சோழர் குலத்துக்கு ஏற் படப் போவதாக சோதிடர்களும் நிமித் தக்காரர்களும் மர்மமாகச் சொல்லி வந் தார்கள். நாட்டில் இரகசியச் சதிக் கூட் டங்கள் நடந்து வந்தன. நாட்டின் மக்கள் இனந் தெரியாத பீதியில் ஆழ்ந்திருந்தார் கள்.

வைர நெஞ்சு படைத்த வீரர்கள் வழி வழியாக வந்த குலத்தில் பிறந்த குந்தவை இவ்வளவையும் தீரத்துடன் சமாளிக்கக் கூடிய மனோதைரியம் பெற்றிருந்தாள். குலத்துக்கும் இராஜ்யத்துக்கும் ஏற்பட் டிருந்த எல்லா அபாயங்களையும் தன் கூரிய மதியின் துணையினால் போக்கி விடலாம் என்ற திடமான நம்பிக்கை அவ ளுக்கு இருந்தது.

ஆனால், அவளுடைய வாழ்க்கையில் ஒரு சிறிய சம்பவம் – எதிர்பாராத ஒரு சந்திப்பு–அவளுடைய வைர இதயம் இளகவும் மனோ தைரியம் குலையவும் காரணமாகி விட்டது.

வந்தியத்தேவனைக் குந்தவை சந்தித்த போது – அது வரையில் மொட்டாக இருந்த அவளுடைய இருதய தாமரை – மடலவிழ்ந்து மலர்ந்தது.

ஆனால், என்ன துரதிர்ஷ்டம் – அதே சமயத்தில் ஒரு கரு வண்டு அந்த மலருக் குள் குடிபுகுந்து – தன் விஷக் கொடுக் கினால் அதன் மெல்லிய இதழ்களைக் கொட்டத் தொடங்கியது! அம்மம்மா! என்ன வேதனை!

அந்த வாணர்குல வீரன் ஒரு வேளை சிறைப்பட்டிருக்கலாம் என்ற எண்ணம் எவ்வளவு வேதனையை அளித்தது? அவன் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற கொடிய வார்த்தை எப்படி அவள் நெஞ்சைப் பிளந்தது? அதை வெளிக்காட்டிக் கொள்ளாமலிருக்க அவள் எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருந்தது?

பெற்றவர்கள், உற்றார்கள், உடன் பிறந்தவர்கள், உயிருக்குயிரான தோழிகள் எவ்வளவோ பேர் இருக்க - எவனோ வழியோடு போகிறவனைப் பற்றி - அகஸ்மாத்தாக இரண்டு மூன்று தடவை சந்தித்தவனைப் பற்றி ஏன் இந்த இருதயம் இப்படித் துடி துடிக்க வேண்டும்?

இதையெல்லாவற்றையும் யோசிப்பதற்கும், காரண காரியங்களை ஆராய்ந்து முடிவு கட்டுவதற்கும், இப்போது நேரமில்லை. மீன மேஷம் பாராமல், சகுனமும் சகுனத் தடையும் பாராமல், விசாரிக்க வேண்டியதை உடனே விசாரித்து, செய்ய வேண்டியதை உடனே செய்ய வேண்டும்...

ஆகவே அன்று பிற்பகலிலேயே இளைய பிராட்டி சின்னப் பழுவேட்டரையரின் மாளிகைக்கு வருவதாகச் சொல்லி அனுப்பி விட்டுச் சென்றாள். அந்த மாளிகையின் அந்தப்புர மாதர்கள் இளைய பிராட்டியை ஆர்வத்தோடு வரவேற்றார்கள். அன்பைச் சொரிந்து, உபசரித்தார்கள். இளவரசி அவர்களுடன் அளவளாவிச் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்த பிறகு சித்திர மண்டபத்துக்குச் சென்றாள். அங்கே சின்னப் பழுவேட்டரையர் காத்திருந்து இளைய பிராட்டியை வரவேற்று, மண்டபத்தில் தீட்டியிருந்த சித்திரங்களை விளக்கிக் கூற முற்பட்டார். குந்தவையும் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் வந்தாள்.

கடைசிச் சித்திரத்தண்டை வந்து நின்றதும், குந்தவை காலாந்தக கண்டரை ஏறிட்டுப் பார்த்து, "ஐயா! பழுவேட்டரையர்கள் பரம்பரையாகச் சோழ குலத்துக்கு ஒப்பற்ற சேவை புரிந்து வந்திருக்கிறார்கள்!" என்றாள்.

"அம்மையே! அது எங்கள் பாக்கியம்" என்றார் காலாந்தக கண்டர்.

"அந்த சேவைக்கெல்லாம் ஈடாகக் கூடியது இந்தச் சோழ சாம்ராஜ்யந்தான் என்பதில் சந்தேகமில்லை..."

"தாயே! இது என்ன வார்த்தை?"

"ஆனாலும் சக்கரவர்த்தியின் ஆயுட்காலம் முடிந்து கைலாச பதவியை அடையும் வரையில் தாங்கள் காத்திருக்கலாம் அல்லவா? சாம்ராஜ்ய அதிகாரங்களைக் கைப்பற்றுவதற்கு இவ்வளவு அவசரப்பட வேண்டுமா?"

இந்த வார்த்தைகள் காலாந்தக கண்டரின் இருதயத்தில் கூரிய அம்புகளைப் போல் பாய்ந்தன என்பதை அவருடைய முகம் காட்டியது. அவரது நெற்றியில் வியர்வைத் துளிகள் துளித்து நின்றன. மீசை துடிதுடித்தது. கை கால்கள் வெடவெடத்து ஆடின.

காலாந்தக கண்டர் நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொண்டு குந்தவையைப் பார்த்து, "அம்மையே! இது என்ன இவ்வளவு உக்கிரம்? சொல்லம்பினாலேயே என்னை யமலோகத்துக்கு அனுப்பி விடுவதென்று உத்தேசமா...?" என்றார்.

"ஐயா! அத்தகைய சக்தி என்னிடம் இல்லை என்பது தங்களுக்கே தெரியும். காலாந்தகரிடம் அணுக யமனே பயப்படுவானே? என் போன்ற பேதைப் பெண்ணால் அது முடியுமா?"

"அம்மணி! இத்தகைய கொடிய வார்த்தைகளைச் சொல்வதைக் காட்டிலும் பழுக்கக் காய்ச்சிய ஈயத்தை என் காதில் தாங்கள் ஊற்றலாம்! தேவி இவ்வளவு மறக் கருணை காட்டும்படி அடியேன் என்ன தவறு செய்தேன்?"

"தங்கள் தவறைப் பற்றிச் சொல்ல நான் யார்? என்னுடைய தவறு இன்னது என்பதைத்தான் தாங்கள் சொல்ல வேண்டும். என் தந்தையின் நோயைத் தீர்ப்பதற்கு மூலிகை கொண்டு வருவதற்காக

ஆள் அனுப்பியது என் பேரில் தவறா?"

"இல்லை, அம்மணி, அது ஒரு நாளும் தவறாகாது."

"பழையாறை வைத்தியர் மகனைக் கோடிக் கரைக்கு மூலிகை கொண்டு வருவதற்காக நான் அனுப்பினேன் என்பது தங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும், அம்மணி!"

"இன்றைய தினம் அந்த வைத்தியர் மகனைக் கயிற்றால் கட்டி வீதியில் உம் குதிரை வீரர்கள் இழுத்துக் கொண்டு வந்ததைப் பார்த்தேன். கட்டளையிட்டது தாங்கள் தானே? அவனை அனுப்பியவள் நான் என்று தெரிந்து தானே இந்த ஏற்பாடு செய்தீர்?"

"ஆம், பிராட்டி! ஆனால் அவன் ஒற்றன் என்பது தெரியாமல் தாங்கள் அனுப்பியிருக்கலாம் அல்லவா?"

"பழையாறை வைத்தியர் மகனாவது? ஒற்றனாவது? அந்தக் கதையை என்னை நம்பச் சொல்கிறீரா?"

"தாயே! அவனே ஒப்புக் கொண்டிருந்தால் நம்ப வேண்டியது தானே?"

இளவரசி சிறிது திடுக்கிட்டு, "அவனே ஒப்புக் கொண்டானா? அது எப்படி? என்னத்தை ஒப்புக் கொண்டான்?" என்று கேட்டாள்.

"தன்னோடு வந்த இன்னொருவன் ஒற்றன் என்று இவன் ஒப்புக் கொண்டான். அந்த இன்னொருவன் மூலிகைக்காக உண்மையில் பிரயாணம் புறப்படவில்லையென்றும், இலங்கையில் யாருக்கோ கடிதம் கொண்டு





சென்றதாகவும் இவன் ஒப்புக் கொண்டான்..."

"இவன் பெரிய மூடன்; ஏதாவது உளறியிருப்பான். இவனுடன் சென்ற இன்னொரு ஆளையும் அனுப்பியவள் நான்தான். அது தங்களுக்குத் தெரியும் அல்லவா?"

"தெரியும், தாயே! ஆனால் தங்களை அந்த மனிதன் ஏமாற்றி விட்டான் என்பதும் தெரியும். வந்தியத் தேவன் என்னும் பெயருடைய அவ்வாலிபன் உண்மையில் ஓர் ஒற்றன்தான்...."

"இல்லவே இல்லை. அவன் காஞ்சி புரத்திலிருந்து என் தமையன் எழுதிய ஓலையைக் கொண்டு வந்தவன்."

"இளவரசி! அவன் சக்கரவர்த்திக்கும் இளவரசரிடமிருந்து ஓலை கொண்டு வந்தான். அதனால் என்ன? ஒற்றர்கள் இப்படி ஏதாவது ஓர் உபாயத்தைக் கடைப் பிடித்துத் தானே தங்கள் வேலையைச் செய்ய வேண்டும்?"

"ஐயா! வந்தியத்தேவன் ஒற்றன் என்பதற்கு ருசு என்ன?"

"அவன் ஒற்றன் இல்லா விட்டால் இராஜபாட்டையில் நடப்பதை விட்டுக் குறுக்கு வழியில் நடப்பானேன்? குடந்தை ஜோதிடரிடம் போய்ச் சக்கரவர்த்தியின் ஜாதக பலனைப் பற்றிக் கேட்பானேன்?"

"சக்கரவர்த்தியின் ஜாதகத்தைப் பற்றி நான் கூடக் குடந்தை ஜோதிடரிடம் கேட்டேன். அதனால் என்ன?"

"சக்கரவர்த்தியின் செல்வப் புதல்வியாகிய தாங்கள் கேட்பது வேறு. சம்பந்தமில்லாத யாரோ வழிப்போக்கன் கேட்பது வேறு. பகையரசரின் ஒற்றனாயிருந்தால்தான் அப்படி விசாரிக்கத் தோன்றும்."

"இது தங்கள் ஊகம். வேறு காரணம் உண்டா?"

"பகிரங்கமாக என்னுடைய அனுமதி கேட்டுப் பெற்றுக் கொண்டு தஞ்சைக் கோட்டைக்குள் வந்திருக்கலாம். அப்படிச் செய்யாமல் பழுவூர் முத்திரை மோதிரத்தைக் காட்டிவிட்டு ஏன் நுழைய வேண்டும்? பெரிய பழுவேட்டரையர் கொடுத்தார் என்று ஏன் பொய் சொல்ல வேண்டும்?"

"முத்திரை மோதிரம் பின்னே யார் கொடுத்தார்களாம்!"

"அது இன்னும் தெரியவில்லை. கண்டு பிடிக்க வேண்டும்."

"அதைக் கண்டு பிடிக்க முடியாமல் உங்கள் ஆட்கள் என்ன செய்தார்கள்?"

"அம்மணி, என்னுடைய ஆட்கள் மந்திரவாதிகள் அல்ல. ஒற்றனைக் கண்டு பிடித்துக் கேட்டுத் தானே முத்திரை மோதிரம் எப்படி அவனிடம் வந்தது என்று தெரிந்து கொள்ள முடியும்?"

"அவன் உண்மையைச் சொல்லுவான் என்பது என்ன நிச்சயம்?"

"உண்மையைச் சொல்லும்படி செய்வதற்கு வழிகள் இருக்கின்றன, தாயே! பாதாளச்சிறை இருக்கவே இருக்கிறது. ஒற்றனுக்கு இதுவும் தெரிந்திருக்கிறது. அதனால்தான் மறுபடியும் தலைமறைவாகி இரவுக்கிரவே கோட்டையிலிருந்து தப்பி ஓடிவிட்டான். சம்புவரையர் மகனையும் முதுகில் குத்தி விட்டு ஓடி விட்டான்!"

"அவன்தான் குத்தியவன் என்பதற்கு என்ன அத்தாட்சி?"

"கந்தமாறன் கூறியதுதான்."

"அது போதாது! அவன் கந்த மாறனைக் குத்தவில்லையென்று நான் சொல்லுகிறேன்."

"தாயே! தாங்கள் அருகில் இருந்து பார்த்தீர்களா?"

"பார்க்கவில்லை. ஆனால் ஒருவன் முகத்தைப் பார்த்து அவன் குற்றவாளியா, இல்லையா என்பதை என்னால் நிர்ணயிக்க முடியும்."

"அந்தப் பொல்லாத ஒற்றன் பாக்கியசாலி. தங்களுடைய நல்ல அபிப்பிராயத்தை எப்படியோ கவர்ந்து விட்டான். அந்தப் பாக்கியம் எனக்குக் கிட்டவில்லையே?"

"ஐயா! அவனை மறுபடியும் ஒற்றன் என்று ஏன் சொல்கிறீர்?"

"தாயே! அவன் ஒற்றன் இல்லாவிட்டால் கூத்தாடிகளுடன் சேர்ந்து முகமூடி போட்டுக் கொண்டு ஏன் பழையாறையில் நுழைகிறான்? மாறுவேடம் போட்டுக் கொண்டு ஏன் கோடிக்கரைத் துறைமுகத்துக்குப் பிரயாணமாகிறான்? அவன்

ஒற்றன் இல்லாவிட்டால் என் ஆட்களைக் கண்டதும் ஒரு நாள் முழுவதும் கோடிக் கரையில் ஒளிந்து திரிவானேன்? இரவானதும் படகில் ஏறி இலங்கைத் தீவுக்குப் போவானேன்?"

"ஓகோ! அவன் படகில் ஏறித் தப்பித்துப் போய்விட்டானா? உங்கள் ஆட்கள் அவனைப் பிடிக்க முடியவில்லையா?" என்னும் குந்தவையின் கேள்விகளில் குதூகலம் தொனித்தது.

"ஆம், தாயே! அந்த மாயாவி ஒற்றன் என் ஆட்களை ஏமாற்றி விட்டுப் போய் விட்டான். இந்த முட்டாள்கள் அவனை விட்டுவிட்டு வைத்தியர் மகனைப் பிடித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள்..."

"ஐயா! ஒற்றன் எப்படியாவது போகட்டும். வைத்தியர் மகனை நான் அனுப்பி வைத்தேன். அவன் குற்றமற்றவன் என்பது நிச்சயம். அவனை உடனே விடுவித்தே ஆக வேண்டும்."

"அம்மணி! இவன் ஒற்றனில்லாவிட்டாலும் ஒற்றனுக்கு உடந்தையாயிருந்திருக்கிறான். ஏதேதோ கட்டுக் கதைகளைச் சொல்லி என் ஆட்களை ஏமாற்றியிருக்கிறான். ஒற்றன் ஒளிந்திருப்பதற்கும் தப்பிப் படகிலேறிச் செல்வதற்கும் இவன் உதவி செய்திருக்கிறான்..."

"அதெல்லாம் எப்படியிருந்தாலும் வைத்தியர் மகனை விடுதலை செய்தே யாக வேண்டும்..."

"அந்த பொறுப்பை நான் ஏற்றுக் கொள்ளச் சித்தமாயில்லை.. நாட்டின் நாலு புறமும் அபாயங்கள் சூழ்ந்திருக்கின்றன. பகைவர்கள் படையெடுக்கக் காத்திருக்கிறார்கள். வீர பாண்டியனுடைய ஆபத்துதவிச் சேவகர்கள் சோழ குலத்தைக் கருவறுக்கச் சபதம் செய்திருக்கிறார்கள். நாடெங்கும் சதிகள் நடந்து வருகின்றன..."

"ஐயா! சதி செய்பவர்கள் எல்லோரையும் சிறையில் போடுவதாயிருந்தால் சிறையில் இடமே இராது."

"இடம் இருக்கும் வரையில் போடலாம் அல்லவா?"

"உண்மைச் சதியாளரைப் போடுவதற்குக் கொஞ்சம் இடம் மிஞ்சட்டும். ஐயா! வைத்தியர் மகனை உடனே விடுதலை செய்யுங்கள்!"

"அந்தப் பொறுப்பை நான் ஏற்க முடியாது, தாயே!"

"சக்கரவர்த்தியின் கட்டளை வந்தால் செய்வீரா! அதையும் புறக்கணிப்பீரா?"

"அம்மணி! இதற்குச் சக்கரவர்த்தியின் கட்டளை தேவையில்லை. இளைய பிராட்டியின் விருப்பம் எதுவோ, அதுவே சக்கரவர்த்திக்கு வேதக் கட்டளை என்பது உலகமறிந்த செய்தி. இதோ பாதாளச் சிறையின் சாவியைத் தங்கள் கையில் ஒப்புவித்து விடுகிறேன். தாங்களே சென்று கதவைத் திறந்து விடுதலை செய்யுங்கள். இன்னும் யாரையாவது விடுதலை செய்வதாயிருந்தாலும் தாராளமாய்ச் செய்யுங்கள். அதனால் வரும் லாப நஷ்டங்களுக்குப் பொறுப்பு தங்களது!..."

இவ்வாறு சொல்லிக் காலாந்தக கண்டர் ஒரு பெரிய சாவியை எடுத்துக் கொடுத்தார். குந்தவை பொங்கி வந்த தன் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, "ஆகட்டும் ஐயா! லாப நஷ்டங்களுக்குப் பொறுப்பு நானே ஏற்கிறேன்!" என்று சொல்லிச் சாவியைப் பெற்றுக் கொண்டாள்.

"இந்தச் சோழ சாம்ராஜ்யத்துக்கு ஏதாவது பெருந்தீங்கு நேர்ந்தால், அது இரண்டு பெண்களினால்தான் வந்ததாகும்" என்றார் தஞ்சைக் கோட்டைத் தலைவர்.

"நான் ஒருத்தி; அந்த இன்னொரு பெண் யாரோ?"

"பழுவூர் இளையராணி நந்தினி தேவிதான்!"

குந்தவை புன்னகை புரிந்து "சோழ சாம்ராஜ்யத்தின் சர்வாதிகாரியுடன் என்னைக் கொண்டு போய்ச் சேர்க்கிறீர்களே? இது காதில் விழுந்தால் பெரிய பழுவேட்டரையர் தங்களைத் தேசப் பிரஷ்டம் செய்து விடுவார்!" என்று சொன்னாள்.

"ரொம்ப நல்லதாய்ப் போய்விடும்! அதற்கு நான் காத்திருக்கிறேன்" என்றார் சின்னப் பழுவேட்டரையர்.

(தொடரும்)

யோக்கியர்களும்

காலம் கலிகாலம்; நல்லவர்களுக்குப் பொல்லாத காலம்; அமெரிகளும், அநேகமாய் அயோக்கியர்களும் ஆதிக்கம் செலுத்தும் காலம்; சர்ச்சில்களும் சாம்ராஜ்ய வாதிகளும் கொம்மாளம் அடிக்கும் காலம்; சாஸ்திரிகளும் சவர்க்கார்களும் காந்தியைச் சபிக்கும் காலம்; – இப்பேர்ப்பட்ட காலத்திலும் ஏன் பொழுது விடிகிறது, ஏன் மழை பெய்கிறது, ஏன் பூமி விளைகிறது என்று கேட்டால், உலகத்தில் இந்தக் காலத்திலும் கூட யோக்கியர்கள் சிலர் உளர் போலும்! அவர்கள் உண்மையைச் சொல்வார்கள் போலும்! அந்த உண்மை தப்பித் தவறிச் சில சமயம் பத்திரிகைகளிலும் வந்து விடும் போலும்! தந்திக் கம்பிகளும், கம்பியில்லாத் தந்திகளும் சில சமயம் உண்மையைக் கூட ஏற்றுக் கொண்டு அனுப்பும் போலும்!

– இந்த மாதிரி உற்சாகமளிக்கும் எண்ணங்கள் நமக்கு உண்டாகியிருப்பதற்குக் காரணம் என்னவென்பதை நேயர்கள் அறிவார்கள். அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டின் சொந்தப் பிரதிநிதியாக இந்தியாவுக்கு வந்திருந்த பிலிப்ஸ் கடித மர்மம் வெளியானதும், அதனால் பிரிட்டிஷ் குட்டு உடைபட்டதும், அமெரிக்காவில் இதையெல்லாம் பற்றி ஏக அமர்க்களமாயிருப்பதுந்தான்.

பிரான்ஸில் இறங்கிய அமெரிக்க சைன்யங்கள் படுவேகமாக முன்னேறி பெல்ஜியத்தை விடுதலை செய்து ஜெர்மனியின் எல்லைக்குள்ளேயே புகுந்திருக்கின்றன. தலை தெரியாத பெருமையையும் கால் தரியாத பூரிப்பையும் அளிக்கக் கூடிய மேற்படி வெற்றிச் செய்திகளுக்கிடையே, அமெரிக்கப் பத்திரிகைகளில் இந்தியப் பிரச்னையும் அடிபடுகிறது. அதைப் பற்றிக் காரசாரமான விவாதம் நடக்கிறது; அமெரிக்க ஸெனட் சபையில் தீர்மானமும் வரப்போகிறது என்றால், உலகத்தில் யோக்கியர்கள் சிலரும் உளர் என்ற முடிவுக்கு நாம் வந்தே தீரவேண்டியிருக்கிறது.

சர்ச்சில்களும், அமெரிகளும் "உலகத்தில் யோக்கியர்கள் அநாவசியம்" என்று என்னதான் தீர்மானமான அபிப்பிராயம் கொண்டிருந்த போதிலும், அவர்கள் விருப்பத்தின்படி எல்லாக் காரியங்களுமே நடப்பதாயில்லை. "நாங்கள் இருக்கும் இடத்தில் யோக்கியர்கள் வேண்டாம்" என்று வேண்டுமானால் அவர்கள் சொல்லலாம்; "எங்களுடைய இங்கிலாந்தில் பிலிப்ஸ் போன்றவர்களுக்கு இடமில்லை" என்று அவர்கள் வற்புறுத்தலாம். ஆனால், உலகத்திலேயே யோக்கியர்கள் இருக்கக் கூடாது என்று அவர்கள் கண்டிப்புச் செய்யும்படியான காலம் நல்ல வேளையாக இன்னும் ஏற்படவில்லை. அதுவரையில் உலகத்துக்கு க்ஷேமந்தான்.

இந்தியா தேசம் இந்தியர்களுக்குச் சொந்தமானது.

இந்தியாவை இந்தியர்கள் ஆள வேண்டியது நியாயம்; இந்தியாவில் இந்தியர்கள் சுதந்திரமாய் வாழ வேண்டியது தர்மம்.

இந்தியா, பிரிட்டிஷாருடைய சொத்து அல்ல. இந்தியாவை பிரிட்டிஷார் ஆளுவதற்கு எந்தவித நியாயமும் இல்லை; அது தர்மமும் இல்லை.

இவையெல்லாம் யாதொரு சந்தேகத்துக்கும் இடமில்லாத உண்மைகள்.

ஆனாலும், இந்த உலகத்தில் எப்போதும் உண்மை மேலோங்கி நிற்பதில்லை; நியாயமும் தர்மமும் தலை நிமிர்ந்து நிற்பதில்லை.



உளர்!

தர்ம நியாயப்படி உலகத்தில் எல்லாம் நடப்பதாயிருந்தால், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியே ஏற்பட்டிராது.

உலகத்தில் உண்மையை நிலை நாட்டுவதற்குப் படாத பாடு படவேண்டியிருக்கிறது. நியாயத்தையும் தர்மத்தையும் ஸ்தாபிப்பதற்குப் பிரம்மப் பிரயத்தனம் செய்ய வேண்டியிருக்கிறது.

ஆகவே, உலகத்தில் யாராவது உண்மையைச் சொன்னார்கள், நியாயத்தையும் தர்மத்தையும் ஆதரித்துப் பேசினார்கள் என்று கேட்டால் நாம் சந்தோஷப்பட வேண்டியதுதான். அதிலும், பிரிட்டனுக்கு விரோதமான உண்மையைச் சொன்னார்கள், இந்தியா விஷயத்தில் தர்ம நியாயத்தைச் சொன்னார்கள் என்றால் இரட்டிப்புச் சந்தோஷப்பட வேண்டும்.

அப்படிப்பட்ட உண்மையும் தர்ம நியாயமும் அமெரிக்காவில் அமெரிக்கர்களால் எடுத்துச் சொல்லப்பட்டது என்றால், நாம் மூன்று மடங்கு சந்தோஷமடைய இடமிருக்கிறது.

அமெரிக்காவையும் அமெரிக்கர்களையும் பற்றி நாம் ஏன் இவ்வளவு கவனம் செலுத்துகிறோமென்றால், அதன் காரணத்தையும் இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்பே திருவள்ளுவர் தமது குறளில் சொல்லியிருக்கிறார். சென்ற இதழில்

அமரர் கல்கி

நாம் எடுத்துக் காட்டியிருந்த.

"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்"

என்னும் குறளில், துணை வலியை எதுகையிலும் மோனையிலும் வைத்து முக்கியம் கொடுத்திருப்பதைக் கவனிக்கவும். சண்டையில் இறங்குகிறவர்கள் சிநேகிதர்களின் மூலம் தமக்குக் கிடைக்கக் கூடிய பலத்தையும் நன்கு ஆராய்ந்து தெரிந்து கொள்வது அவசியம் என்பது வள்ளுவர் வாக்கு.

பெரிய தேசங்களுக்குள் நடக்கும் யுத்தங்களுக்கு மேற்படி குறள் பொருந்துவது போலவே, இந்தியாவின் சுயராஜ்யப் போராட்டத்துக்கும் பொருத்தமாயிருக்கிறது.

பிரிட்டிஷ் இராஜ தந்திரிகளுடன் போராடி இந்தியா சுயராஜ்யம் பெற்றாக வேண்டும்.

பிரிட்டிஷாரின் பலம் எவ்வளவு, அவர்களுடைய பிடிவாதம் எவ்வளவு, அவர்களுடைய இராஜதந்திர சாமர்த்தியம் எவ்வளவு – என்பதையெல்லாம் நாம் நன்கறிந்திருக்கிறோம்.

பிரிட்டிஷார், முந்நூறு வருஷத்துக்கு மேலாக உலகமெல்லாம் பரவிய

சாம்ராஜ்யத்தைக் கட்டி ஆண்டு அநுபவப்பட்டவர்கள். "பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைக் கலைத்து விடும் உத்தேசம் எனக்குக் கிஞ்சித்தும் கிடையாது" என்று சர்ச்சிலும் பட்டவர்த்தனமாகச் சொல்லியிருக்கிறார். பிரிட்டிஷாரின் பொது மனோபாவத்தைத்தான் அவர் வெளியிட்டிருக்கிறார்.

இப்படிப்பட்ட பிடிவாதமும் சாம்ராஜ்ய ஆசையும் இராஜ தந்திர சாமர்த்தியமும் உள்ளவர்களிடமிருந்து இந்தியர்களாகிய நாம் சுதந்தரம் பெற்றாக வேண்டும்.

அப்பேர்ப்பட்ட காரியத்துக்கு நம்மிடமுள்ள பலம் எவ்வளவு என்றும் நமக்குத் தெரியும். நூற்றறுபது வருஷத்துக்கு மேலாக அன்னிய ஆட்சியின் கீழ் இருந்ததினால் நம்மில் பலருக்குச் சுதந்தர உணர்ச்சியே அற்றுப் போயிருக்கிறது. சுதந்தர உணர்ச்சி இருந்தாலும் அதற்காகப் போராடுவதற்கு வேண்டிய சக்தியும் நீடித்த மன உறுதியும் உள்ளவர்கள் வெகு சிலர்தான். இந்தச் சிலருடைய முயற்சிக்கும் இடையூறாகச் சமூக வேற்றுமைகளும் சாதி பேதங்களும் குறுக்கே நிற்கின்றன.

மூன்று வருஷத்துக்கு முன்பு யுத்த நிலைமையில் பெரும் நெருக்கடி ஏற்பட்டிருந்தபோது, மேற்படி இடையூறுகளையெல்லாம் கடந்து இந்தியா சுதந்தரம் அடையும் சந்தர்ப்பம் ஒன்று ஏற்பட்டிருந்தது. அதை எப்படியோ நாம் கைநழுவ விட்டு விட்டோம்.

இப்போதோ, பிரிட்டிஷாரின் கட்சி மேலோங்கி, ஜயத்துக்கு மேல் ஜயம் அடைந்து வருகிறார்கள்.

ஐரோப்பிய யுத்தம் வெகு சீக்கிரத்தில் முடிந்துவிடும் போலிருக்கிறது.

இந்த நிலைமையில் பிரிட்டிஷாரிடம் போராடி இந்தியா சுதந்தரம் பெறுவதற்குத் துணை வலியைப் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டியது அத்தியாவசியமாகும்.

அப்படித் துணைவலி தேடும்போது எங்கே தேடலாம்?

ஜெர்மனியிலும் ஜப்பானிலும் தேடலாமென்று ஒரு காலத்தில் சிலர் நினைத்தார்கள். பாவம்! ஸுபாஷ் சந்திரபோஸ் கூட அந்த நோக்கத்துடன் இந்தியாவை விட்டு வெளியேறினார். அது எவ்வளவு பெரிய தவறு என்பது இப்போது வெட்ட வெளிச்சமாகி விட்டது.

பண்டித ஜவாஹர்லால்ஜி முதலிய நமது காங்கிரஸ் தலைவர்கள் சிலர் சீனா நாட்டில் சிநேகிதர்களைத் தேடினார்கள். இது நல்ல காரியந்தான். ஆனால், சீனாவே மற்ற தேசங்களின் உதவியை எதிர்பார்த்திருக்கும் நிலைமையில் அந் நாட்டினால் நமக்குப் பெரிய உதவி எதுவும் கிடைத்து விடாது.

அவ்விதமே ருஷியாவிலிருந்தும் நாம் உதவி எதிர்பார்க்க முடியாது. இந்தப் பயங்கரமான யுத்தத்திற்குப் பிறகு ருஷியர்கள், ஒரே சுடுகாடாய்ப் போன தங்கள் நாட்டைப் புனர் நிர்மாணம் செய்வதிலேயே பூரணமாய் ஈடுபட்டிருப்பார்கள். போதாததற்கு, போலந்துடனும் பால்கன் நாடுகளுடனும் அவர்கள் மல்லுக் கொடுத்துக் கொண்டிருக்க நேரும். இந்தியாவைப் பற்றிக் கவனம் செலுத்தவே அவர்களுக்கு நேரம் இராது.

எனவே, இந்தியாவுக்குச் சிநேகிதர்கள் வேண்டுமானால், அமெரிக்காவிலேதான் நாம் பார்க்க வேண்டும். இன்றல்ல, நேற்றல்ல, சுவாமி விவேகானந்தரின் காலத்திலிருந்து அமெரிக்காவில் இந்தியாவின் உண்மையான நண்பர்கள் சிலர் இருந்து வந்திருக்கிறார்கள். இன்றைக்கும் இருந்து வருகிறார்கள்.

இரண்டு வருஷத்துக்கு முன்பு பிரசித்தி பெற்ற "லைப்" பத்திரிகையின் ஆசிரியர் இந்தியப் பிரச்னையைத் தடபுடலாய்க் கிளப்பி, பிரிட்டிஷ் இராஜ தந்திரிகளைக் கிடுகிடுக்கச் செய்து விட்டதை நேயர்கள் அறிவார்கள்.

அமெரிக்காவின் அபிப்பிராயத்துக்கு நல்ல செல்வாக்கும் சக்தியும்

இருக்குமென்பதிலும் சந்தேகமில்லை. ஏனெனில், இந்த யுத்தத்தை இப்போது ஜயித்துக் கொண்டு வருகிறவர்கள் முக்கியமாக அமெரிக்கர்கள்தான்.

"அமெரிக்க சைன்யங்கள் பெல்ஜியத்தில் புகுந்து விட்டன", "அமெரிக்கப் படைகள் ஆண்ட்வர்ப்பைக் கைப்பற்றின", "அமெரிக்கர்கள் ஜெர்மனிக்குள் கால் வைத்து விட்டார்கள்" என்பது போன்ற செய்திகளையே பத்திரிகைகளில் படிக்கிறோம்.

இன்று ஜெர்மானியரை ஜயிக்கும் அமெரிக்கர்தான் நாளைக்கு ஜப்பானையும் ஜயிக்கப் போகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இவ்விதம் ஜயத்துக்குப் பெரிதும் காரண பூதர்களாயிருந்த அமெரிக்கர்களின் அபிப்பிராயத்தைச் சமாதான மகாநாட்டிலோ அதற்குப் பிறகோ பிரிட்டிஷார் சுலபமாக உதறித் தள்ளிவிட முடியாது.

எனவே, அமெரிக்காவில் இந்தியாவைப் பற்றிய சிநேகபாவம் எவ்வளவுக்கு வளர்கிறதோ, அவ்வளவுக்கு நமக்கு நன்மை, இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்துக்கும் பலம் என்பதில் சந்தேகமில்லை.

இதையெல்லாம் தீர்க்க திருஷ்டியுடன் முன் கூட்டியே உணர்ந்த தலைவர் ஒருவர் நமது தமிழ் நாட்டில் இருந்தார் என்பதை நினைக்க நமக்கு எவ்வளவோ பெருமையாயிருக்கிறது. காங்கிரஸ் தலைவர்கள் எல்லாம் சிறையில் அடைக்கப்பட்டுத் தேசத்தில் மகத்தான சோர்வு குடிகொண்டிருந்த காலத்தில் ராஜாஜி மட்டும் சும்மா இல்லை. அமெரிக்காவுக்கு இந்தியாவின் கட்சியை எடுத்துச் சொல்லும் காரியத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். அந்தக் காரியத்தை அவர் சென்னையிலிருந்தபடியே எவ்வளவு திறமையாகச் செய்தார் என்பதை, 1943 ஏப்ரல் 1உ வெளியான நமது "கல்கி" அட்டைப் படவிளக்கத்தில் நன்கு காணலாம். அதை அப்படியே இங்கு பிரகரிக்கிறோம்: –

" 'அமெரிக்காவில் இந்தியக் காங்கிரஸுக்கு ஒரு பிரசார ஸ்தாபனம் இருக்கிறது' என்று ஸர் ஸாபருல்லா கான் சொல்லுகிறார். இது உண்மையானால் அந்தப் பிரசார ஸ்தாபனத்தின் தலைமைக் காரியாலயம் தற்சமயம் தியாகராஜ நகர் பஸ்லுல்லா ரோட் 48-ம் நம்பர் வீட்டில்தான் இருக்க வேண்டும் என்று கருதுகிறோம்! இந்தக் காரியாலயத்தைத் தன்னந் தனியாக நடத்திக் கொண்டிருப்பவர் ராஜாஜிதான். அமெரிக்கப் பத்திரிகைப் பிரதிநிதிகள் சுமார் நூறு பேர் இன்று இந்தியாவில் இருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் இந்தியக்

தீபாவளி உண்டா?

இந்த வருஷம் தீபாவளிப் பண்டிகை உண்டா, இல்லையா? கட்டாயம் உண்டு. அப்படியானால், "கல்கி" தீபாவளி மலரும் அவசியமாக உண்டு. இந்த வருஷத்துத் தீபாவளி மலரைப் பற்றி இப்போது நாம் சொல்லக் கூடியதெல்லாம் என்ன வென்றால், தோற்றத்திலும் விஷயத்திலும் முன் இரண்டு இதழ்களையும் இது தூக்கியடிக்கும் என்பதுதான். இதைப் பற்றி நிச்சயமாகத் தெரிந்து கொள்ள விரும்பினால், ஆங்காங்குள்ள "கல்கி" ஏஜெண்டுகளிடம் இப்போதே உங்கள் ஆர்டரைப் பதிவு செய்துவிட வேண்டும். விலையைப் பற்றிக் கவலைப் பட வேண்டாம். மலரைப் பார்த்ததும் என்ன விலை கொடுத்தாலும் தகும் என்று நீங்களே சொல்லப் போகிறீர்கள். பின், விலையைப் பற்றி இப்போது என்னத்திற்கு அவசரம்?

(கல்கி, செப்டெம்பர் 3, 1944 இதழில் 'என்ன சேதி?'யில் அமரர் கல்கி எழுதியது)

கோரிக்கையின் நியாயத்தைத் தெளிவாக விளங்கச் செய்பவை மேற்படி 48-ம் நம்பர் வீட்டிலிருந்து இடை விடாமல் வெளியாகும் ராஜாஜியின் அறிக்கைகளாகும். அவர்களில் பலர் ராஜாஜியை நேரில் பார்த்தும் விஷயங்களைத் தெளிவு படுத்திக் கொள்கிறார்கள். சென்ற வாரத்தில் மேற்படி 48-ம் நம்பர் வீட்டுக்கு அமெரிக்கப் பிரஸிடெண்டின் பிரதிநிதி மிஸ்டர் வில்லியம் பிலிப்ஸ் விஜயம் செய்தபோது எடுக்கப்பட்ட இன்னும் சில படங்களை உள்ளே காணலாம்."

மிஸ்டர் வில்லியம் பிலிப்ஸின் சகோதர தேசத்தவரான டைரக்டர் டங்கன் அப்போது எடுத்த படங்களில் வேறு சிலவற்றை இந்த இதழிலும் வெளியிட்டிருக்கிறோம்.

மிஸ்டர் வில்லியம் பிலிப்ஸ் ராஜாஜியை அவருடைய இல்லத்தில் சந்தித்துப் பேசிய பிறகுதான், இப்போது பத்திரிகைகளில் தடபுடல் படும் பிரசித்தி பெற்ற கடிதத்தை அமெரிக்க பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட்டுக்கு எழுதினார் என்பதை நேயர்கள் கவனிக்க வேண்டும்.

பிரஸிடெண்ட் ரூஸ்வெல்டின் சொந்தப் பிரதிநிதிக்கு ராஜாஜி ஒரு டம்ளர் இளநீர் கொடுத்துவிட்டு, அதே சமயத்தில் அவர் மனத்தில் இந்தியாவின் கட்சியையும் தெளிவாகப் பதியவைத்து விட்டார் என்பதில் சந்தேகமில்லை.

பிலிப்ஸ் கடிதத்தின் விவரத்தைத் தினசரிப் பத்திரிகைகளில் நேயர்கள் படித்திருப்பார்கள், இந்தியாவின் சுதந்தரத்துக்குக் குறிப்பிட்ட தேதியை நிர்ணயித்து விட வேண்டுமென்றும், அதற்கிடையில் தேசியத் தலைவர்கள் அடங்கிய அரசாங்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்றும், அப்போதுதான் ஜப்பானுடன் நடத்தும் யுத்தத்தில் இந்தியர்கள் முழு மனதுடன் ஈடுபடுவார்கள் என்றும், இது விஷயத்தில் தலையிட்டு பிரிட்டிஷாரை வற்புறுத்த அமெரிக்காவுக்குப் பாத்தியதை உண்டு என்றும் மிஸ்டர் பிலிப்ஸ் வற்புறுத்தியிருக்கிறார்.

உண்மையும், நியாயமும் பொருந்திய இந்த விஷயங்களை வைத்துக் கொண்டு அமெரிக்காவில் ஸெனட்டர் சாண்ட்லர் முதலிய சிலர் பெருங் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். சில அமெரிக்கப் பத்திரிகைகளும் இது விஷயத்தை அமர்க்களப்படுத்தி வருகின்றன.

மேற்படி பிலிப்ஸ் கடித வெளியீடும், அது சம்பந்தமான கிளர்ச்சியும் இந்தியாவுக்கு அநுகூலமானவை என்பதில் ஐயமில்லை. இதெல்லாம் பிரிட்டிஷ் இராஜ தந்திரிகளுக்கு வேப்பங் காயை விடக் கசப்பாக இருப்பதிலும் ஆச்சரியம் கிடையாது.

ஆனால், இதனாலேயே இந்தியா சுதந்தரம் அடைந்துவிடப் போகிறது, நாம் கையைக் கட்டிக் கொண்டு சும்மா உட்கார்ந்திருக்கலாம் என்று எண்ணினோமானால் மறுபடியும் ஏமாந்து போகும்படிதான் நேரிடும்.

அமெரிக்க நண்பர்களுடைய கிளர்ச்சியும் உதவியும் மிகவும் உபயோகமானவைதான். ஆனால் அந்தத் துணைவலியை உபயோகப்படுத்திக் கொள்வது நமது சொந்த பலத்தைப் பொறுத்திருக்கிறது.

பிடிவாத பிரிட்டிஷாரிடமிருந்து நாம் சுதந்தரம் பெற வேண்டுமானால், அதற்கு நாம் உபயோகிக்கக் கூடிய நமது சொந்த பலம், ஒற்றுமை பலம் ஒன்றுதான்.

அந்த அடிப்படையான பலம் இருந்தால்தான், அமெரிக்கா முதலிய இடங்களிலிருந்து கிடைக்கும் துணை பலத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

ஆகையினால்தான், இம்மாதம் 9உ பம்பாயில் நடக்கும் காந்தி-ஜின்னா சந்திப்பு வெற்றியளிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

அதனாலேயே, அந்தச் சந்திப்புக்கு இடையூறு செய்கிறவர்கள் எப்பேர்ப்பட்ட தேசத் துரோகமான காரியம் செய்கிறார்கள் என்பதை எண்ணிப் பெரிதும் வருந்துகிறோம். ●

(கல்கி, செப்டெம்பர் 10, 1944)


The romance of an English country garden
Yardley PETUNIA perfumed talc
Yardley
Now In India
Yardley
PERFUMED TALC
English Lavender
Discover the international floral delights from Yardley's luxury perfumed Talc Collection. Each with a distinctive, lingering perfume that's very English. And very Yardley.
YARDLEY
LONDON
International Quality Perfumes • Colognes • After Shaves • Perfumed Talcs


Ruchi
ருசி ஊறுகாய்கள்
வீட்டில் செய்த
சுவை போல
Ruchi
Ruchi
RUCHI AGRO PRODUCTS PRIVATE LIMITED
50, GIRIAPPA ROAD, CHENNAI - 600 017. PH. 8269290, 8269438, 8241348



சாதிக்கணும்னா எதையாவது விட்டுக்கொடுக்கணும்!

"இரவு பகல் பார்க்காம செய்ற வேலையிது. போன மாசம் ஒருநாள் திடீர்னு 'ஆம்னி பஸ்' செக்கிங் போட்டுட்டாங்க. பெரம்பலூர்ல, இரவு 10 மணியில் இருந்து அடுத்த நாள் காலை ஏழு மணி வரைக்கும் நட்ட நடு ரோட்டுல நின்னோம், நானும் என்னுடன் வந்தவங்களும்!"

ஜெயகௌரி – தமது பெயரிலேயே வெற்றியை வைத்திருக்கும் இந்த சேலத்துப் பெண்தான் இந்தியாவிலேயே வாகன ஆய்வாளராகப் (Break Inspector) பொறுப்பேற்றிருக்கும் முதல் பெண்.

வெள்ளைச் சட்டையும் காக்கி பேண்ட்டுமாய் மிடுக்கோடு கரூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உட்கார்ந்திருக்கும் ஜெயகௌரியின் அம்மா சுசிலா சரஸ்வதி பள்ளி ஆசிரியை. அப்பா வேலாயுதம் ஓய்வு பெற்ற வங்கி உதவி மேலாளர். பெற்றோர் சேலத்தில் என்பதால் தற்போது கரூரில் ஹாஸ்டல் வாசம் அனுபவிக்கிறார் ஜெயகௌரி.

"எதையாச்சும் சாதிக்கணும்னு எண்ணம் இருந்தது. டி.எம்.ஈ. படிக்கும் போதே வாகன ஆய்வாளராக வேண்டும் என்ற ஆசை இருந்தது. மேலும், அந்தப் பதவியில் பெண்களுக் கான 30 சதவிகித ஒதுக்கீடு இருப்பதும் அதற்கு இதுவரை எந்தப் பெண்ணும் அப்ளை பண்ணலைன்னும் தெரிஞ்சது. 94-ல் பரீட்சை எழுதினேன். கிடைக்கல. அப்புறம் 95-ல் மீண்டும் பரீட்சை எழுதினேன். முதல்ல தொழில் வணிகத் துறையிலே வேலை கிடைச்சது. 97-ல் தான் வாகன ஆய் வாளருக்கான நேர் முகத் தேர்வில் வெற்றி பெற்றேன். மூணு மாதம் சென்னையில் ட்ரைனிங். அப்புறம், இப்போ, இங்கே..."

கடகடவென ஒப்புவிக்கிறார் ஜெயகௌரி.

டி.எம்.ஈ. பிறகு மாலை நேர வகுப்பில் பி.ஈ. (மெக்கானிக்கல்) முடித்திருக்கும் இவர், தற்போது அண்ணாமலை பல்கலை கழகத்தில் எம்.பி.ஏ (அஞ்சல் வழியில்) சேர்ந்திருக்கிறார்.

"படிப்புன்னா எனக்கு மட்டுமில்லே, வீட்டிலுள்ள மத்தவங்களுக்கும் வெல்லக்கட்டி மாதிரி!"

வாகன ஆய்வாளராக வேண்டுமானால் குறைந்த பட்சம் டி.எம்.ஈ. (டிப்ளமா இன் மெக்கானிக்கல் எஞ்ஜினியரிங்) படித்திருக்க வேண்டும். கனரக வாகனங்களை நன்றாக ஓட்டத் தெரிந்திருக்க வேண்டும். தமிழ்நாடு அரசு தேர்வாணைக்குழு நடத்தும் தேர்விலும் தேர்வு பெற வேண்டும்.

இத்தனை தகுதிகளையும் கைவசமாக்கியிருக்கிறார் ஜெயகௌரி.

"இந்தியன் பட சின்ன கமல் (லஞ்சம் வாங்கிகுகிற) கேரக்டர் யாராவது இத்துறையில் உண்டா!" என்றால் கோபம் வருகிறது இவருக்கு.

"அப்படி எல்லாம் யாரும் இருக்க மாட்டாங்க. இந்தியன் படத்துல ரொம்ப ஓவரா பண்ணிட்டாங்க. இரவு பகல் பார்க்காம செய்ற வேலையிது. போன மாசம் ஒருநாள் திடீர்னு 'ஆம்னி பஸ்' செக்கிங் போட்டுட்டாங்க. பெரம்பலூர்ல, இரவு 10 மணியில் இருந்து அடுத்த நாள் காலை ஏழு மணி வரைக்கும் நட்ட நடு ரோட்டுல நின்னோம், நானும் என்னுடன் வந்தவங்களும்!"

"படிப்பு, பிடிச்ச வேலை... எப்போது கல்யாணம்?"

"அதைப் பத்தி இன்னும் நினைச்சுக் கூட பார்க்கல. சாதாரணப் பெண்ணா நான் இருக்க விரும்பல. என்னுடைய வேலை வித்தியாசமானது இரவு, பகல் கிடையாது. இதையெல்லாம் புரிஞ்சுக்கற ஒருத்தர்... அதை விடுங்க சார். இதுலயே சாதிக்க நிறைய இருக்கு. டிபார்ட்மெண்டல் தேர்வு எழுதணும். கிரேட் ஒன்னா ப்ரமோஷன் வாங்கி, கனரக வாகனங்களையும் செக் பண்ணணும்! - எதையாச்சும் சாதிக்கணும்னா எதையாச்சும் விட்டுக் கொடுக்கத்தான் வேணும் சார்!" என்று அழுத்தமாகச் சொன்னார் ஜெயகௌரி.

பேட்டி, படம் : **ஞானசேகர்**



இரண்டாக இருக்கும்படியான தன்மை எந்த மதத்திலே உண்டோ அது விசிஷ்டாத்வைதம். மத்வாசார்யர் இரண்டு விரல்களைக் காண்பித்தபடி இருப்பார் – ஜீவன் வேறு ஆத்மா வேறு என்பதை ஸ்பஷ்டமாகச் சொல்கிறார்.

எந்த மதத்திலே இரண்டானது இல்லையோ அது அத்வைதம்! இரண்டானது கிடையாது. பிரும்மம் ஒன்றுதான் சத்யம்.

விசிஷ்டாத்வைதம் என்பதும் அத்வைதம்தான்! ஆனால், இவைகளுடன் கூடிய அத்வைதம் – அவனை விட்டுப் பிரிக்க முடியாமல் சேர்ந்த அத்வைதம். பிரிக்க முடியாதது – சேர்ந்தேயிருப்பது...

இந்த உபன்யாஸத்துக்கு அங்கேயிருந்து இரண்டு பேர் வருகிறார்கள்.

''உபன்யாஸம் பண்ணிண்டிருக்காரே லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார், அவர் காதிலே குண்டலம் போட்டுக் கொண்டிருக்கிறாரே... அது ஏகமாக ஜொலிக்கிறதே... அது என்ன வைரக் கல்லா...'' என்கிறார் ஒருத்தர்.

''கிட்டே போய்ப் பார்ப்போம் வாரும்'' என்கிறார் இன்னொருத்தர்.

அவர்கள் இரண்டு பேரும் பேசியது என் காதிலே விழுந்துவிட்டது. ஒரு வேடிக்கை பண்ண வேண்டும் என்பதற்காக இந்த இரண்டு கடுக்கன்களையும் மறைத்து வைத்து விட்டேன். இரண்டு பேருமே கிட்டே வந்

தார்கள்.

'ஜ்வலிக்கிறதே' என்று சொன்னவரைப் பார்த்து மற்றவர் முழிக்கிறார்.

"ஜ்வலதே! ஜ்வலதே! என்றீரே, எங்கே ஜ்வலிக்கிறது? காதிலே ஒன்றையுமே காணுமே? என்ன ஜ்வலிக்கிறது?"

அதற்கு அவர் சொல்கிறார் - "சற்று முன் போட்டுக் கொண்டுதான் இருந்தார். எடுத்து வைத்துவிட்டார்."

காதிலே இருக்கிற தோடு ஒரு அடையாளத்தை உண்டு பண்ணும். 'தோடிட்ட காது தோடு வாங்கின காது என்னுமாப் போலே' என்று பெரியவாச்சான் பிள்ளை ஒரு வியாக்யானம் பண்ணியிருக்கிறார்.

விபீஷணன் ஒரு ஆயுதமுமில்லாமல், ஒரே ஒரு கதாயுதத்தை மட்டும் எடுத்துக் கொண்டு ராமனிடம் வந்தான்.

அதைப் பார்த்தவன் ஒருவன் சுக்ரீவனிடம் சொல்கிறான்:

"இவன் எல்லா ஆயுதத்தையும் கையிலே வைத்துக் கொண்டிருக்கிறானே.. ஏன்?"

இதற்குத்தான் 'தோடிட்ட காது, தோடு வாங்கின காது என்னுமாப்போலே' என்று வியாக்யானம்.

வெள்ளிக்கிழமை அன்று ஸ்த்ரீகள் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் பண்ணுவார்கள். அன்றைக்குத் தோடைக் கழற்றி வைக்கிறார்கள். ஆனால் தோடைக் கழற்றி வைத்தாலும் தோடு போட்டுக் கொண்ட காது என்று ஒரு அடையாளம் தெரியுமல்லவா...? அந்த மாதிரிதான் விபீஷணன் கையிலே கதை மட்டும் வைத்திருந்தாலும், 'எல்லா ஆயுதங்களையும் தாங்கிய அடையாளம் அவன் உடம்பிலே இருக்கிறதே!' என்றார் அந்த வியாக்யானத்திலே.

அதே போல்தான் என் காது தோடையும் நான் எடுத்து வைத்து மறைத்துக் கொண்டேன். ஆனால் காதில் தோடு அடையாளம் இருந்தது.

இப்போது இன்னொருத்தர் வந்து என் வஸ்திரம் வெண்மையாய் இருக்கிறது என்று சொல்கிறார்.

காதிலே இருந்த தோடைக் கழற்றிய மாதிரி, வெண்மையாயிருக்கிறது என்று சொன்னவரை மயக்குவதற்காக வெண்மையை வஸ்திரத்திலிருந்து நீக்க முடியுமா?! அது வஸ்திரத்தோடு சேர்ந்தே இருக்கிறது.

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார் 78

யொன்றுமில்லை

அதுதான் விசிஷ்டாத்வைதம்!

சேதனம், அசேதனம் இரண்டும் சேர்ந்தே பரமாத்மாவோடு இருப்பதனாலே, இந்த இரண்டிற்கும் அந்தர்யாமியாய் அவன் இருப்பதனாலே - 'இவற்றுடன் கூடிய ஒன்று' என்பதுதான் விசிஷ்டாத்வைதம்.

ஆகையினாலே, ஆத்மாவெல்லாம் ஒரே மாதிரியாக இருந்தாலும், அவரவர் பண்ணிய புண்ய - பாவத்துக்கு ஏற்ப ஒன்று யானை என்றும் ஒன்று பூனை என்றும் மற்றொன்று வேறு பிராணி என்றும் பெயர் பெறுகிறதே யொழிய ஆத்மாவெல்லாம் ஸ்வரூபத்தினாலே ஒன்றுபட்டிருக்கும்; ஆனால் ஸ்வபாவத்தினாலே மாறுபட்டிருக்கும் - ஞானத்தினாலே வித்தியாசம் வரும்:

ஒருத்தர் நல்ல ஞானியாக இருக்கிறார். ஒருத்தர் அஞ்ஞானியாக இருக்கிறார். ஸ்வபாவத்திலே மாறுபாடு உண்டு ஆத்மாவுக்கு. அசேதனங்கள் எல்லாம் இருக்கிறது பாருங்கள் - அறிவற்ற வஸ்து அவற்றுக்கு ஸ்வரூபத்திலே மாறுதல் உண்டு. ஒரு பெரிய கல்... அது இரண்டாக உடைந்து வேறாகும். இன்னும் உடைந்து அணுவாகும் - இது ஸ்வரூபத்தில் ஏற்படும் மாறுபாடு. ஆத்மாவுக்கு ஸ்வரூபத்திலே மாறுபாடு கிடையாது. ஆனால் ஸ்வபாவத்திலே மாறுபாடு உண்டு. பகவானுக்கு ஸ்வரூபத்திலேயும் மாறுபாடு கிடையாது; ஸ்வபாவத்திலேயும் மாறுபாடு கிடையாது.

'அவிகாராய சுத்தாய நித்யாய பரமாத்மனே
சதைக ரூப ரூபாய விஷ்ணவே...

என்று எப்பொழுதும் ஒரே மாதிரி பரமாத்மா இருப்பான் என்பதாலே ஸ்வரூபத்தாலேயும் ஸ்வபாவத்தாலேயும் மாறுபாட்டை அடையாதவன் அவன். - இதை

அருள்வாக்கு

ஒவ்வொரு இந்த்ரியத்தையும் எடுத்துக் கொண்டு அது பராசக்தி பண்ணின ஒரு மிஷின் – ஆனால் ஜடமான மிஷினாக இல்லாமல் ஜீவனுள்ள மிஷினாக இருப்பது – என்று பார்த்தால் அது ரொம்பவும் உசந்ததாகத்தான் தெரியும். இத்தனூண்டு ஒரு கண் – இது ஒரு பெரிய மலைத் தொடரையே பார்க்கிறது; தினுஸா தினுஸான வர்ண பேதங்களைப் புரிந்து கொள்கிறது. அப்படியே காது ஆயிரம் வகைப்பட்ட சப்த பேதங்களை, இது இன்னாருடையது, இது இந்த ம்ருக – பக்ஷியுடையது, இன்ன வாத்யத்துடையது என்றெல்லாம் தெரிந்து கொள்கிறது. இதே மாதிரிதான் நாக்கு நாலாயிரம் ருசி பேதங்களைத் தெரிந்து கொள்கிறது. இப்படியே வாஸனை, நாற்றம் என்று ஒவ்வொரு பண்டத்துக்கும் ஒன்றாக எத்தனையோ, மூக்குக்கு விஷயமாகின்றன. ஸ்பர்ச உணர்ச்சியை எடுத்துக் கொண்டால் அது எல்லாவற்றையும் விடப் பெரிய ஆச்சர்யம்! எழுபதடி எண்பதடி ஆழக்கிணறு. அதிலே பத்து இருபதடி ஜலத்துக்கு அடியிலே ஏதோ ஒரு பொருள் எப்போதோ விழுந்தது அப்படியே கிடக்கிறது. அதை நாம் கண்ணால் பார்க்க முடியவில்லை. கையால் ஸ்பர்சிக்க முடியவே முடியாது. ஆனாலும் இத்தனை தூரத்துக்கு வெளியிலிருந்து ஒரு நீளமான கோலைவிட்டு அதைத் தொட்டு விட்டால் கூடப் போதும் – ஒரு மாதிரி அதன் 'ஷேப்' என்ன, அது கெட்டியாயிருப்பதா, மெத்தென்றிருப்பதா என்றெல்லாம் புரிந்து கொண்டுவிட முடிகிறது. அதனால்

யெல்லாம்தான் ரிபு, நிதாகருக்கு உபதேசம் பண்ணினார். இந்தத் தத்துவத்தை நாம் உணர்ந்தோமானால் நாமெல்லாம் அவனைச் சேர்ந்தவர்கள் என்பது ஸ்பஷ்டமாகத் தெரியும்.

ஆகையினாலே, போக்தா அவனே; இதெல்லாம் அவனுடையது என்று தெரிவதாலே போக்யமும் அவனே; இதையெல்லாம் பிரேரேபிக்கக் கூடியவன் என்பதாலே பிரேரகனும் அவனே. நாமெல்லாம் அவனைச் சேர்ந்தவர்கள்; சரீர சம்பந்தம் கர்மாதீனமாய் ஏற்பட்டது என்பதை உணர்ந்து விட்டால், அவன் எப்படிப்பட்டவன் என்பது நமக்குத் தெரிந்து போகும்.

உயர்ந்த ஈசாவாஸ்ய உபநிஷத்தினுடைய முதல் மந்த்ரம் விஷ்ணுவினுடைய பெருமையை இவ்வாறு எடுத்துக் காட்டுகிறது.

வேதங்களும் இதையேதான் சொல்கின்றன:

யக்ஞத்தினால் ஆராதிக்கப்படக் கூடியவன்; யக்ஞத்தினுடைய பயனை அருள்பவன்; யக்ஞத்தின் பயனை அனுபவிக்கக் கூடியவன்; யக்ஞ பலத்தைக் கொடுக்கக் கூடியவன்.. அப்படிப்பட்டவன் இந்த யக்ஞத்தை ஏற்று, அதிலே ஏதாவது தவறு நடந்திருந்தாலும், லோபம் இருந்தாலும் மொத்தத்தையும் போக்கி அனுக்கிரஹம் பண்ணுகிறான் என்பதை ஒரு மந்த்ரம் எடுத்துக் காட்டுகிறது.

சர்வ பிராயச்சித்த ஹோமம் என்று ஒரு ஹோமம் யக்ஞமெல்லாம் முடிந்த பிற்பாடு செய்வது. சர்வ பிராயச்சித்தம் என்றால் என்ன அர்த்தம்? விஷ்ணுதான் சர்வ பிராயச்சித்தம்! அந்த விஷ்ணுவை தியானம் பண்ணினால் சர்வ பிராயச்சித்தம் ஏற்பட்டுப் போகிறது. ஆகையால், கடைசியிலே, 'தெரிந்தோ தெரியாமலோ தப்பு பண்ணியிருப்பேன். நான் செய்த தப்பையெல்லாம் போக்கி, இது (யக்ஞம்) சாஸ்திரோக்தமாக நடந்ததாக ஏற்று, பலனைக்கொடு எனக்கு...' என்று பிராயச்சித்த மந்திரம் பிரார்த்திக்கிறது.

பரமாத்மா அக்னி ஸ்வரூபனானதாலே அக்னியையே பிரார்த்திக்கிறது.

சர்வ விதத்திலேயும் ரக்ஷகன் அவன் என்று வேதம் சொல்வதைத்தான் உபநிஷத்தும் சொல்கிறது. கர்ம காண்டத்திலே சொன்னதைத்தான் பிரும்ம காண்டமாகிற உபநிஷத்தும் சொல்கிறது.

'உபநிஷத் என்றால் அருகில் இருத்தல்' என்று அர்த்தம் சொல்லியிருக்கிறேன். – பிரும்மத்தின் அருகில் இருத்தல். பிரும்மத்துக்கு அருகில் இருந்து அவனைக் குறித்துத் தெரிவிப்பதாலே அதற்கு உபநிஷத் என்று பெயர்.

ஆதி சங்கர பகவத் பாதாள் எடுத்துச் சொல்கிறபோது, இந்த 'ஷ'தில் என்கிற தாதுவுக்கு விஸரணம் என்று அர்த்தம் சொல்கிறார். விஸரணம் என்றால் தூள் தூளாக – பொடிப் பொடியாக ஆக்குதல் என்று அர்த்தம்.

உப-நி என்பது உப சர்க்கங்கள். உப, நி என்கிற உப சர்க்கங்கள் சேர்ந்த 'ஷதில்' என்கிற தாதுவினாலே 'ஷத்' என்கிற பதம் உண்டாயிற்று. நம்மிடத்திலே இருக்கும்படியான அஞ்ஞானம் – சம்ஸாரம் என்கிற கஷ்டம் – இதைத் தூள் தூள் ஆக்குவதாலே



இந்தத் திறமைகளைப் பெற்ற இந்த்ரியங்களை உசந்தவை என்று சொல்வதில் தப்பில்லை அல்லவா?

கடைசியில் பெரிய விநோதம் என்னவென்றால் இப்படிக் கலர்கள், சப்தங்கள், வாஸனைகள் இத்யாதிகளை வாஸ்தவத்தில் தெரிந்து கொண்டவை இந்தக் கண், காது, மூக்கு அல்ல. இவற்றின் மூலம் மூளைதான் தெரிந்து கொள்கிறது. நுண்ணியதாக அந்த மூளை கொடுக்கும் கனெக்ஷன்களில்தான் சைதன்ய கரண்ட் ஓடி இந்த்ரியங்களுக்கு இந்த சக்திகளைக் கொடுத்திருக்கிறது. இது அத்தனைக்கும் ஆதாரம் மனஸ். அதனால்தான் இந்த்ரியங்கள் உசந்தவை என்று சொன்னதற்கப்புறம் அவற்றைவிட மனஸ் உசந்தது என்கிறார் : ''இந்த்ரியேப்ய: பரம் மந:'' மனஸின் கருவிகளே இந்த்ரியங்களானதால் இவற்றைவிட அது உசந்தது.

அப்புறம் அந்த மனஸையும் விட உசந்தது புத்தி: ''மனஸஸ்து பரா புத்தி:'' மனஸில் உணர்ச்சிகள் அவை பாட்டுக்குக் கிளம்பிவிடுகின்றன. இது நல்லதா, கெட்டதா என்று பார்ப்பதில்லை. மனஸில் நல்லது, கெட்டது எல்லாமே ஒரு போலத் தோன்றி விடுகின்றன. இவற்றிலே எது நல்லது எது கெட்டது என்று பார்த்து, கெட்டதைத் தள்ளி நல்லதை எடுத்துக் கொள்ளும் படிச் செய்வதுதான் ''புத்தி''.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

அதற்கு உபநிஷத் என்று பெயர்.

பிரும்ம ஞானம் ஏற்பட்டுவிட்டால், அவனை நாம் தெரிந்து கொண்டு விட்டோமானால் இதெல்லாம் சாமான்யம் என்று ஏற்பட்டுப் போய்விடும்.

அந்த எம்பெருமானைப் பார்க்கக் கொடுத்து வைத்துவிட்டால், அவனுடைய பெருமையை உணர்ந்தோமானால் மற்றதெல்லாம் சாமான்யம் என்பது தெரியும்.

உபநிஷத் என்பது அருகிருத்தல் என்று இன்னொரு அர்த்தத்திலும் சொல்லலாம்:

ஆசார்ய சமீபத்தில் உட்கார்ந்து, ரொம்ப ரகசியமாக நெருக்கமாகக் கேட்க வேண்டிய விஷயமானதனாலே இதற்கு உபநிஷத் என்று பெயர். ரகசியமான விஷயம்! அதை பகிர்முகமாகப் பெரிசுபடுத்திக் காட்டாதே. அந்த அர்த்தத்தை உள்ளுக்குள்ளே தேக்கி வைக்க வேண்டும். ஆத்ம க்ஷேமத்தை அது உண்டு பண்ணும். அதனால் ஆத்ம க்ஷேமத்தை உண்டு பண்ணக்கூடிய விஷயத்தை நெருங்கியிருந்து ஆசார்யரிடத்திலே கேட்க வேண்டும்.

ஆக, உபநிஷத்தும், எதிலும் பற்று வைக்காதே என்கிறது. இதெல்லாம் அவனுடையது. சர்வமும் அவனுடையது. அவனைவிட்டு வேறொன்றுமில்லை. அதனால் உன்னை அவனிடத்தில் அர்ப்பணி என்று ஈசாவாஸ்ய உபநிஷத் சொல்கிறது. அதன் முதல் மந்திரமே இதைத்தான் சொல்கிறது.

சுயஸ்வரூப ஞானம் - நம்மை நாமே தெரிந்து கொண்டோமானால் எல்லாவற்றிலேயும் நமக்குப் பற்று விட்டுப் போகும்.

குழந்தையைச் சீராட்டிக் கொஞ்சுகிறார் ஒருத்தர். அந்தக் குழந்தையை எப்போதும் அனவரதமும் கொஞ்சிக் கொண்டேயிருக்கிறார். இவருக்கே உடம்புக்கு வந்து விட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். ஜுரம் வந்து விட்டது - 104 டிகிரி ஜுரம்! தலைவலி! முனு முனுக்கிறார்.

அந்த சமயத்திலே குழந்தை கிட்டே வந்தால், 'அந்தண்டை போ!' என்று அதைப் பிடித்துத் தள்ளிவிடுகிறார். இவருடைய சரீர உபாதையினாலே, இத்தனை நாளாகக் கொஞ்சிய குழந்தையைப் பிடிக்காமல் போய் விட்டது அவருக்கு!

சரீரத்தைக் காட்டிலும் பின்னமான, அதைக் காட்டிலும் வேறானது ஆத்மா. அந்த ஆத்ம சாக்ஷாத்காரம்... கைவல்யானந்தம் என்று பெயர் அதற்கு. அந்த ஆத்மாவைப் பார்த்து, அதுதான் தான் என்று உணர்ந்த பிற்பாடு சரீரத்திலேயும் பற்று போய்விடும்.

'இத்தனை நாளாக சரீரத்தைப் பெரிதாக நினைத்துக் கொண்டிருந்தோமே - இது ஒன்றுமே இல்லையே! பிரயோஜனமில்லாத வஸ்துவினிடத்திலே நாம் விசேஷ ஈடுபாட்டோடு இருந்தோமே' - என்று சரீரம் எவ்வளவு மோசம் என்பது அப்போது புரியும்.

ஆத்மாவுக்கு அந்தராத்மாவான பரமாத்மாவைப் பார்த்துவிட்டால் ஆத்மாவிலும் பற்று போய்விடும்.

ஆகையினாலே, அவன் ஒருவனுக்கே ஆவது காமம். அவனுக்கே எல்லாம் என்ற நிலை வந்துவிடும். அப்புறம் மீதி விஷயங்களில் எல்லாம் பற்று ஏற்படுமோ!

(தொடரும்)

கல்கி

18.10.98

தீபாவளிச் சிறப்பிதழ்



- ஹைர ஹைர ஹைரோப்பா — ஜெயஸ்ரீராஜ் எழுதும் விறுவிறுப்பான ஐரோப்பிய பயணத் தொடர்
- உணவு ஸ்பெஷல் — 32 பக்க இலவச இணைப்பு

இன்னும் இன்னும் இன்னும்...

அடுத்த இதழில்

முதல் மழை!

- ஆர். வெங்கடேஷ் எழுதும் மினி காதல் தொடர்



மக்கள் சக்தியே

ஆண்டு 1987 அக்டோபர்; அமெரிக்காவிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்தேன். என்ன செய்ய வேண்டுமென்பது எனக்கு நன்கு தெரிந்திருந்தது. ஆனால் அதை எப்படிச் செய்வது என்பதில்தான் யோசனை. தமிழ்நாட்டில் தங்கியிருந்த மூன்று மாதங்களில் பலரை நான் சந்தித்தேன். எனது நெருங்கிய நண்பர்கள் சிலர், நான் அரசியல் கட்சிகளில் ஏதாவது ஒன்றில் சேர்ந்து பணியாற்றுவது நல்லது என்று சொன்னார்கள். சில பிரமுகர்கள் வீடு தேடி வந்தார்கள். எனினும் நான் விரும்பிய தூய்மையும் லட்சிய தாகமும் கொண்ட அமைப்பையோ தலைவர்களையோ பார்க்க முடியவில்லை. இது பெரிய உறுத்தல்.

மற்றொரு விஷயம், நான் யார் யாரெல்லாம் என்னுடன் நிற்பார்கள் என்று பல முக்கியமானவர்களை எதிர்பார்த்திருந்தேனோ அவர்கள் எல்லாம் வெறும் பார்வையாளராகவே நின்றனர்! அதாவது நாடு இப்படிப்பட்ட இழிநிலை அடைந்துவிட்டதே என்று ஆதங்கம் காட்டுகிற அளவுக்கு, அக்கறை காட்டுகிற அளவுக்கு, பேசுகிற அளவுக்கு இறங்கிப் பாடுபட யாருக்கும் விருப்பமில்லை.

இதில் துணையாக இருந்தவர்கள் எனது இளைய நண்பர்கள்தான்; சம வயதுடையவர்கள் அல்ல! அதில் குறிப்பாக நண்பர் ஆபிரகாமைக் குறிப்பிட வேண்டும். நண்பர் ஆபிரஹாம், அரேபிய நாடுகளில் இருந்தார். அப்போது நல்ல வேலை. அதைவிட அங்குள்ள தமிழர்களை எல்லாம் ஒன்றுபடுத்தி அடிக்கடி தமிழர் திருவிழா நடத்திக் கொண்டிருந்தவர். நான் தொழில் வேலையாக அங்கு சென்றபோது, அவர் பொங்கல் விழா ஒன்றிற்கு ஏற்பாடு செய்து என்னை அழைத்துப் பேசச் சொன்னார். அத்தகைய கூட்டத்தையும் ஆர்வத்தையும் நான் வெளிநாடுகளில் கண்டதில்லை. இந்தியாவைப் பற்றி ஒத்த கருத்துக்களைக் கொண்டவர் அவர். இந்தியா வந்து ஏதேனும் செய்ய வேண்டும் என்பதில் உண்மையான அக்கறை கொண்ட மனிதர். எம்.ஏ. படித்தவர். இந்தியாவில் கார்போரண்டம் நிறுவனத்தில் நல்ல வேலையில் இருந்தவர்.

அவர் மீண்டும் சென்னைக்கு வந்துவிட்டார். நாங்கள் இருவரும் வால்மீகி நகர் வீட்டின் மொட்டை மாடியில் நண்பர்களுடன் உட்கார்ந்து மணிக்கணக்கில் விவாதித்தோம். ஒரு அமைப்பை உருவாக்கத் தீர்மானித்தோம்.

இயல்பாகவே நான் எளிமையானவன். காரணம் என் தந்தை மிக எளிமையானவர். அந்த பாரம்பரிய குணம் என்னிடமிருந்தது. இது நமது ஊருக்கு அவ்வளவு நல்லதல்ல என்பதை நான் அப்போது உணரவில்லை.

வீடு தேடிக் கொண்டிருந்தேன். நான் ஒரு ஆள். வீடு எனக்கு மட்டும்; என் மனைவி அமெரிக்காவிலேயே தங்குவதாகத் தீர்மானித்து விட்டார். எனது டாக்டர் நண்பர் சொன்னார். ''உங்களுக்குப் பிடித்த இடத்தில் அழகான புதிய வீடு. உங்களுக்குப் போதும். கடற்கரையில் அமைந்திருக்கிறது– வால்மீகி நகரில்'' என்றார். போய்ப் பார்த்தேன். இரண்டு அறைகள், ஒரு ஹால், ஒரு சமையல் இடம். இப்படி உள்ள ஒரு

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

வீடு. சின்ன இடம். எடுத்துக் கொண்டேன். போய் வர கார் தேவையாயிற்றே என்று ஒரு பழைய காரை வாங்கிக் கொண்டேன்.

ஒரு பெரிய புதிய வீட்டிற்கோ அல்லது ஒரு புதிய காரையோ - நான் அமெரிக்காவில் உபயோகித்த பெரிய காரையோ நான் எளிதாகக் கொண்டு வந்திருக்க முடியும். என்னவோ இப்படிப்பட்ட விஷயங்களில் என் மனம் போனதே இல்லை. பின்னால்தான் நான் தெரிந்து கொண்டேன். அமெரிக்காவிலிருந்து பேரும் புகழுடனும் வந்தவர் என்று பெரிதாக என்னிடம் எதிர்பார்த்தவர்களுக்கு இந்த என்னுடைய விஷயங்கள் என்னைப் பற்றி ஏமாற்றத்தை உருவாக்கி இருக்கிறது என்பதை.

நான் என்ன செய்ய முடியும்! யாருக்காகவும் நான் வாழ்கின்றவனல்ல. பிறரது எதிர்பார்ப்புகளுக்கேற்ப நடந்து கொள்பவனல்ல! "நான்; எனது தேவை!" அத்துடன் எல்லாமே முடிந்து விடும். இது அதிகம் எடுபடவில்லை என்பதை நன்கு உணர்ந்தேன். "தலைவருக்கான பந்தா இல்லை" என்றனர் என் நண்பர்கள் சிலர். "இருப்பது அவ்வளவுதான். ஆளை விடுங்கள்!" என்பேன் நான்.

என் நண்பர் செல்லப்பா என்பவர் சென்னை தி.நகரிலிருந்து அமெரிக்கா வந்திருந்தார் படிக்க. அவர் சொல்வார், அங்கிருந்த மற்றவர்களிடம், "எங்கள் வீடு தி.நகரில் பெரிய பங்களா. 24 அறைகள் கொண்டது. என்னுடைய சகோதரியும் விஜயலட்சுமி பண்டிட்டின் மகளும் ஒரே விமானத்தில் பயணம் செய்தபோது பழக்கம். எனவே அவர்கள் குடும்பத்தை எங்களுக்கு நன்கு தெரியும்!" என்று. நான் இதை எல்லாம் நிஜம் என்று நம்புபவன். பின் ஒரு நாள் என் நண்பர் ரென் சென்னையில் விசாரித்து வந்து சொல்ல, அவர்கள் தி.நகரில் ஒண்டுக் குடித்தனம் இருந்தவர்கள் என்று தெரிந்து கொண்டேன்! இப்படியெல்லாம் என்னால் 'புருடா'க்கள் விட முடியாது. அது ஒரு தனி உலகம். "நான் பொய் சொன்னால், அதைக் கண்டுபிடித்து விடும், நம்மை விட பெரிய புத்திசாலிகள் இருக்கிறார்கள்" என்ற அபிப்ராயம் எனக்கு எப்போதும்.

இந்தியா வந்ததும், எனக்கு எல்லாவித உதவிகளையும் செய்ய முன் வந்தார் எனது புத்தக பதிப்பாளர் வானதி திருநாவுக்கரசு அவர்கள். நான் அமெரிக்காவிலிருந்து ஒவ்வொரு முறை வரும்போதும் என் புத்தகங்கள் ஒன்றிற்கு வெளியீட்டு விழா ஏற்பாடு செய்ய விரும்புவதாகக் கூறுவார். நான் அதை முழுவதுமாக மறுத்து வந்தவன். எனக்கு இப்படி பாராட்டப் படுவது, விழா கொண்டாடுவது எல்லாம் பொதுவாகப் பிடிப்பதில்லை. இதனால் என் புத்தகங்கள் வரிசையாக வெளி வந்து கொண்டிருந்த போதும், பத்து ஆண்டுகள் வரை புத்தக வெளியீட்டு விழாவை நான் தவிர்த்து வந்தேன்.

'சிந்தனை தொழில் செல்வம்' என்ற எனது நூல் வெளிவந்து மூன்று ஆண்டுகள் ஆகியிருக்கும். ஒருநாள் நான் அதை அமெரிக்காவில் தற்செயலாக எடுத்துப் படித்துப் பார்த்தேன். உடனே வானதி திருநாவுக்கரசு அவர்களுக்கு எழுதினேன். "ஐயா! இந்த நூலைப் படித்துப் பார்த்தேன்.

மகேசன் சந்தி!

இளநீர்ச் சின்னத்தில் ஏ.ஆர். ரஹ்மான்

மறுபடியும் தேர்தல் எப்போது என்ற கேள்விக்கு, விடை தெரிந்து விட்டது, இப்போதே! ஆனால் இது பாராளுமன்றத் தேர்தல் இல்லை. 'சேனல் வி'யின் மியூஸிக் விருதுக்கான தேர்வு. இவ்வாண்டுக்கான பரிசீலனையில் ஏ.ஆர். ரஹ்மான், தாலர் மெஹந்தி, சோனுநிகாம் உட்பட ஏழுபேர் உள்ளனர். இந்தியாவின் 50 நகரங்களில், குறிப்பிட்ட மியூசிக் மற்றும் புத்தகக் கடைகளில் வாக்குச் சீட்டு கிடைக்கும். வாங்கி, முத்திரையிட்டு, பெட்டியில் போட்டுவிட வேண்டியதுதான். தேர்தல் ஒரு நாள் இல்லை; சுமார் ஒருமாத காலம். விரும்பியபோது போய் வாக்களிக்கலாம்.


வாக்காளர்களுக்கும் பல பரிசுகள் உண்டு.

சரி! நம் ரஹ்மானுக்கு என்ன சின்னம் தெரியுமா?

இளநீர்!

வாக்குச் சீட்டில் பிரஷர் குக்கர், குடை, சுத்தி சின்னமெல்லாம்கூட உள்ளன.

— சி.எம்



இந்த மனிதர் உண்மையிலேயே பிரமாதமாக எழுதி இருக்கிறார். நிச்சயமாக ஒரு விழா எடுக்க வேண்டியதுதான். நம் நாட்டில் சொந்தமாகத் தொழில் செய்வோர் பெருக வேண்டும். எனவே எந்த அரசியல்வாதி மற்றும் பிரமுகர்களை அழைக்காமல் தொழிலதிபர்களைக் கொண்டு ஒரு வெளியீட்டு விழா ஏற்பாடு செய்யுங்கள்!" என்று எழுதி இருந்தேன். அப்படியே அந்த முறை நான் வந்தபோது ஏவி.எம். ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் ஏ.சி. முத்தையா, எம்.வி. அருணாசலம், ஜேம்ஸ் பிரடெரிக் போன்ற தொழிலதிபர்களை அழைத்து புத்தக வெளியீட்டு விழாவை ஏற்பாடு செய்திருந்தார்.

அதேபோல எனது நண்பர் அருண் ஐஸ்கிரீம் சேர்மன் சந்திரமோகன் சென்னை யிலுள்ள சிறு தொழிலதிபர்களை எல்லாம் ஹோட்டல் சோழாவில் ஒரு விருந்திற்கு அழைத்து என்னைப் பேச ஏற்பாடு செய்தார். நாட்டின் நாடி ஓரளவுக்கு எனக்கு பிடிபட்டது.

நானும் ஆபிரஹாமும் இரவு பகலாகத் திட்டம் தீட்டினோம். 'மக்கள் சக்தி இயக்கம்' என்ற பெயர் முன்பே முடிவாகி இருந்தது. "இயக்கம்' என்ற வார்த்தையிலும் 'சக்தி' என்ற வார்த்தையிலும் ஒரு ஓட்டமும் துடிப்பும் இருக்கிறது என்று நண்பர்கள் அங்கீகரித்தார்கள்.

1988 மே மாதம் 29ம் தேதியைத் தேர்ந்தெடுத்தோம். இரண்டு மாதம் முன்பே துவங்கி இருக்க வேண்டும். ஏனெனில் இரண்டு மாதம் முன்புதான் சி.எஸ். அவர்கள் 'மக்கள் தூய்மை இயக்கம்' என்ற அமைப்பைத் துவங்கி இருந்தார். அதிலும் நான்தான் காரியதரிசி.

அப்போதுதான் "நம்பு தம்பி, நம்மால் முடியும்!'' என்ற தொடரை ஆனந்த விகடனில் எழுதி முடித்திருந்தேன். அதற்கு அளவு கடந்த வரவேற்பு இருந்தது. அனேகமாக ஒவ்வொரு வாரமும் நானும் விகடன் ஆசிரியர் பாலனும் வரப் போகிற ஒவ்வொரு கட்டுரையைப் பற்றியும் விவாதிப்போம். அருமையான யோசனை சொல்பவர் ஆசிரியர் பாலசுப்ரமணியன். எனினும் தம்மை வெளியில் காட்டிக் கொள்ள மாட்டார்.

எனது கருத்துக்களை விகடன் என்ற தங்கத் தாம்பாளத்தில் வைத்து என்னைத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்கியது ஆனந்த விகடன்; அதன் ஆசிரியர் பாலசுப்பிரமணியன்; பொறுப்பாசிரியர் மணியன்.

''என் கட்டுரைகளை நீங்கள்தானே படிப்பீர்கள்?'' என்று ஒருமுறை நண்பர் மணியனைக் கேட்டேன். "இல்லை இல்லை. உங்கள் கட்டுரை - மஞ்சள் தாளில் வருகின்ற கட்டுரைகளை முதலில் ஆசிரியர்

பாலனின் பார்வைக்குப் போகும். அவர் பச்சைப் பேனாவினால் கோடிட்டு அனுப்புவார்" என்றார்.

அப்போதுதான் திரு பாலன் எவ்வளவு உன்னிப்பாகக் கவனிக்கிறார் என்ற விஷயத்தை நான் அறிந்து கொண்டேன்.

மணியன் பிரிந்த பிறகு விகடனை எந்த வித தொய்வும் வராமல் தூக்கி நிறுத்திய பெருமையும் இன்று பல்வேறு பத்திரிகைகளை விகடன் சார்பில் வெளியிடும் ஒரு சிறந்த தொழில் மனோபாவமும் அவர் சாதனைகள்! அது வெறும் புகழ்ச்சி அல்ல. விகடன் இதழில் "நம்மால் முடியும்" தொடரில் "மக்கள் சக்தியை இயக்க மாக்குவோம்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரையைக் கடைசியாக எழுதி இருந்தேன். அதாவது மக்கள் சக்தி இயக்கம் என்ன செய்யப் போகிறது என்று, விரிவாக எழுதி முடித்திருந்தேன். விகடன் ஆசிரியர் எனது முயற்சிகள் எல்லாவற்றிற்கும், எல்லா வகையிலும், உறுதுணையாக இருந்தார்.

ஏ.சி. முத்தையா ஆகட்டும், காலஞ் சென்ற நண்பர் மணியன் ஆகட்டும், எனது நண்பர் பாலசந்தர் ஆகட்டும், வானதி, வித்வான் லட்சுமணன் என்று இன்னும் எனக்கிருக்கும் நண்பர் குழுவாகட்டும் எல்லோரும் ஆண்டவன் எனக்களித்த பாக்கியம் என்றே எண்ணி நான் மனத்தால் தொழுகை நடத்துவதுண்டு.

மக்கள் சக்தி இயக்கத் துவக்க விழா மே 29 , 1988 அன்று பாரதீய வித்யா பவனில் நடந்தது. இரண்டு விஷயங்களை நான் கடைப்பிடித்தேன்; இரண்டும் வித்தியாசமான விஷயங்கள்.

அதாவது இந்த துவக்க விழாவுக்கு எந்தப் புகழ் பெற்ற பிரமுகரையும் அழைக்க வேண்டாம். அவர்களுக்காக கூட்டம் வர வேண்டாம். உண்மையில் நம் கொள்கைகளை அறிந்தவர்கள் நமக்காக வருபவர்கள் மட்டுமே வந்தால் போதும் என்பது ஒன்று.

இரண்டாவது, நாமோ 1800 ரூபாய் கொடுத்து ஒரு ஹாலை வாடகைக்கு எடுக்கிறோம். வெறும் வேடிக்கை பார்க்க வரும் மனிதர்களால் இது நிறையக் கூடாது! எனவே நுழைவுக்கட்டணம் பத்து ரூபாய் வைப்போம் என்று தீர்மானித்தது.

எனது நண்பர்கள் – அழாத குறைதான்– "200 பேர் வருவார்களா, நம் அழைப்பை ஏற்று என் அஞ்சிக் கொண்டிருந்தோம். இப்போது நுழைவுக் கட்டணம் வேறு வைத்து



''கிழம் பென்ஷனில் பாதியை உறிஞ்சியே காலியாக் கிடுதுன்னு பாட்டி திட்டறா, தாத்தா!''
''விடு! நான் மூக்குப் பொடி போடறதை என்னைக்கு அவ திட்டாம இருந்தா!''
– உ. ராஜாஜி

விட்டீர்கள். 50 பேர் வருவார்களா?" என்று இடிந்து போய் உட்கார்ந்து விட்டார்கள். நான் சிறிதும் மனம் தளரவில்லை.

காலை பத்து மணிக்கு மயிலாப்பூர் கிழ மாட வீதியில் பெரிய 'லயன்' நின்று கொண்டிருந்தது உள்ளே நுழைய. விலாசம் பூர்த்தி செய்யச் சொல்லி ஒரு படிவம் வைத்திருந்தோம். அதைப் பூர்த்தி செய்ய யாருக்கும் நேரமில்லை. திமுதிமுவென்று உள்ளே நுழைந்தார்கள். கூட்டம் என்றால் அப்படிக் கூட்டம்.

அன்று மதியம் வந்திருந்த அனைவரையும் மாவட்ட ரீதியாகப் பிரித்து அப்போது 20 மாவட்டங்கள் இருந்தன. பத்தொன்பது மாவட்டங்களில் எங்கள் கிளைகளைத் துவங்கினோம். ஒரே நாளில் – முதல் நாளில். எழுதியது தினமலர் கட்டுரையாக, "கிழிருந்து கிளம்புகிறது மக்கள் சக்தி" என்று. விசித்திரமான ஒரு வரவேற்பும் கிடைத்தது. முரசொலியில் கலைஞர் மு. கருணாநிதி எழுதி இருந்தார்; மக்கள் தூய்மை இயக்கத்தையும், மக்கள் சக்தி இயக்கத்தையும் தாக்கி. சி.எஸ் அவர்களைப் பற்றி ஒண்ணே கால் பத்தி! என்னைப் பற்றி ஒரு அரைப்பத்தி! அதில் என்னை "மயிலாடு துறையில் பிறந்த மாமேதை" என்று கிண்டலாக எழுதி இருந்தார். அவர் உள்ளத்திலே அச்சம்? வெறுப்பு?...?

நான் அதை, கலைஞர் அவர்கள் என்னை ''மயிலாடுதுறையில் பிறந்த மாமேதை என்று பாராட்டி இருக்கிறார்'' என்று தமாஷாகச் சொல்லி அவருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டிருந்தேன்; எல்லாக் கூட்டங்களிலும்!

(தொடரும்)

நீங்கள் கேட்டவை - தராசு

வைகோ இனி யாரைத் திட்டுவார்?

● கோ. வீரராகவன், அறந்தாங்கி ❐

? வை.கோ கையிலிருந்த தி.மு.க. எதிர்ப்பு என்ற ஆயுதத்தையும் ராஜ தந்திரத்துடன் கலைஞர் பறித்துக் கொண்டாரே... வைகோ இனி யாரைத் திட்டுவார்?

! கை குலுக்கி, சகஜமாகச் சிரித்தால் அரசியல் கருத்து மாறுபாடுகளைத் துடைத்து விட்டார்கள் என்று அர்த்தமா என்ன...! அரசியல் எதிரி, வாழ்க்கையில் விரோதியாக இருக்க வேண்டிய தேவையில்லை, சார்!



* மாறுபாடு....

● இரா. திலீப், திருச்சி – 14.

? காமன்வெல்த் போட்டியில் இந்திய கிரிக்கெட் அணியின் மோசமான ஆட்டம் பற்றி...?

! அது மட்டுமா? சஹாரா கோப்பையையும் கோட்டை விட்டு விட்டார்கள். கேட்சை நழுவ விடுகிற மாதிரி! டெண்டுல்கர், ஜடேஜா பறந்து போயும் பயனில்லை. ஒரு ஆறுதல்; காமன்வெல்த் போட்டியிலும் வழித்துக் கொண்டு வராமல், ஏழு தங்கம், பத்து வெள்ளி, எட்டு வெண்கலம் தட்டிக் கொண்டு வந்த நம் அணிக்கு வாழ்த்துக்கள்.

● மஞ்சுதேவன், மும்பை – 86.

? அஸ்ஸாமின் புகழ் பெற்ற காசிரங்கா காட்டில் வெள்ளத்தின் சேதம் குறித்து...?

! மக்கள் படும் துயரம் ஒரு புறம் என்றால், ஏற்கெனவே அழிவை எதிர்நோக்கியிருக்கும் அரிய உயிரினமான அஸ்ஸாமிய காண்டாமிருகங்கள் பல இடம் பெயர்ந்து தவித்ததைப் பார்க்க (டி.வியில்) பரிதாபமாக இருந்தது.

● பா. வடிவேல், தேவனங்குறிச்சி.

? புல்லாங்குழல் வாசிப்பிலிருந்து எழும் மென்மையான இசையின் சுகம், மற்ற இசைக் கருவிகளிடத்தில் வலுக்கட்டாய வரவழைப்பாகவே உணர்கிறேன்... உங்கள் கருத்து...?

! ஒவ்வொரு இசைக் கருவிக்கும் ஒவ்வொரு நாத இன்பம் இருக்கிறது. அதனை இன்பமாக வழங்குவதோ அல்லது துன்பமாக மாற்றுவதோ அதை வாசிப்பவரின் ஆற்றலைப் பொறுத்தது. நீங்கள் பிஸ்மில்லா கானின் ஷெனாய் வாசிப்பு கேட்டிருக்கிறீர்களோ...?



* .... தொடரும்

● மலர் சூர்யா, பாண்டிச்சேரி – 10.

? ஒரு பேச்சுக்குத்தான் – வாஜ்பாயை வரவேற்க ஜெயலலிதா சென்றிருந்தால் வைகோ மாதிரி கலைஞருடன் நின்று போஸ் கொடுத்து படமெடுத்துக் கொண்டிருப்பாரா...?

! வாஜ்பாயை வைகோ அழைத்ததையே பொறுத்துக் கொள்ள முடியாமல் பொருமிச் சீறுகிற 'ஜெ'யிடம் நீங்க ரொம்பத்தான் எதிர்பார்க்கறீங்க, சார்! கூட்டணியைச் சேர்ந்தவர்களிடமே அரசியல் நாகரிகம் காட்டாதவர் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவரிடமா காண்பிக்கப் போகிறார்?

● இரா. சாலமோன், ஆலங்குளம்.

? அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு 109 ஆயுள் தண்டனைக் கைதிகளை விடுதலை செய்ய முதல்வர் உத்தரவிட்டது சரிதானா?

! சரியில்லை; இது ஆண்டுதோறும் ஒரு சடங்காகிவிட்டது. ரொம்ப தப்பு. அரசு இப்படி இஷ்டத்துக்கு தண்டனைகளை ரத்து செய்வதெனில் நீதிமன்றங்கள் எதற்கு? கைதிகள் தங்கள் நன்னடத்தை மூலம் தண்டனைக் காலத்தைக் குறைத்துக் கொள்ள சட்டத்திலேயே இடமிருக்கிறது. கருணை



• சீறல்!



• குழலினிது...?



• மின்னல்களின் மின்னல்!..?



• நிஜத்தைத் தேடி...!

என்பது கண் மூடித்தனமாகச் செயல்படக் கூடாது.

● மு. இரவிச்சந்திரன், சேலம் – 9.

? ம.தி.மு.க பேரணியில் தங்களைக் கவர்ந்த/எரிச்சலடைய வைத்த கோஷம்...?

! கோஷமல்ல... தோஷம். அலகு குத்தி, காலில் கட்டை கட்டி, எலுமிச்சை மாலை அணிவித்து ஒரு சிறுவனை உலவ விட்டார்களே... அடப் பாவமே! பகுத்தறிவுப் பாசறையிலா இந்தக் கோலம்!

● ஏ. காதர், நாகூர்.

? என்னை வைத்த சிறையில் கருணாநிதியை அடைப்பேன் என்று ஜெயலலிதா ஆவேசமாகக் கூறியுள்ளது பற்றி...?

! காந்திஜியின் பிரார்த்தனையில் 'குரோதாத் பவதி சம்மோஹ:' என்று தொடங்கும் கீதா வாக்கியம் ஒவ்வொரு நாளும் இடம் பெறும். அதை அர்த்தம் உணர்ந்து தினம் சொல்வது 'ஜெ'க்கு மட்டுமல்ல, ஒவ்வொரு இந்தியனுக்கும் நல்லது. ம்ம்... ஆனால் காந்திஜியை யார் இன்று நினைத்துப் பார்க்கிறார்கள்?!

● பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.

? சென்னை நேரு விளையாட்டரங்கில் முதல்வருக்குப் பவள விழா நடத்தக் கூடாது என்று 'ஜெ' கூறுவது சரியா?

! சரிதான் என்பதை முதல்வரே ஏற்று தேதியையும் இடத்தையும் மாற்றும்படி வேண்டினார். பிறகு உயர் நீதிமன்றம் நேரு ஸ்டேடியத்தில் விழா நடத்தத் தடை விதிக்க மறுத்து விட்ட காரணத்தால் கலைஞர் மனம் மாறினார். இறுதியில் உச்ச நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பின் சாராம்சம், (வேறு வழியின்றி சில கட்டுப்பாடுகளோடு இந்த விழாவுக்கு அனுமதி அளித்தபோதும்) விளையாட்டல்லாத எந்தவொரு விழாவும் நேரு விளையாட்டரங்கில் நடைபெறக் கூடாது என்பது தான். வேறு இடத்தில் விழா நடத்துங்கள் என் பதிலேயே கலைஞர் உறுதியாக இருந்திருந்தால், ஜெ சரியாமல் இருந்திருப்பார்.

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி.

? விகடன் க்ரூப்பிலிருந்து மதன் வாலண்டரி ரிடையர்மெண்டாமே...?'

! 'The real Me' யைத் தேடிப் புதிய பயணம் புறப்பட்டிருப்பதாகக் கூறுகிறார். விகடனுக்கு அவர் பங்களிப்பு தொடரும் என்கிறார்; பார்ப்போம்.

● பாலு, காரைக்குடி – 1

? மதச்சார்பின்மையோடு செயல்பட்டால் பி.ஜே.பிக்கு ஆதரவு தருவதாக கலைஞர் கூறியிருப்பது தேச நலனுக்கும் ஆட்சியின் ஸ்திரத்தன்மைக்கும் நல்லது என்கிற நோக்கில்தானே... இதை கம்யூனிஸ்ட் உள்ளிட்ட சில கட்சிகள் குறை கூறுவது ஏன்...?

! மத்திய ஆட்சி அல்ப ஆயுளில் முடிந்து போகக் கூடாது என்பதற்காக மத்திய அரசுக்குத் தேவையான சமயத்தில் ஆதரவு தருவது வேறு. கட்சிக்கு ஆதரவு தேவை யெனில் மதச்சார்பின்மைக் கொள்கையை பி.ஜே.பி ஏற்பது முதல் நிபந்தனை என்பது கருணாநிதியின் சரியான கருத்து. ஆனால், அத்தைக்கு மீசை முளைக்கவும் செய்யாது; இவர் சித்தப்பா என்று அழைக்கவும் நேராது!

● ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்.

? மறைந்த பி.எஸ். வீரப்பா பற்றி?

! ஆஜானுபாகுவான தோற்றம்; இயல்பான நடிப்பு, எல்லாவற்றுக்கும் சிகரமாக அந்தச் சிரிப்பு... என்றுதான் பலரும் சொல்கிறார்கள். ஆனால் இவற்றுக்கும் மேல் என் நினைவில் நிற்பது அவருடைய வாள் போர்! அது மின்னல்களின் மின்னல்!

● ஆர். பார்த்திபன், அசூர்.

? மாநாட்டை வெற்றிகரமாக முடித்த கையோடு அமெரிக்காவுக்கு விமானம் ஏறியிருக்கிறாரே வைகோ...?

! அமெரிக்க அரசின் அழைப்பை ஏற்றுப் போயிருக்கிறார். வாழ்த்துக்கள்! ஆனால் அங்கிருந்து கனடா போய் விடுதலைப்புலி ஆதரவாளர்களுடன் குலாவாமல் இருக்கட்டும்!

ரூ.50 பரிசு பெறுபவர்:

கோ. வீரராகவன்,
புதுக்கோட்டை சாலை,
அறந்தாங்கி

பிரபலங்களின் மறுபாதி : சுஜாதா ரங்கராஜன்

எழுத்தாளர் சுஜாதா என்கிற ரங்கராஜன் சுவாரசியமாய் எழுதுகிறார். அவரது மறுபாதியான சுஜாதா சுவாரசியமாய்ப் பேசுகிறார். "நான் இப்போது இவ்வளவு பேசுகிறேன் என்றாலும் படிக்கிற காலத்திலும் சரி, அதன் பிறகு திருமணமாகி, சில வருஷங்கள் வரையிலும் சரி ரொம்பப் பேசவே மாட்டேன். காரணம் என் வளர்ப்பு அப்படி!" என்கிறார்.

அப்பா ராமரத்னம் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உத்தியோகம் பார்த்தவர். வட ஆர்க்காடு மாவட்டம். அம்மா தஞ்சாவூர். "படு ஸ்டிரிக்ட்! எதையுமே பிடிக்காது என்று சொல்லி ஒதுக்கக் கூடாது. எதுவானாலும் அட்ஜெஸ்ட் செய்து கொண்டு போக வேண்டும்" என்பார் அப்பா. அவர் எதிரே நின்று பேசவே பயமாக இருக்கும். எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து, அவரிடம் மகள் என்கிற நெருக்கத்தோடு நான் இருந்ததே கிடையாது! திருமண தினத்தன்று, அப்பா மடியில் அமர்ந்தேன். அதற்கு முன் அப்பா மடியில் அமர்ந்திருக்கிறேனா என்று நினைத்துப் பார்த்தால், ஞாபகம் வரவில்லை!"

"அத்தனை கட்டுப்பாடு நிறைந்த குடும்பத்தில் உங்களுக்கு எப்படி மாடர்னாக சுஜாதா என்று பெயர் வைத்தார்கள்?"


"எனக்கு இரண்டு தம்பிகள். ஒரு தங்கை. எனக்கும், என் தங்கைக்கும் பெயர் செலக்ட் செய்தது எங்கள் பெரியப்பாதான். அவர் நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனில் தலைமை இஞ்சினியர். நிறைய படிப்பார். எக்ஸ்போஷர் அதிகம். எனக்கு சுஜாதா என்று பெயரிட்டவர், என் தங்கைக்கு இன்னும் மாடர்னாகப் பெயரிட்டார். அவள் பெயர் தீப்தா!"

அப்பாவுக்கு மாற்றலாகிற உத்தியோகம் என்பதால் வேலூர், திருச்சி, விழுப்புரம், கடலூர் என்று மாறி மாறி, அந்தந்த ஊர் அரசாங்கப் பள்ளிகளில் படிப்பு. கல்லூரிப் படிப்பு (இன்டர் மீடியட்) வேலூரில். அடுத்து, வாய்ப்பு இருந்தும் பயம் காரணமாய் எம்.பி.பி.எஸ் சேரவில்லை. மாறாக சென்னை எத்திராஜ் கல்லூரியில் பி.எஸ்ஸி விலங்கியல்.

"அந்த நாட்களில் சினிமா பார்க்கவெல்லாம் அனுமதி கிடையாது. அபூர்வமாய் 'ஔவையார்' போல ஓரிரண்டு பார்த்தது உண்டு. வீட்டு வாசலில் போய் நிற்கக் கூடாது. உறவுக்காரப் பையன்களிடம் கூட சிரித்துச் சிரித்துப் பேசிக் கொண்டிருக்கக் கூடாது. இது போன்ற சூழ்நிலையில் வளர்ந்ததால் எனக்கென்று பெரிதாய் அபிலாஷைகளை வளர்த்துக் கொள்ளாமல், எல்லாதவிதமான சூழ்நிலைகளுக்கும் அனுசரித்துக் கொண்டு போகிற மனப்பான்மை எனக்கு அப்போதே வந்துவிட்டது."

"உங்களுக்கும், திரு. சுஜாதாவுக்கும் இடையிலான திருமணம் முடிவானது எப்படி?"

"என் அப்பா, அவருடைய அப்பா இரண்டு பேரும் மின்சார வாரியத்தில் உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்ததால், இரண்டு பேரும் சேர்ந்து பேசி முடிவெடுத்தார்கள். 'உங்க பெண் போட்டோவை கொடுங்கள். நான் சொன்னால் போதும், என் பையன் மறு பேச்சுப் பேசமாட்டான்!' என்றார் என் மாமனார். அவர் சொன்னது நூற்றுக்கு நூறு சரி. அவருக்கு அம்மா, அப்பாதான் முக்கியம். அதன் பிறகு கூடப் பிறந்தவர்கள். அப்புறம்தான் மனைவியும், மகன்களும். அதனால், அவருக்கும், இரண்டு பிள்ளைகளுக்கும் (ரங்க பிரசாத், கேசவ பிரசாத்) ரொம்ப ஒட்டுதல் இல்லை. ஆபீஸில் பொறுப்பான உத்தியோகம், பிசியான எழுத்து வேலை





என்று இருந்து விட்டதால், குடும்பத்துக்காக அவரால் அதிக நேரம் செலவிட முடியாத சூழ்நிலை. பிள்ளைகள் பரீட்சைக்குச் சொல்லிக் கொண்டு புறப்படுகிற போதுதான், அன்றைக்கு என்ன பரீட்சை என்றே அவருக்குத் தெரியும்!" – படபடவென்று திருமதி சுஜாதா பேசினாலும் அவரது குரலில், குறை சொல்லுகிற தொனி துளியும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

"வேறு ஏதாவது ஸ்பெஷல் இன்டரஸ்ட் உண்டா?"

"நான் விலங்கியல் மாணவி என்பதால், சுமாராய்ப் படம் வரைவேன். திருமணத்துக்கு முன்பு அவரும் ஆயில் பெயிண்டிங் பண்ணுவார். எனக்கும் சொல்லிக் கொடுத்தார். எல்லாம் கொஞ்ச காலம்தான். அப்புறம் விட்டு விட்டேன்."

"உங்கள் பெயரையே, அவர் தமது புனை பெயராக வைத்துக் கொண்டு, எழுதத் தொடங்கியபோது, சந்தோஷமாக இருந்ததா?"

"எனக்கோ எழுதத் தெரியாது. அவர்தான் எழுதுகிறார். என் பெயரைப் புனை பெயராய் வைத்துக் கொண்டதில், நான் பெருமைப்படவோ, சந்தோஷப்படவோ என்ன இருக்கிறது?" என்று வெகு யதார்த்தமாய்க் கேட்கிறார்.

"கல்யாணத்துக்குப் பின், டெல்லியில் ஆறு வருஷம். அதன் பின் இருபத்து மூணு வருஷம் பெங்களூர் வாசம்தான். பெங்களூரின் வெதர்

"அப்பா அம்மாவுக்கு அப்புறம்தான் நாய்கள்!"

எனக்கு ரொம்பப் பிடித்துப் போய்விட்டது. மெட்ராஸ் வெயிலும், புழுக்கமும் பெங்களூரை நினைத்துப் பெருமூச்சு விட வைக்கிறது."

"அமெரிக்கா போன இரண்டாவது மகன், ஜப்பானியப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டபோது, சகஜமாய் எடுத்துக் கொள்ள முடிந்ததா?"

"முதலில் அத்தனை ஈசியாய் எடுத்துக் கொள்ள முடியவில்லை என்றாலும், பின்னர் சரியாகி விட்டது. மருமகள் பெயர் கீ(ய்). ஜப்பானிய மொழியில் இந்தப் பெயருக்கு 'வலுவான தண்டு' என்று அர்த்தமாம். ரொம்ப மென்மையானவள். மற்றவர்களை மதிக்கத் தெரிந்த பெண். என் பையனும், மருமகளும் சந்தோஷமாய் இருக்கிறார்கள். அவர்கள் சந்தோஷம்தானே நமக்கு சந்தோஷம். மூத்த பையனிடம், நாங்கள் பார்க்கிற பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளும்படி சொல்லியிருக்கிறோம். சரியென்று சொல்லியிருக்கிறான். ஆனாலும், அவனும் தானாகவே ஒரு பெண்ணைத் தேடிக் கொண்டால், என்ன பண்ண முடியும்?" பேச்சில் அதே யதார்த்தம்.

"சென்னை வாசம் எப்படி இருக்கிறது?"

"மற்றவர்களிடம் எச்சரிக்கை உணர்வுடன் பழக வேண்டியுள்ளது. நிறைய புத்தகங்கள் படிக்கிறேன். கொஞ்சம் போல டெலிவிஷன், மியூஸிக். ஆசிரியர் ஒருவர் வந்து கிபோர்டு வாசிக்கக் கற்றுக் கொடுக்கிறார். மற்றபடி என் உலகமே இந்த இரண்டும்தான்!" என்று அவர் சுட்டிக் காட்டுவது இரண்டு நாய்களை. 'டாஷ் ஹன்ட்' என்ற குட்டையான, நீண்ட இனம்.

"வேட்டைக்குப் போகிறவர்களின் கூடவே அழைத்துப் போவார்கள். பறவைகளைச் சுட்டவுடன், கீழே விழுந்த பறவைகளை கவ்வித் தூக்கிக் கொண்டு வந்து விடும்!" என்று ஆரம்பித்து அவற்றின் புத்திசாலித்தனம், உணவுப் பழக்கம், பிரசவம், என்று சொல்லிக் கொண்டே போகிறார். இரண்டு நாய்களில் பெரியது மிமி. (ஜப்பானிய மொழியில் நீண்ட காது) இன்னொன்று மிமியின் (ஆண்) குட்டியான கிவி.

"சுஜாதா என்றவுடன் தமிழ் வாசகர்களுக்கு, உடனே நினைவுக்கு வருவது கம்ப்யூட்டர்தான். உங்களுக்கும் கம்ப்யூட்டர் ஆர்வம் உண்டா?"

சிரித்துக் கொண்டே, "எனக்கு கம்ப்யூட்டரை ஆன், ஆஃப் பண்ணக் கூடத் தெரியாது!"

சந்திப்பு : **பாரதி மௌலி**
படம் : **ஸ்ரீஹரி**

ஸ்டெனோக்களுக்கு என்றுமே டிமாண்ட் உண்டு. இதற்கு முக்கியக் காரணம் தட்டெழுத்து உயர்நிலைப் படிப்பையே கடகடவென்று முடித்து விடும் பலரும்கூட சுருக்கெழுத்து கற்றுக் கொள்ளும் போது பாதியிலேயே மனம் தளர்ந்து விடுவதுதான். "நான் டைப்ரைட்டிங் - ஷார்ட்ஹாண்ட் இரண்டிலும் ஹையர் பாஸ் செய்திருக்கிறேன். என்றாலும் வேலை கிடைக்கவில்லை" என்று சொல்லும் ஒரு நபரைக்கூட இங்கே காண முடியாது.

ஆனால் சமீப காலமாக வேறொரு கோணத்தில் சுருக்கெழுத்தாளர்களுக்குப் பின்னடைவு நேர்ந்திருக்கிறது. முன்பெல்லாம் "அந்தரங்கச் செயலாளர்" என்றால் அவருடைய முக்கிய தகுதியே சுருக்கெழுத்துத் திறமைதான் என்றிருக்கும். இப்போதெல்லாம் அதுவும் ஒரு தகுதி, அவ்வளவே. சொல்லப் போனால் பெரும் நிறுவனங்களில் "ஏ.சி.எஸ்" தகுதி பெற்றவர்களைத்தான் செக்ரடரியாக நியமிக்க முடியும்.

சுருக்கெழுத்தாளர்களுக்கு மவுசு இருக்கிறதா?

இந்த மாறுதல்களையெல்லாம் மனத்தில் கொண்டு சென்னை தியாகராய நகரில், சிவா விஷ்ணு கோவிலுக்குப் பின்புறமாக இயங்கி வரும் 'சுருக்கெழுத்தாளர்கள் சங்கம்' (The stenographer guild) சமீபத்தில் புதிதாக ஒரு கோர்ஸை தொடங்கியிருப்பதாக அறிந்து விவரங்களைச் சேகரிக்க அதன் கௌரவத் தலைவர் எஸ்.வி. ராமசாமியை சந்தித்தோம்.

நான்கே மாதங்களில் இவர்கள் இந்தக் கோர்ஸில் பயிற்சியளிப்பதாகக் கூறும் விஷயங்கள் நினைத்ததைவிட அதிகமாகவே இருந்து ஆச்சர்யப்பட வைத்தன. ஆங்கில தட்டெழுத்து, ஆங்கில சுருக்கெழுத்து, அக்கௌண்டன்ஸி, ஆங்கிலப் பேச்சு, கடிதப் போக்குவரத்து (பிஸினஸ் கரஸ்பான்டன்ஸ்) மற்றும் வொர்ட்ஸ்டார், லோட்டஸ் 1-2-3, டிபேஸ் III +, எம்.எஸ். வொர்ட், எக்ஸெல், இண்டர்நெட், ஈமெயில் ஆகிய கம்ப்யூட்டர் விஷயங்கள்!

வேலை வாய்ப்பை மனத்தில் கொண்டு துவக்கப் பட்டதாலோ என்னவோ ஏற்கெனவே வேறு ஏதாவது வேலைக்குச் செல்பவர்கள் இதில் சேர்ந்து பயில, இப்போதைக்கு முடியாது எனும் அளவுக்குப் பயிற்சி நேரம் காலை பத்திலிருந்து மதியம் ஒரு மணி வரை அல்லது மதியம் இரண்டு மணி முதல் ஐந்து மணி வரை என்றிருக்கிறது.

இவ்வளவையும் நான்கு மாதங்களில்

• வைர விழாக் கொண்டாட்டத்தில் மூப்பனார் கலந்து கொண்டபோது, சங்க நிர்வாகிகளும் முதலிடம் பெற்ற மாணவ மாணவியரும் எடுத்துக் கொண்ட படம்...



கற்றுத் தர வேண்டும் என்றால் மிகவும் நுனிப்புல் சமாசாரமாக இருக்குமோ என்ற சந்தேகத்துக்கு விடையாக பலமான மறுப்பு கிடைத்தது - சங்கத்தை நடத்துபவர்களிடமிருந்து மட்டுமல்ல; இந்தக் கோர்ஸை விரைவில் முடிக்கவிருக்கும் மாணவர்களிடமிருந்தும். "ஒரு மணி நேரம் கம்ப்யூட்டர் குறித்த தியரி என்றால், ஒரு மணி நேரம் ப்ராக்டிகலாக எங்களையே கம்ப்யூட்டரை இயக்க அனுமதிக்கிறார்கள். சுருக்கு வழி மற்றும் தீவிரப் பயிற்சி காரணமாக கோர்ஸ் முடியும்போது நிமிடத்துக்கு எண்பது வார்த்தைகள் எனும் அளவுக்கு - அரசின் சுருக்கெழுத்துத் தேர்வில் பங்கு கொள்ளும் அளவுக்குத் தேர்ச்சி பெற முடிகிறது" என்றார்கள்.

லாப நோக்கின்றிச் செயல்படும் இந்தச் சங்கம் மேற்படி பயிற்சிக்காக 2500 ரூபாய் கட்டணமாகப் பெறுகிறது. என்றாலும் ப்ளஸ் டூ கல்வி, 16லிருந்து 35 வரை உள்ள வயது, பதினைந்தாயிரம் ரூபாயைத் தாண்டாத பெற்றோரின் வருட வருமானம்- இந்தத் தகுதிகள் கொண்ட பெண்களுக்கு, மேற்படி நேர்முகச் செயலர் பயிற்சி எந்தவித கட்டணமும் இல்லாமல் இலவசமாகவே அளிக்கப்படுகிறது. இவர்களை ஸ்பான்சர் செய்பவர்களுள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்துக்கு முக்கிய பங்குண்டு.

1937 -ல் மூதறிஞர் ராஜாஜி அவர்களால் துவக்கப்பட்ட இந்த சங்கத்தின் வைரவிழா சமீபத்தில்தான் முடிவடைந்திருக்கிறது.

ஒரு விதத்தில் சுருக்கெழுத்தாளர்களுக்கு வேலை வாய்ப்பு நிறுவனமாகவும் இது செயல்படுகிறது. சராசரியாக தினமும் இரு நிறுவனங்களிலிருந்தாவது இவர்களை அணுகுகிறார்களாம்.

இவை தவிர அலுவலகம் செல்பவர்களும் பயனடையும் வகையில் கணிப்பொறி பயிற்சியில் (ஆரக்கில் - 8 உட்பட) டிப்ளமா கோர்ஸ்களும், இண்டர்நெட் மற்றும் ஈமெயில் ஆகியவற்றில் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன! மாம்பலத்தில் மட்டுமல்ல, இதன் திருவல்லிக்கேணி கிளையிலும் மேற்கூறிய அத்தனை பயிற்சிகளும் உள்ளன.

காலத்துக்கேற்ற மாறுதல்களை ஏற்றுக் கொண்டு, அதற்கேற்ப தன்னைச் செதுக்கிக் கொள்வதுதானே ஆரோக்கியமான போக்கு? அந்தவிதத்தில் சுருக்கெழுத்தாளர்கள் சங்கம் தனியிடத்தைப பெறுகிறது.

— ஜி.எஸ்.எஸ்.



இருதய கோளாறுகளுக்கு

மாரடைப்பு, இரத்த அழுத்தம், இருதய ஓட்டை,



தெய்வீக மூலிகை மருத்துவம்

இருதயக் கோளாறு ஆரம்ப நிலையாக நெஞ்சு படபடப்பு, லேசான நெஞ்சுவலி, கடின உழைப்பின்போது உடற்சோர்வு, மூச்சு வாங்குதல், லேசான மயக்கம், இரத்த அழுத்தம் அதிகரித்தல் (அ) குறைதல் போன்ற அறிகுறிகள் காணப்படும். இருதயத் தசைகள் தானியங்கும் தசை வகைகளினால் ஆனது. இவைகளின் இயக்கங்கள் முழுக்க, முழுக்க நரம்பு மண்டலக் கட்டுப்பாட்டினால் இயங்கும் தன்மை கொண்டது. சிறு நீரகங்களில் கோளாறு ஏற்படினும், நரம்புப் பகுதியில் கோளாறு ஏற்படினும், இரத்தம் தூய்மையை இழப்பதாலும், இரத்த நாளங்கள் சுருங்குவதாலும் இருதய அடைப்பு (மாரடைப்பு) இரத்த அழுத்தம் இருதயத்தில் ஓட்டை போன்ற கோளாறுகள் உண்டாகின்றன. தூய்மையான உணவு, போதிய உறக்கம், அதிக உடலுழைப்பினை தவிர்த்தல், கடுமையான உடற்பயிற்சி, தேவைக்கு மீறிய உணவு, அதிக கொழுப்பு சத்துள்ள உணவு வகைகள் போன்றவைகளை தவிர்த்தல் மூலமும் உடலுக்கு நல்ல எதிர்ப்பு சக்தியினை அளித்து இரத்த நாளங்களில் அடைபட்டிருக்கும் கொழுப்புப் பொருட்களை கரைத்து வெளியேற்றவல்ல தெய்வீக மூலிகைகளான வேப்பிலை, வில்வம், அத்தி, துளசி, அருகு போன்ற மூலிகைகளை எவ்வாறு உபயோகிப்பது என்பது பற்றிய ஆலோசனைகளை கீழ்க்கண்ட முகவரியிலும், முகாமிலும் டாக்டரிடம் நேரில் பெறலாம்.

50



தெய்வீக மூலிகை வைத்தியர்கள்

தலைமை முகவரி : Dr.C.K.M.குருபரன் & Dr.C.K.M.சபாபதி, S/o.Dr.C.K. மாணிக்கவாசகம்

P.B. No: 30, No: 3, திருநாத முதலி நகர், (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர் (N.A.A.) 635 601 ✆ : 04179-20469, 22769.

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, பிரின்ஸ் மேனர் பக்கத்தில் கெல்லீஸ், சென்னை-10.

இரு முகவரிகளின் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1 மாலை 6 to 8

✆ : 6424285, 6427638

Singapore Enquiry : Mrs. Renuka, Blk 101, #04, -176, Jurong East Street-13, Singapore - 600 101. ✆ : 0065 - 5621218

1998 வைத்தியரிடம் நேரில் ஆலோசனை/மருந்தினைப் பெற முகாம் விவரம்.
(முக்கிய பண்டிகை தினங்களிலும் முகாம் உண்டு)

2-ந் தேதி	- வேலூர் (N.A.)	: பிற்பகல்	1 to 2 மணி வரை ஹோட்டல் கண்ணா (கங்கா), 16, ஆஃபீஸர்ஸ் லைன், ✆ : 0416 / 23060.
2-ந் தேதி	- காஞ்சிபுரம்	: மாலை	5 to 6 ராஜம் லாட்ஜ், பஸ் நிலையம் அருகில் 9, காமராஜர் தெரு, ✆ : 04112 / 22519.
1,3,10,17,18,19,20,27,28,ந்தேதி-சென்னை		: காலை	9 to 2 மேலே உள்ள சென்னை முகவரியில், ✆ : 044 / 6424285, 6427638.
4-ந் தேதி	- கடலூர் (S.A.Dt.)	: காலை	9 to 11 ஆற்காடு உட்லண்ட்ஸ் ஹோட்டல், ✆ : 04142 / 30707, 30717
4-ந் தேதி	- விழுப்புரம்	: பிற்பகல்	2 to 3 ஹோட்டல் ஆனந்தா, பஸ்நிலையம் எதிரில், ✆ : 04146 / 22962.
4-ந் தேதி	- திருவண்ணாமலை	: மாலை	5 to 6 ராதா லாட்ஜ் பஸ் நிலையம் எதிரில் ✆ : 04175 / 22536.
9-ந் தேதி	- பெங்களூர்	: காலை	11 to 12.30 ஹோட்டல் பிரைட்வே, (கல்பனா தியேட்டர் அருகில்) கெம்பே கவுடா ரோட் ✆ : 2266374
9-ந் தேதி	- ஓசூர்	: மாலை	3 to 4 சீனிவாசா லாட்ஜ், பாகலூர் ரோட், ✆ : 04344 / 22899.
9-ந் தேதி	- கிருஷ்ணகிரி	: மாலை	5 to 6 அமராவதி லாட்ஜ், ✆ : 04343 / 22120.
12-ந் தேதி	- சேலம்	: காலை	11.30 to 12.30 ஹோட்டல் செல்வம், புதிய பஸ் நிலையம் எதிரில், ✆ : 0427 / 449333.
12-ந் தேதி	- ஈரோடு	: மாலை	4 to 5 ஹோட்டல் ஆக்ஸ்ஃபோர்டு, பஸ் நிலையம் எதிரில், ✆:0424 / 226611 / 12 / 13 / 14/15/16/17/18
13-ந் தேதி	- கோயம்புத்தூர்	: காலை	9.30 to 12.30 சேரன் பேலஸ் லாட்ஜ் (சாந்தி தியேட்டர் பின்புறம்) ✆ : 0422 / 302211, 302220
14-ந் தேதி	- மதுரை	: காலை	9 to 11 ஹோட்டல் கிராண்ட்ஸ் செண்டரல், மேலப் பெருமாள் மேஸ்திரி தெரு, ✆ : 0452 / 743941
14-ந் தேதி	- தஞ்சாவூர்	: மாலை	5 to 6 அசோகா லாட்ஜ், ✆ : 04362 / 30021 / 30022
15-ந் தேதி	- திருச்சி	: காலை	9 to 11 ஹோட்டல் ஆனந்த், (செண்டரல் பஸ் நிலையம் அருகில்), ✆ : 0431 / 460545.
15-ந் தேதி	- நாமக்கல்	: பிற்பகல்	2.30 to 3.30 ஹோட்டல் தேவி அன்னபூர்ணா, ✆ : 04286 / 20433
22-ந் தேதி	- தர்மபுரி	: காலை	9 to 10 ஸ்ரீ மாதேஸ்வரா லாட்ஜ், ✆: 04342 / 60226.
22-ந் தேதி	- திருப்பூர்	: பிற்பகல்	2 to 3 ராமகிருஷ்ணா லாட்ஜ், ✆ : 0421 / 740418.
22-ந் தேதி	- உடுமலைபேட்டை	: மாலை	6 to 7 குறிஞ்சி லாட்ஜ், பஸ் நிலையம் எதிரில் ✆ : 04252 / 24353.
23-ந் தேதி	- திண்டுக்கல்	: காலை	9 to 10.30 ஹோட்டல் குறிஞ்சி, பஸ் நிலையம் பின்புறம் ✆:27017.
23-ந் தேதி	- தூத்துக்குடி	: மாலை	5 to 6 ஹோட்டல் ஆல்வின், தேவர் புரம் ரோடு, ✆ : 0461 / 327780
24-ந் தேதி	- திருநெல்வேலி	: காலை	8.30 to 11 ஹோட்டல் ஸ்ரீ சித்தாபதி, மதுரை ரோடு, ✆ : 0462 / 333312.
24-ந் தேதி	- நாகர்கோவில்	: பிற்பகல்	2 to 3 ஹோட்டல் சரண்யா, மீனாட்சிபுரம், ✆: 04652 / 25669.
25-ந் தேதி	- விருதுநகர்	: காலை	9 to 10 அண்டன் லாட்ஜ், மதுரை ரோடு, ✆ : 04562 / 45537.
25-ந் தேதி	- கரூர்	: பிற்பகல்	2.30 to 3.30 மணி வரை அரசி லாட்ஜ், ஜவகர் பஜார், ✆ : 63763.


Dr.CKM
DIVINE HERBAL CENTRE

தகவல்: டாக்டர் அவர்களின் மூலிகைகள் பற்றிய 23 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய **'எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்'** என்ற புத்தகத்தினை பதிவுத்தபாலில் பெற ரூ.60/-ம் இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய **'என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்'** என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.60/-ம் மூலிகை மகிமை பற்றிய ஆடியோ கேசட்டை பெற ரூ.60/-ம் தலைமை முகவரிக்கு M.O. அல்லது D.D. அனுப்பவும்.

7-ந் தேதி - மும்பை : காலை 9 to இரவு 8 மணி வரை The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga, (CR), Ph : 4011589

அவசரப்படாதீர்கள்!

10 கட்டளைகள்



மேஜை, நாற்காலி, கட்டில் என்று பலவித ஃபர்னிச்சர் வாங்கும்போது சில விஷயங்களை நினைவில் கொள்வது நல்லது.

● புதிதாக வெட்டி எடுக்கப்பட்ட மரத்தில், சுமார் அறுபது சதவீத ஈரப் பசை இருக்கும். இந்த ஈரப் பசையை நீக்குவதைத்தான் பதப்படுத்துதல் என்று சொல்கிறார்கள். இந்த வகையில் புதிதாக வெட்டப்பட்டு வரும் மரத்தைவிட, பதப்படுத்தப்பட்டு வரும் மரம்தான் சிறந்தது.

● நாற்காலி வாங்கச் சென்றால் "பிடி உள்ள நாற்காலி வேண்டுமா? அகலமான கைப் பிடியா?" ட்ரஸ்ஸிங் டேபிள் என்றால் "எந்த அளவு உயரம் கொண்ட கண்ணாடி?" என்பது போன்ற பிற விவரங்களை முன்பே யோசித்து முடிவு செய்து கொண்டு பிறகே கடைக்குள் நுழையவும்.

● நிறைய கலை வேலைப்பாடு கொண்ட மர ஃபர்னீச்சரை பார்த்த உடனே டக்கென்று வாங்கிவிட வேண்டாம். அதைப் பராமரிக்க முடியுமா என்பதைத் தீவிரமாக யோசித்து விட்டு முடிவு செய்யுங்கள்.

● அறை அல்லது கூடத்தின் அளவு, அவை பராமரிக்கப்படும் விதம் இவற்றையும் மனத்தில் கொள்ளவும். இல்லையென்றால் ஷோரூமில் பாந்தமாகக் காட்சியளிக்கும் அந்தப் பொருள் நம் வீட்டுக்குள் வந்து சேர்ந்ததும் வெகு விநோதமாக, பொருந்தாமல் போய் விடலாம்.

● "இது அசல் தேக்கு மரத்தில் செய்தது" என்று விற்பனையாளர் கூறும்போது அது உண்மைதானா என்பது நமக்குத் தெரிய வழியில்லை. ஆனால் "இந்த மரச்சாமான் தேக்கு மரத்தில் செய்யப் பட்டது" என்று அந்த சாமானின் விவரங்களை எழுதி விற்பனையாளரின் கையெழுத்தைப் பெற்று வைத்துக் கொள்ளுங்கள். ஏமாற்றப்பட்டு விட்டோம் என்பது வருங்காலத்தில் தெரிய வந்தால் நுகர்வோர் நீதிமன்றத்தையாவது நாடலாம்.

● நாற்காலி வாங்கும்போது கூச்சப்படாமல் ஒருமுறைக்கு இருமுறை உட்கார்ந்து பார்த்து சௌகரியமாக இருக்கிறதா என்பதைத் தீர்மானியுங்கள். முக்கியமாக நாற்காலியின் முதுகுப் பகுதி உங்களுக்கு ஏதாவது சிரமத்தைக் கொடுக்கிறதா என்பதை அறிய ஒரு முழு நிமிடம் கூட தேவைப்படும்.

● மர சோபா செட் வாங்கும்போது அவற்றின் மேலே வைக்கப்படும் ஃபோம் குஷன்கள் நீங்கள் விருப்பப்படும் உயரத்தை விட கொஞ்சம் அதிகமானதாகவே இருக்கட்டும். ஏனென்றால் அவை நாளடைவில் (சில சமயம் சில நாட்களிலேயேகூட) அமுங்கிப் போய் விட வாய்ப்புண்டு.


● மேஜை வாங்கும்போது அதன் இழுப்பறைகள் தடையில்லாமல் திறக்கவும் மூடவும் முடிகிறதா என்பதை சரி பார்ப்பீர்கள்தான். அதேசமயம் அவற்றில் உள்ள ஜாயின்ட்டுகளில் "டவ்டெயில்" என்ற வகை இணைப்பு கொடுத்திருந்தால் மேலும் பலம்.

● குஷன் நாற்காலிகளில் கீழ் பகுதியில் மரமும் மேல் பகுதியில் ஃபோம், லாமெக்ஸ் ரப்பர், ஏன் தேங்காய் நாரும்கூட இடம் பெறுவதுண்டு. நாற்காலிக்கு உறுதியளிப்பதுடன், இந்தப் பொருள்கள் அதிகம் இடம் மாறாமல் இருப்பதற்கும் அதில் உள்ள ஸ்பிரிங்குகள்தான் உதவுகின்றன. தரமான ஸ்பிரிங்குகள் போடப் பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

● சோபா, குஷன் நாற்காலி போன்றவற்றின் மேல்பரப்பு சில மாதங்களிலேயே கிழிந்து விடக் காரணம் தவறான வடிவமைப்பு, மற்றும் தரமில்லாத ரெக்ஸின். இவ்விஷயத்தில் கவனம் தேவை.

— ஜி.எஸ்.எஸ்.

DEEP IMPACT



பாலியல் லீலைகளை அம்பலமாக்கும் முயற்சி, அமெரிக்க ஜனாதிபதி - இரண்டுமே படத்தில் உண்டு. என்றாலும் **க்ளிண்டன் - மோனிகாவின் கதையல்ல இது.**

வெள்ளை மாளிகையில் ''எல்லி'' என்ற பெண்மணியின் பெயர் அடிக்கடி அடிபடுகிறது. இதை ஜென்னி என்ற **பெண் நிருபர்** கண்டுபிடிக்கிறார். பெரிதாக ஒரு பாலியல் லீலையை வெளிப்படுத்தி பத்திரிகைத் துறையில் பரபரப்பாளர் என்ற பெயரை அடையத் திட்டமிடுகிறார். புலனாய்வு செய்யும்போது அவளுக்குத் தெரிய வருகிறது; 'எல்லி' என்பது உலகிற்கு ஏற்பட இருக்கும் ஓர் ஆபத்தின் சங்கேத வார்த்தை!"

சிறிதும் பெரிதுமான ஒரு வால் நட்சத்திர ஜோடி பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. அது பூமியின் மீது உரசினால்கூட **கடல்கள் கொந்தளித்து உலகமே அழியலாம்** என்ற நிலை. இதைத் தடுக்க அமெரிக்க - ரஷ்ய விண்வெளி நிபுணர்கள் "மெஸையா" என்ற விண்வெளிக் கலத்தை உருவாக்குகிறார்கள். இது அந்த வால் நட்சத்திரத்தை அடைந்து, அதில் சில அணுகுண்டுகளை இணைத்து விட்டு வர வேண்டும். இதனால் அது தூள் தூளாக வெடித்துவிட, உலகம் தப்பித்து விடும்.

ஆனால் இந்த விண்வெளிக்கலத்தில் ஏற்படும் கோளாறுகள் காரணமாக **உலகத்தின் ஒரு பகுதியாவது அழியும்** என்ற நிலை. உலகின் சில பகுதிகளில் "நிலத்தடி குகைகள்" அமைக்கிறார்கள். அந்தக் குகைகளில் தங்கக் கூடிய சிலருக்கு உயிர் தப்பும் வாய்ப்பு உண்டு. இதற்காக, **குலுக்கல் முறையில்** உலகம் முழுவதிலும் சிலரைத் தேர்வு செய்கிறார்கள்.

"நாளையே உலகம் அழிந்தால்?" என்ற கவையான கற்பனையோ, வாழ்நாளின் இறுதிக்கு வந்து விட்டோம் என்ற நிலையில் மனிதன் எப்படியெல்லாம் மாறுவான் என்பதோ ஹாலிவுட்டுக்குப் புதிதில்லை. என்றாலும் பேரழிவைக் காட்டி **பயமுறுத்துவதைவிட,** மனித உறவுகளின் **பெருமையை அழுத்தமாகப் பதிய வைக்கிறது இப்படம்.** இயக்குனர் ஒரு பெண்மணி - மிமி லெடர்.

— ஜி



துலாம் ராசிக்காரரான எழுத்தாளர் பிரபஞ்சனுக்கு விருதுகள் வர்ற சான்ஸ் இருக்காம். (ஞானபீடம் தவிர ஏதாவது பாக்கி இருக்கா என்ன?)



மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

புதன் பலம் கூடுதுன்னா புஜ பலம் கூடறாப் பலங்க. உங்க செல்வாக்கு சும்மா ஓஹோன்னு உயர்ந்து, நினைச்சதை சாதிக்கிற ஆற்றல் வந்து சேரும்! குடும்பத்துல இருக்கற சசமுசாக்களெல்லாம் மறைந்து, மகிழ்ச்சி பெருகும். பெண்களுக்கு புத்திர பாக்கியம் ஏற்பட சான்ஸ் அதிகம். ஆண்களுக்கு விசேஷமா சொல்ல ஒண்ணுமில்லைன்னாலும் ஸ்மூத்தான வாழ்க்கைக்கு கேரண்டி! பணம் பிரச்னை இல்லாம, எதிரித் தொல்லை இல்லாம, நோய்நொடி அண்டாம சுகமா இருப்பீங்கன்னா, வேற என்னங்க வேணும்?




ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

கொடுத்து வெச்சவர் சார் நீங்க! ஒரு பக்கம் உங்க கூடப் பிறந்தவங்க ஆசை ஆசையா உங்களுக்கு உதவுவாங்கன்னா, இன்னொரு பக்கம் முன்னபின்ன தெரியாதவங்களும் உங்களை சமயத்துல சப்போர்ட் பண்ணுவாங்க. தொழில் ரீதியில உங்க வளர்ச்சியைத் தடுக்க முடியாது! குறிப்பா எழுத்தாளர்களுக்கு இது ஓஹோ வாரம்! புதுசா நாவல் கீவல் எழுத ஆரம்பிச்சிருந்தீங்கன்னா, அது நல்ல பேர் வாங்கித் தரும். (ராயல்டி வாங்கித் தருமான்னு தெரியாது.) ஒரு முக்கியமான முடிவெடுத்து, பர்ஸனல் லைஃப்ல அதை அப்ளை பண்ணுவீங்க. கண்டிப்பா பலன் உண்டு.



மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

உங்க பலமே உங்க சம்சாரம்தான் சார். வீட்டுக்காரம்மா சொல்றதைக் கேட்டு நடந்தா உங்களுக்கு ரொம்ப நல்லது! குறிப்பா, வீடு கீடு வாங்கற யோசனை இருந்தா தாய்க்குலத்தைத் தவறாம கன்ஸல்ட் பண்ணுங்க. சட்டப் பிரச்னை காரணமா ஏதாவது வழக்கு இழுத்தடிச்சிட்டிருக்கா? இப்ப பைசலாயிடற நேரம். காவல், ராணுவத்துறையினருக்கு மதிப்பு கூடும். பயணத்துல கவனம் முக்கியம். தண்ணி போட்டுட்டு லாரிக்காரன் குறுக்கால வந்தா கய்தே, கஸ்மாலம்னு உரக்கத் திட்டாதீங்க. நடு ரோடுல வீண் விவகாரம் வந்து சேர வாய்ப்பு ஜாஸ்தி. வீட்டுல செல்லப் பிராணியா டாமி, ஜிமி வளர்த்தீங்கன்னா, கவனமா பார்த்துக்கங்க. வெறி பிடிச்சி, உங்களையே டேஸ்ட் பார்க்க அது விரும்பலாம்!




கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

நிதானமே பிரதானம்னுவாங்க. ஆனா, நீங்க இந்த வாரம் ரொம்பப் பதற்றமா காரியங்கள் செய்வீங்க. விளைவு? ரெண்டும் ரெண்டும் அஞ்சுன்னு கூட்டல் போட்டு, ஆபீசர் கிட்ட அர்ச்சனை வாங்குவீங்க. கவனமா இருங்க சார். கவனம், கணக்குல மட்டும் இருந்தா பத்தாது. காசுலயும் வேணும். கறிகாய் வண்டிக்காரன் செல்லாத நோட்டு குடுத்து டபாய்க்கப் பார்ப்பான். கண்டக்டர் சில்லறை பாக்கி தராம ஏமாத்தலாம். நீங்க ஒரு கலைஞரா இருக்கீங்கன்னா இந்த வாரம் தைய தைய தையாதான்! உற்சாகம் பிச்சிக்கும்னு சொல்ல வரேன்! நிறைய புது வாய்ப்புகள் வரும். எதிர்பாராத அதிர்ஷ்டம் அடிக்கலாம். அதுக்குன்னு லாட்டரி, ரேஸ் பக்கம் போயிடாதீங்க. கவுத்துக்கும்!



சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

குரு பார்வை சூப்பரா இருக்குங்க. அதனால நீண்ட நாள் திட்டங்கள் எதனாலும் இப்ப தொடங்கிடலாம். பிரமாதமா ஒர்க் அவுட் ஆகும். உடம்பு சரியில்லாம அவதிப்பட்டவங்களுக்கு இப்ப குணம் கிடைக்கும். அதுக்குன்னு ஐஸ்க்ரீம் ஐஸ்க்ரீமா வெட்டாதீங்க. ஜல்ப் பிடிச்சிக்கிட்டு பிராணனை வாங்கும். விளையாட்டுத் துறை ஆசாமிங்கன்னா, வெற்றி மேல வெற்றிதான். பெண்களுக்குக் கேட்கவே வேணாம். அம்மணிங்க ராஜ்ஜியம்தான்! நினைச்சது நடக்கும். ஆனா ஊட்டுக்காரங்களோட அநாவசியத்துக்கு முறைச்சுக்காதீங்க. ஆசாமி அப்செட் ஆகி, ஊடல் வந்துடும். வீட்டுப் பெரியவங்க உடல் நலத்துல கவனமா இருங்க. இந்த வாரம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வாரம்.



கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*


குரு பலன் கொஞ்சம் குறைஞ்சிருக்கு. ஸோ, ரொம்பக் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டி வரும். வீண் அலைச்சல், பண விரயம், மனஸ்தாபங்களைத் தவிர்க்க முடியாது. அதுக்காகச் சோர்ந்து போயிடாதீங்க. உங்க ஆற்றலும் பேச்சு சாதுர்யமும் உங்களுக்கு எப்பவும் நல்ல பேரை வாங்கித்தரவே செய்யும். இந்த வாரம் கண்ட செலவுகளைத் தவிர்க்கப்பாருங்க. கடன் வாங்காதீங்க. வீண் வம்புகள்ல தலையைக் கொடுக்காதீங்க. வீட்டுல புருஷன் பெண்சாதிக்கு நடுவுல பிணக்கு வரவே கூடாது. அது அநாவசியமா உங்க குழந்தைகளை பாதிக்கும். எது

அக்னி சர்மா பக்கம்

செப்டெம்பர் 30 முதல் அக்டோபர் 6 வரை


நடக்குமென்பார், நடக்கும்!

எப்படியானா என்னங்க? புள்ளையார் அருள் தான் உங்களுக்குப் பரிபூரணமா இருக்கே?




துலாம் : (சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)

பொருளாதார நெருக்கடி நம்ம நாட்டுக்குத் தீருதோ இல்லையோ, இப்ப உங்களுக்குத் தீர்ந்துடும்! பழைய பாக்கி எல்லாம் வந்து சேர்றது மட்டுமில்லை; ஷேர் மாதிரி முதலீடுகள் கூட இப்ப லாபமே தரும். எழுத்துத் துறைல இருக்கறவங்களுக்கு விருதுகள் வர்ற சான்ஸ் இருக்கு. பயணத்துல கவனம் அவசியம். சிறு விபத்துகளுக்கு வாய்ப்பு இருக்கு. வீட்டுல கத்தி கடப்பாறை இருந்தா ஓரமா வைங்க. லேசா கால் தடுக்கியோ, கையைச் சீவியோ கூட ரத்த சேதம் வரலாம். அதே போல பேச்சுலயும் கவனம் முக்கியம். குழாயடிச் சண்டைக்கெல்லாம் கேஷுவல் லீவ் குடுத்துடுங்க.



விருச்சிகம் : (விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)

என்னமா பிளானை போடறோம். ஒண்ணும் ஒர்க் அவுட் ஆகமாட்டேங்குதேன்னு கவலையா? குறுக்கீடுகளைத் தவிர்க்கவே முடியாது. இது மட்டுமா? அலர்ஜி மாதிரி ஏதாவது வந்து உடல் தடிப்பாகலாம். சாப்பாட்டு விஷயத்துல ரொம்ப கவனமா இருங்க. இன்வெஸ்ட்மென்ட் எதுவும் இப்ப வேணாம். வெளியூர் பயணங்கன்னா கட்டாயம் தவிர்த்துடுங்க. அலைச்சலும் செலவும்தான் மிஞ்சும். ஆனா இந்த ராசிப் பெண்கள் பாடு ஜாலிதான். சொந்தக்காரங்களால குதூகலமா ஏதாவது செய்தி வரும். வீட்டுல விசேஷம் நடக்கும். கொடுக்கல் வாங்கல் மட்டும் வெச்சிக்காதீங்க.




தனுசு: (மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)

ரொம்பப் பிரமாதம்னு சொல்ல முடியாது. கஷ்டப்பட்டுத்தான் எதிலும் வெற்றி கிடைக்கும். குறிப்பா அரசாங்கத்திலேருந்து ஏதாவது 'வர வேண்டிய' விஷயம் இருந்தா ரொம்ப இழுத்தடிக்கும். வழக்குகளுக்கு வாய்தா மேல வாய்தா வாங்க வேண்டி வரும். பத்திரிகையாளர்கள், கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு அலைச்சலும் இருக்கும்; பலனும் இருக்கும். சிலருக்கு லவ் மேட்டர் சக்ஸஸாகும். அதுக்காக பஸ் ஸ்டாண்ட்ல ட்ரை பண்ணாதீங்க. காவல் துறையினருக்கு நிறைய கேஸ் அகப்படற பலன் இருக்கு! விருந்துகள்ல கலந்துக்கற சந்தர்ப்பம் வரலாம். வீட்டுல சிறு சிறு ஊடல்கள் இருக்கும்.




மகரம் : (உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)

நாய்க்கடி, தேள்கடி மருந்துகள் வாங்கி வெச்சிக்கங்க. இந்த வாரம் விஷ ஜந்துக்களுக்கு நீங்க நல்ல விளையாட்டுப் பொருள்! ஆனா பொதுவா உங்களுக்குப் பல நல்ல பலன்கள்தான். நீங்க ஒரு ரைட்டரா இருந்தீங்கன்னா பண வரவு பிரமாதமா இருக்கும். போலீஸ்னா 'மாமூல்' வாழ்க்கைல பிரச்னை இருக்காது. பெண்களுக்கு புதிய நகை வாங்கற யோகம் இருக்கு. வெளிநாட்டு செய்திகள் உங்களை மகிழ்ச்சிப்படுத்தும். சிலருக்கு தொலைதூர ட்ரான்ஸ்பர் வரலாம். மத்தபடி, பிரச்னை இல்லாத வாரம் இது.



கும்பம் : (அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)

தன்னம்பிக்கை அதிகம் உள்ள உங்களுக்கு என்னங்க கவலை? ஆனா மேலதிகாரிகள் பற்றி வெளிப்படையா குறை சொல்றது, வத்தி வைக்கிறது இந்த மாதிரி காரியங்கள் வேணாம். உங்களுக்கு எதிர் வீட்டுலேயே உங்க எதிரி இருக்கலாம்! பெண்களுக்கு இப்ப நேரம் ஓஹோ! சிக்கலான விஷயங்கள் சுலபமா கைகூடும். விட்டுப் போன உறவுகள் மறுபடி மலரும். ஆனா எச்சரிக்கை அவசியம்! யாரையும் லேசா நம்பிடாதீங்க. உங்களைப் பார்த்துப் பொறாமைப் படற கூட்டம் அதிகம். தெய்வீகப் பணிகளில் மனம் லயிக்கும். சிலருக்கு தீர்த்த யாத்திரைக்கான வாய்ப்புகளும் வரலாம்.



மீனம் : (பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)

ஸ்பீட் ப்ரேக்கர் நிறைய உள்ள வாழ்க்கைங்க இது! லாரிக்காரன் மாதிரி ஓவர் ஸ்பீட்ல வண்டி ஓட்டாம நின்னு நிதானமா போனீங்கன்னா விபத்துகளைத் தவிர்க்கலாம். உங்க செயல் திறன் மேலோங்கி இருந்தாலும் சில்லறைப் பிரச்னைகளுக்குக் குறைவு இருக்காது. அதுவே சமயத்துல 'நோட்டு'ப் பிரச்னையாகவும் ஆகலாம். எது எப்படியானாலும் கவனமா செயல்படுங்கன்னா எதிலும் வெற்றி நிச்சயம். இந்த வாரம் ஒரு முக்கியமான பிரமுகரோட அறிமுகம் கிடைக்கும். நல்லா பயன்படுத்திக்கிடுங்கன்னா, சமயத்துல அவரோட உதவி உங்களுக்கு ரொம்பத் தேவைப்படும். ●

கிஸ்

"அப்ப கோய்ந்தா?" என்றான் மூர்த்தி.

மிகவும் பரபரப்படைந்திருந்த கருப்பண்ணசாமி, "ஏண்டா இப்படிப் பண்ணிட்டே?"

குடுத்து ரகளை பண்ணிடும்னு வத்தி வெச்சிட்டு வந்துர்றேன் பாரு" என்றான் மூர்த்தி.

"என்ன வேணா செய்யி. என் உள் மனசு சொல்லுதுடா. எனக்கு நல்லகாலம் வந்தாச்சு. உங்க நாடகத்துக்கு ஒரு கும்பிடு."

''அப்ப ஏண்டா முதல்ல ஒத்துக்கிட்ட?'' என்றான் கருப்பண்ணசாமி.

"மன்னிச்சிடு. சாத்தான் ஸிட்ஸ் ஆன் ஐடில் மைண்டுன்னு சும்மாவா சொன்னான்? வேலையத்து இருந்தபோது வந்து கூப்டீங்க. திடீர்னு பழைய ஆவேசம் பொங்கிச்சி. சம்மதிச்சேன். எவன் கண்டான், அதே தேதில இப்படி ஒரு அழைப்பு வரும்னு?"

''உன்னையெல்லாம் நல்ல கலைஞன்னு நம்பி...சே!"

"த பார்! இந்த நல்ல கலைஞன், உன்னத

ஒரு ஞானி போலச் சில விநாடிகள் கண்களை மூடிக் கொண்டிருந்த அடைக்கலராஜ், திறக்காமலேயே கருப்பண்ணசாமியை நோக்கிக் கை நீட்டிப் பேச ஆரம்பித்தான்.

''நீ எனக்குக் கடவுள் தான். அதுல சந்தேகமே இல்லை. கோர் ஆஃப் பிளாட்ஃபாரமா இருந்திருக்க வேண்டியவன் வாடகை பாக்கியை செட்டில் பண்ணி, வாழ வெச்சிருக்கே. ஆனா, இந்த நிமிஷம் கடவுளை விட எனக்கு இந்த ஆஃபர் பெரிசு இல்லையா? மாசா மாசம் நீயா என் வாடகையைக் கட்டுவே? ஒரு வார மாநாடு! மைக்செட் கொண்டாந்து போட்ருன்னு தகவல் வருது. சொளையா பத்தாயிரம் பார்த்துடுவேன். அதை விட்டுட்டு அஸ்லாம் வந்து டமாரம் அடிச்சி வீதி நாடகம் போட்டா நாலு பைசா தேறுமா? வயிறு நிறைந்தவன் எல்லாம் கலைச் சேவை பண்ணுங்க. என்னை விட்ருங்க."

"த பார் ராஜு! உன்னுது எல்லாம் தைமூர் காலத்து செட்டு; கொர் புர்னு சவுண்டு



மான படைப்பு, சரித்திரத்தில் பேரு இதெல்லாம் பொழைப்புக்கு உதவறதில்லை. வாழ்க்கைல, மஞ்சள் நீராட்டு விழாங்களுக்கு மைக்சப்ளை பண்ணியே அழிஞ்சிருவனோன்னு பயந்துட்டிருந்தேன். இது ஒரு வாய்ப்பு. பெரிய கட்சியோட மாநில மாநாடு. ஒலியமைப்பு – அடைக்கலராஜ். டீவில காட்டுவான். பார்த்துட்டு நாலு பேர் கூப்பிடுவானில்லை? அஸ்ஸாம்காரன் என்ன ஆயுசுக்குமா வெச்சி சோறு போடப் போறான்?"

"அதிகம் பேசற ராஜு!"


"அப்படித்தாண்டா பேசுவேன்! காசு வேணும் எனக்கு. வயிறு ரொம்பணும்! கடன் பட்டிருக்கியா எப்பவாச்சும்? ஒரு நைட்டு தூங்கமாட்ட! சோறு இறங்காது. கலையை வெச்சிக்கிட்டு நாக்கு வழிக்கவா? இவனுக்கு ஸ்டார் ஓட்டல்ல மாசச் சம்பளம். வர்றவன் போறவனெல்லாம் டிப்ஸ் வெட்டுவான். ஐயா அலுங்காம குலுங்காம புரட்சி நாடகம் போடுவாரு. உனக்கென்னடா மூர்த்தி? நீ ஏன் பைத்தியம் பிடிச்சி அலையற?"

கருப்பண்ணசாமி ஒரு காரியம் செய்தான். "ராஸ்கல்" என்று ஒரே தாவில் ராஜுவை மோதி, சட்டையைப் பற்றி, விட்டான் ஒரு அறை.

"ஐயோ, என்னது இது?"

பரிச்சயமான இளநீர்க் குரல். நின்று திரும்பிப் பார்த்தபோது பரிதவித்து ஓடி வந்து கொண்டிருந்தாள் டெல்லி போன ஊர்மிளா.

பா. ராகவன்



அந்த உணர்ச்சிமயமான கட்டத்திலும் அவசரமாகத் தலையைக் கோதிக் கொண்டான் மூர்த்தி.

"வாட்'ஸ் ஆல் திஸ் கேபிஎஸ்?"

"இதுக்குப் பேர் தான் கலைதாகம் சிஸ்டர். ஆறு வருஷமாகத்தான் இவன் ட்ராமாக்காரன். ஆனா, பத்து வருஷமா என் நண்பன்! ஹூம்!" என்றான் அடைக்கலராஜ். "அடிச்சுட்ட இல்லே? இரு, வெச்சுக்கறேன்!"

"கேபிஎஸ், நீங்களா இப்படி?"

"நீங்க டெல்லி போகலை?" என்றான் மூர்த்தி.

"காரியம் சிக்கிரம் முடிஞ்சிட்டதால் திரும்பிட்டேன். **சொல்லுங்க, என்ன ஆச்சி?** ஏன் இப்படி வேர்ல்ட் வார்?"

"ஊருக்குக் கிளம்ப இன்னும் ரெண்டே நாள்! இப்ப சொல்றான், வரலைன்னு-

ஏற்கெனவே மூணு பேர் கழண்டு போயிட்டாங்க. கேரக்டர்ஸைக் குறைச்சு, கொஞ்சம் மாத்தி எழுதியிருக்கேன். இப்ப இவரும் வரலையாம்."

"சொல்லுங்க சிஸ்டர்! வாழ்க்கைல மொத முறையா எண்ணிப் பார்க்கற அளவுக்கு ரூபா வர சான்ஸ் வந்திருக்கு. விட்டுட்டு கூத்தாட வர முடியுமா?"

"கேவலமா பேசின, கொன்னுடுவண்டா உன்னை?" என்றான் கருப்பண்ணசாமி.

"ஒரு நிமிஷம்" என்ற ஊர்மிளா, "கொஞ்சம் வெளில வரீங்களா?" என்றாள் கருப்பண்ணசாமியைப் பார்த்து.

மொட்டை மாடி வளைவு. தட்டு முட்டுத் தகரங்கள் நிறைந்த படி அடுக்குகளின் கீழே அவனை நிறுத்தி, "நீங்க கொல்றதா இருந்தா என்னைத்தான் கொல்லணும்" என்றாள் ஊர்மிளா.

"ஏன்?"

"ராஜு வராததுக்குக் காரணம் நான்."

"எப்படி? எப்படி?"

"ரொம்பக் கஷ்டப்படறார். அன்னிக்குப் பேசினப்ப, பணமில்லைங்கற விஷயம் ஒரு மனுஷனை எத்தனை தூரம் விரக்திக்குக் கொண்டு போவுதுன்னு தெரிஞ்சது. அந்தக் கஷ்டமே பார்க்காதவள் நான். அதான், பொறுக்காமல்..."

"என்ன செய்தாய்?"

"இந்தக் கட்சி, எங்கப்பாவோட கட்சிலேருந்து பிரிஞ்சி போனவங்களுதுன்னு தெரியும்தானே? ஜெனரல் செகரட்டரி எனக்கு நல்லா தெரிஞ்சவர். சின்ன வயசுல என்னையே அவர் தூக்கி வளர்த்ததா சொல்லுவார். சும்மா ஒரு போன் பண்ணி ஹெல்ப் பண்ண முடியுமான்னு கேட்டேன். எதுக்கும் இருக்கட்டும்னு ஞாபகப்படுத்தறாப்பல ஒரு லெட்டரும் எழுதினேன். ஒழுங்கா போஸ்ட் பண்ணிருப்பீங்களே? அதான், ஏதோ பண்ணியிருக்கார்னு நினைக்கறேன்."

"கெடுத்தியே ஊர்மிளா! இப்ப இவன் நாடகத்துக்கு வரலைங்கறான்"

"கேபிஎஸ், நான் ஒண்ணு சொன்னா தப்பா எடுத்துக்க மாட்டீங்களே?"

"எப்படி முடியும்? சொல்லு."

"வாழ்க்கைல எனக்குப் பணப் பிரச்னை தவிர மிச்ச எல்லாவிதமான பிரச்னைகளும் உண்டு. எதையும் சமாளிக்கலாம் - பணம் இருந்துட்டால். ஆனால் அடிப்படைத் தேவைகளைக்கூட நிறைவேத்திக்க முடியாத அளவு பண நெருக்கடி இருக்கும்போது, மத்த விஷயங்கள்ள வரக்கூடிய ஆர்வம் தற்காலிகமானதாத்தான் இருக்கும்னு நம்பறேன். சரியா?"

"நான் இல்லைன்னு சொல்லலை. ஆனால், இது ஒரு வாய்ப்பு இல்லியா? என் கனவு ஊர்மிளா இது! என்னவோ ஆக நினைச்சேன். என்னென்னவோ ஆயிட்டேன்! தற்செயலா கிடைச்ச வாய்ப்பும் நம்ம கையாலாகாத்தனத்தால் கை நழுவுதுன்னா, கோபம் வராதா?"

"புரியுது. ஸாரி."

"ப்ச்! விடு. நீங்க வரீங்க இல்லை?"

"வரேன் கேபிஎஸ்."

"அது போதும்."

"நான் மட்டும் போதுமா?"

"ஏன்?"

"இல்லை, வேற யாரும் வராட்டாகூடப் பரவாயில்லையா?"

"வேற யார் வரப் போறதில்லை?"

"மூர்த்தி" என்றாள் ஊர்மிளா.

"ஐயோ, அவனுக்கென்ன?"

"ப்ளீஸ், பதறாதீங்க கேபிஎஸ்."

கருப்பண்ணசாமி அவளை உற்றுப் பார்த்தான். பின் சொன்னான்.

"என் நாடகத்துல எனக்கே தெரியாமல் ஒரு வில்லி கேரக்டர் நுழைஞ்சாச்சு."

சட்டென்று அவள் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"ஸாரி. நான் ஞானசூன்யம்தான். கலை அருமை தெரியலைதான். ஆனா, நீங்க - உங்க நண்பர்கள் படற கஷ்டம் பொறுக்கலை. பெரிய நூற்றாண்டு கால நட்பு இல்லை நமக்கு. ஆனா... நான் என்ன சொல்வேன்? ஏனோ உங்களைப் பிடிச்சுப் போச்சு! நினைச்சுப் பார்த்திருப்பேனா, இப்படியொரு ஃப்ரெண்ட்ஸ் சர்க்கிள் கிடைக்கும்னு? ஸாரி.. அதிகப் பிரசங்கித்தனமா..."

"என்ன பண்ணியிருக்கே?"

"ஃபிலிம் டிவிஷன்ல என் ஃப்ரெண்ட் ஒருத்தி பெரிய போஸ்ட்ல இருக்கா. அவ மூலமா..."

"அவ மூலமா?"

"மூர்த்திக்கு ஒரு டாக்குமெண்ட்ரி பண்ண சான்ஸ் வாங்கி..."

"ஐயோ, நெசமா?" என்று அலறிக் கொண்டு ஓடி வந்தான் மூர்த்தி.

ஒட்டுக் கேட்ட பாவத்துக்கு ஒரு தரம் விழுந்து சேவித்து விட்டு "எனக்கா? எனக்கா? ஃபிலிம் டிவிஷன்ல சான்ஸா? பீகாரில் மழை அந்த மாதிரியா?"

"உம்!"

"எப்ப? எப்ப?"

"தெரியலை. இன்னிக்கு நாளைக்கு லெட்டர் வரும்."

"தெய்வமே!" என்று மூன்று முறை சுற்றி வந்து, "ஐயோ, தாங்கலையே" என்று துள்ளிக் குதித்தான்.

பாய்ந்து வந்த அடைக்கலராஜ், "சிஸ்டர் எனக்கு இனி நீங்கதான் கன்னிமேரி" என்றான் கண் கலங்கி.

இதெல்லாவற்றையும் பொறுமையாகப் பார்த்துக் கொண்டிருந்த கருப்பண்ணசாமிக்குச் சட்டென்று சிரிப்பு வந்தது. சிரிக்க ஆரம்பித்தான். குலுங்கிக் குலுங்கி. கண்களில் நீர் வரும் அளவுக்கு.

"கேபிஎஸ். கலெக்ட் யுவர் செல்ஃப், ப்ளீஸ்." என்றாள் ஊர்மிளா.

"சேச்சே! நான் அழலை. சந்தோஷம்! தாங்க முடியாத சந்தோஷம்! இந்த நாடகம் அவ்ளோதான். நீ இன்னொரு 'நாட்' குடுத்திருக்க இப்ப."

"ஸாரி" என்றாள் தயங்கி.

"ஆல் ரைட்! நான் பருவாக்கு தந்தி குடுத்துடறேன், வரலைன்னு"

"வேண்டாம் கேபிஎஸ். நாம் போவோம். நடிக்க இல்லாட்டாலும் அட்லீஸ்ட் பார்க்க."

"கிண்டலா?"

"சத்தியமா இல்லை! ப்ச்! நான் எப்படி சொல்வேன்? கலை வாழணும்ங்கறது முக்கியம்தான். அதைவிட கலைஞர்கள் வாழணுமில்லையா? இந்தமுறை முடியலை. ஸோ வாட்? நாளைக்கே இன்னும் பெரிய லெவல்ல நீங்க வெளிப்படலாமில்லையா?"

"கரெக்ட்டுங்க" என்றான் அடைக்கலராஜ்.

"உன் லவுட் ஸ்பீக்கருங்கள்ல 'ஊர்மிளா துணை'ன்னு எழுதிருவ இல்லே?" என்று சிரித்தான் கருப்பண்ணசாமி.

"அ, நல்ல ஐடியா!" என்றான் ராஜு.

ஒரு கணம் தயங்கிய மூர்த்தி, "உங்க அன்பு கேபிஎஸ்ஸுக்கு ஏன் எதுவும் செய்யலை?" என்றான் பளிச்சென்று.

அவள் சட்டென்று வெட்கப்பட்டதைப் பார்த்தவன், "பார்றா! நான் அப்பவே சொன்னேனில்லை?"

"என்னது?" என்றான் கருப்பண்ணசாமி.


"ஒண்ணும் புரியாதவன் மாதிரி கேக்கறான் பாரு. திருடன்டா."

"சேச்சே! நிஜமாவே புரியலைடா" என்றான், புரிந்து கொண்டு.

"புரிய வெச்சிடுங்களேன் சிஸ்டர்" என்றான் அடைக்கலராஜ்.

"ஐயய்யோ, ஊசியா! எனக்கு வேண்டாம், வலிக்கும்!"

– எஸ். மோகன்



முதல் முதல் அவள் ஒட்டலுக்கு வந்தது, மீனலோசனியுடன் சண்டை போட்டது, தான் ஒரு சாகசம் செய்து சமாளித்தது, வேலையே போய் விடுமோ என்று பயந்த போது எதிர்பாராமல் கிடைத்த நிர்வாகத்தின் பாராட்டு, நாடக ரிகர்ஸல், பெரியவரின் ஹார்ட் அட்டாக், ரெய்டு, கைது என்று வரிசையாக ஞாபகங்கள் மோத, அஸ்ஸாம் தோட்டங்களில் கைகோத்து உலா சென்ற கனவில் வந்து மனம் நின்றது. கீதையில் பகவான் என்ன சொல்கிறான்? எது நடக்க இருக்கிறதோ அது நன்றாகவே நடக்கும்.

"சொல்லுங்க! சொல்லிடுங்க சிஸ்டர்! பாவம் கருப்பண்ணசாமி. கைவிடப்பட்ட காரிகை மாதிரி நிற்கிறான் பாருங்க."

"இப்ப ஒண்ணும் சொல்றதா இல்லை" என்றாள் தீர்மானமாக.

"பின்னே?"

"நானும் கேபிஎஸ்ஸும் மட்டும் குவாஹாத்தி போறோம். நாடகம் நடிக்க இல்லை - பார்க்க!"

"த பார்றா!"

"அப்ப சொல்லுவேன்."

"என்னது?"

"ஏதோ ஒண்ணு!"

"எங்களுக்கெல்லாம் மறக்கவே முடியாத ஒரு பரிசு குடுத்திருக்கீங்களே. சிஸ்டர்! அவனுக்கு?"

"கட்டாயம் குடுப்பேன்."

"என்னது?"

"நாலு வாரமா கொட்டை எழுத்துல போடறாங்களே, படிக்கலை?" என்றாள் ஊர்மிளா.

(முற்றும்)

கார் போய்க் கொண்டிருந்த வழியில் பாங்க் கண்ணில் பட்டது. பார்த்த மாத்திரத்தில் ஞாபகம் வர, "என்னங்க, அந்த டிராப்டை இன்னிக்கு எடுத்திடலாமா?'' என்று கேட்டேன். திலீப் பிரேக் அழுத்தி ஓரம் கட்டினார்.

பாங்கினுள் நுழைந்தோம். நல்ல கூட்டம். ஒவ்வொரு கவுன்ட்டர் முன்பும் நீளமான வரிசைகள்.

நாங்கள் வீட்டை விட்டுக் கிளம்பியது பாங்க் வேலைக்காக அல்ல. இதிலே நேரம் செலவழிப்பதில் திலீப்பின் மற்ற திட்டங்கள் முழுமையாக நிறைவேறாமல் போக வாய்ப்புகள் இருக்கின்றன.

"என்னங்க, இன்னிக்கு வேணாம். லாஸ்ட் டேக்கு நாள் இருக்கு. இன்னொரு நாள் ஆள் அனுப்பி எடுத்துக்கலாம். இங்கே டயம் வேஸ்ட் பண்ண வேண்டாம்'' என்றேன்.

திலீப் அலட்சியமாக உதடு சுழித்தார். "நீ இந்த டிராப்ட் அப்ளிகேஷனை ஃபில் அப் பண்ணு. சொல்றேன்!'' என்றார்.

எனக்குத் தெரியும். இனி அவரிடம் வாதம் செய்து பலனில்லை. அவர் சொன்னதைச் செய்தேன்.

டெல்லர் கவுன்ட்டரின் வரிசையில் நின்று பணம் கட்டினேன். அந்த கிளார்க் பணம் பெற்றுக் கொண்டு கவுன்ட்டர் ஃபாயில் தந்தான்.

திலீப் கம்பி வலை வழியே எட்டிப் பார்த்து "இந்தத் தொகைக்கு நீங்களே டிராப்ட் இஷ்யூ பண்ண முடியுமே" என்றார்.

அந்த கிளார்க் நிதானமாக நிமிர்ந்து ''முதல் பத்து தேதி வரை அவ்வாறு தருவதில்லை.



பெ. நாயகி

எப்பவும் நான் ராஜா

நீங்க ஒரு அரைமணி நேரம் வெயிட் பண்ணிட்டு இந்த கவுன்ட்டர் ஃபாயிலைக் காட்டி ஆறாம் நம்பர் கவுன்ட்டரில் டிராப்ட் வாங்கிக்கோங்க!" என்றான்.

"இதென்ன ரூல் புதுசா இருக்கு?"

அவன் பதில் சொல்லாமல் எங்களைத் தவிர்த்து, அடுத்தவரிடம் பணம் வாங்கத் தொடங்கினான்.

"மிஸ்டர்! நான் உங்களை ஒரு கேள்வி கேட்டேன்" என்றார் திலீப் குரலில் உஷ்ணம் காட்டி.

"சார்! இது என்க்வைரி கவுன்ட்டர் இல்லை. நான் என் நிலைமையைச் சொல்லியாச்சு. கூட்டம் பார்க்கறீங்கல்ல? மேற்கொண்டு பேசணும்னா மானேஜர்ட்ட போய்ப் பேசிக்கோங்க" என்றான் சாதாரண குரலில்.

எனக்கு மேற்கொண்டு என்ன ஆகப் போகிறது என்பது ஓரளவு புரிய வர, "வாங்க திலீப்! அப்புறமா நாம் திரும்பி வரும்போது வாங்கிக்கலாம்" என்று மெதுவாகச் சொல்லிப் பார்த்தேன்.

"நோ" என்றார் திலீப். "நாம் இப்போ டிராப்ட் வாங்கிட்டுத்தான் போறோம். அதுவும் இவன் கண் முன்னாலேயே!" என்று அவன் காதில் விழும்படி உரத்த குரலில் சொன்னவர் என் கையைப் பிடித்து இழுக்காத குறையாக மானேஜரின் அறைக்கு விரைந்தார்.

வேறு வழியின்றி அவரைத் தொடர்ந்தேன்.

மானேஜருக்கு இவர் எம்.எல்.ஏவின் மகன் என்று தெரியும். சட்டென்று எழுந்து வரவேற்று உட்கார வைத்தார். சிரிப்பு உறைந்த முகத்துடனேயே பெல் அடித்து உள்ளே வந்தவனிடம் காப்பி வாங்கி வரச் சொன்னார்.

"சொல்லுங்க திலீப் சார். என்ன இந்தப் பக்கம்?"



என்னவர் முகமெல்லாம் பெருமை பொங்க என்னைப் பார்த்தார். நான் கடமைக்காகவாவது புன்னகைக்க முயன்று தோற்றேன்.

"பாஸ்கர்! நான் முதலிலேயே உங்களைப் பார்க்க வந்திருக்க முடியும். இருந்தும் ஏன் வரலை? சின்னச் சின்ன விஷயங்களுக்கெல்லாம் உங்க டயத்தை வேஸ்ட் பண்ண வேண்டாமேன்னுதான். பட் அந்த ராஸ்கல் காட்டிய அலட்சியமும் பேசிய விதமும் சரியில்லை, யார் அவன்? பேர் என்ன?" என்றபடி டிராப்ட் விஷயத்தை விளக்கினார்.

மானேஜர் தர்ம சங்கடமாய்ப் புன்னகைத்தார்.

"ஈஸி மிஸ்டர் திலீப்! ஐ வில் லுக் இன்டு த மேட்டர். நீங்க அந்த

கவுண்ட்டர் ஃபாயிலைக் கொடுங்க" என்று வாங்கிக் கொண்டார்.

மீண்டும் மணி அடித்து, வந்தவனிடம் "ஆனந்தைக் கூப்பிடு" என்றார். "வீட்டில் எல்லோரும் சௌக்கியமா?" என்று கேட்ட படியே வாசலையும் மேசையையும் நடுநடுவே என்னையும் அவஸ்தையாகப் பார்த்தார்.

யார் யாரோ வந்து அவரிடம் கையெழுத்து வாங்கிச் சென்றார்கள். "மாத ஆரம்பம் என்றாலே ரொம்ப பிஸியா இருக்கும்!" என்று வரவழைத்த புன்னகையுடன் சொல்லிக் கொண்டார்.

காப்பி வந்து சேர்ந்தது. ஆனந்தும் வரவில்லை. கூப்பிட்டனுப்பியவனும் வரவில்லை.

"நீங்க காப்பி சாப்பிடுங்க. இதோ வந்துர்றேன்" என்று அவரே எழுந்து வெளியேறினார்.

நான் சுற்றிலும் பார்க்க, அந்த பாங்க்கின் எம்பளம் தாங்கிய மாத நாள் காட்டியையும், சுவரில் நீளமாய் வலது கை தூக்கியவாறு அரைப் புன்னகையில் இருந்த சிம்ரன் காலண்டரையும் மீறி கண்ணாடித் தடுப்புக்கு வெளியே மானேஜர் மேசை மேசையாக அலைவதும் கெஞ்சலாக யாரிடமோ பேசுவதும் தெரிந்தது.

"பாவம்ங்க. உங்களால அவருக்குத்தான் சிரமம். உங்க பிரண்ட்ஷிப், அக்வாய்ன்ட்டன்ஸ் எல்லாத்தையும் ஏன் இப்படி என் கேஷ் பண்றீங்க?" என்று திலீப்பிடம் சொன்னேன்.

"அந்த கிளார்க் மூஞ்சில கரிபூசியாகணும். ராஸ்கல் என்ன நினைச்சிட்டிருக்கான்?" என்று பொருமியவர் அலட்சியமாக சரிந்து உட்கார்ந்து கொண்டார். "அதோட நான் யார், என் கெப்பாசிட்டி என்னன்னு உனக்கும் தெரிய வேண்டாமா?" என்று சிரித்தார்.

நான் அவரைப் பரிதாபமாகப் பார்த்தேன்.

உனக்குள் ஏன் இந்த இன்செக்யூரிட்டி? நீ என் அபிப்ராயத்தில் விழுந்து என்னை அடைய முயற்சிக்கும் நிலையில் உள்ள ஒரு தலைக் காதலனா? அல்லவே! என் கணவன். என்னுடைய அல்டிமேட்டம். இன்னும் என்ன நிரூபிக்க விரும்புகிறாய்?

நான் உன் மனைவி என்பதாலேயே உன்னைப் பற்றி மிக உயர்ந்த அபிப்ராயங்களும் உலகில் நீதான் எல்லாமே என்பது போன்ற முடிவுகளும் எப்படிக் கொள்ள முடியும். உன்னைவிட அடுத்தவர்கள் மட்டமானவர்கள்தான் என்று நீ நிரூபிக்க நினைத்து, அபத்தமாய் நடந்து கொள்கிற கணங்களில் நீ பாமரனாகத்தான் தோன்றுகிறாய் என்று ஏன் உனக்குப் புரிவதில்லை?

எனக்குப் பாதியில் நின்று போன என் படிப்பு ஞாபகம் வந்தது.

நான் பிஎஸ்ஸி மூன்றாம் ஆண்டில் இருக்கும் போதே இவருக்கும் எனக்கும் கல்யாணம் பேசி விட்டார்கள். கல்யாணம் நடக்கும் முன், என் படிப்பை முடித்தே ஆக வேண்டும் என்றேன். என் பிடிவாதத்திற்கு என் வீட்டிலும் இவர் வீட்டிலும் எல்லோரும் எதிர்த்த போதும் இவர் சம்மதம் தந்து படிப்பைத் தொடரச் சொன்னார்.

மறுநாள் நான் கல்லூரி போகும் போது வழியில் பைக் கொண்டு வந்து நிறுத்தினார்.

"நான் தினமும் கூட்டிப் போகிறேனே."

"நோ, தாங்க்ஸ்" என்றேன்.

"எனக்கு ஒரு சிரமமுமில்லை."

"எனக்கு அதில் சிரமம் இருக்கலாம்."

"ஓகே. இட்ஸ் ஆல்ரைட். உன் படிப்பு தொடர சம்மதித்தேனே ஒரு தாங்க்ஸ் கூடக் கிடையாதா?"

எனக்குள் கரீர் என்றது. என் படிப்பை நான் தொடர இவர் யார் சம்மதம் தர? எல்லாம் என் பெற்றோர் கொடுத்த இடம். அவர்களாகவே எங்கள் மகளின் படிப்பு முடிய இன்னும் நான்கு மாதங்களே உள்ளன. அதன் பிறகு கல்யாணம் வைத்துக் கொள்ளலாம், என்று சொல்லியிருக்கலாம். அதற்குக் கூட திராணியற்றுப் போய் எம்.எல்.ஏ வீட்டு சம்பந்தம் என்கிற மாத்திரத்தில் தள்ளி விடுகிற வேலையில் இறங்கியதால்தானே இப்படி இவர் வந்து இளக்காரம் பேசுகிறார். சே! என்று பொங்கி வந்த எரிச்சலை அடக்கி "தாங்க்ஸ்" என்றேன்.

ஆனால் அதன் பின்னான கல்லூரி நாட்களில் முன்பிருந்த சுதந்தர உணர்வுகள் பட்டுப் போனது போலவும் ஒருவித இரவல் வாழ்க்கை வாழ்வது போலவும் ஏற்பட்ட உணர்வுகளைத் தவிர்க்க முடியவில்லை.

ஒரு மாதம் போயிருக்கும். பாலாஜி என்கிற சீனியர் மாணவன் எனக்குக் காதல் கடிதம் கொடுத்தான். மறு நாள் அவனை நேரில் பார்த்து எனக்குக் கல்யாணம் நிச்சயமாகி இருக்கும் செய்தியைச் சொன்னேன். அவன் பதற்றத்துடன் மன்னிப்பு கேட்டுக் கொண்டு தன் கையாலேயே அந்தக் கடிதத்தைக் கிழித்துப் போட்டுவிட்டு வாழ்த்துகள் தெரிவித்து விலகிக் கொண்டான்.

இது நடந்து பத்துப் பதினைந்து நாட்

களுக்குப் பின் திலீப்புக்கு இந்த விஷயம் எப்படித் தெரிய வந்ததோ பாலாஜியை ஆள் வைத்து நொறுக்கித் தள்ளி ஆஸ்பத்திரியில் சேர வைத்துவிட்டார்.

போலீஸ் விசாரணை வரை போனது.

பதறிப் போன என்னிடம், "ஏம்மா, அந்தப் பொறுக்கி ராஸ்கல் உன்கிட்ட லவ் லெட்டர் கொடுத்தானாமே? ஏன் என்னிடம் முதலிலேயே சொல்லவில்லை?" என்று உரிமையுடன் கோபித்துக் கொண்டார் திலீப்.

ஒரு பெண்ணின் மீது காதல் வயப்படும் எவனும் செய்ய முடிகிற கண்ணியமான அப்ரோச் தானே லவ் லெட்டர்? அதிலே என்ன தவறு இருக்க முடியும்? அதன் முடிவு எதிர்மறையானது என்று தெரிந்த பிறகு, அவன் நடந்து கொள்ளும் முறைதானே அவனைப் பற்றி எடை போட உதவும் என்று திலீப்புக்குப் புரிய வைக்க முயன்றேன்.

"நோ நோ! என்ன ஆனாலும் சரி, அவனை ஒரு வழி பண்ணலை என் பேர் திலீப் இல்லை. நீ பயப்படாதே. நான் இருக்கிறேன். என்னை மீறி அவன் உன்னை ஒன்றும் செய்து விட முடியாது" என்று கொக்கரித்தார்.

எனக்கு யாரை நினைத்து நோவதென்று தெரியவில்லை.

பாலாஜி போலீஸிடம் திலீப் அடித்ததாகச் சொல்லவில்லை. கீழே விழுந்து அடிபட்டதாகச் சொன்னதால் விஷயம் கோர்ட் கேஸ் என்று போகவில்லை.

"என்னைப் பற்றிப் புரிஞ்சுக்கிட்டான். இனிமே வாலாட்ட மாட்டான்" என்று திலீப் பெருமையடித்தார்.

பின்னாளில் தோழிகள் மூலம் அவன் ஒரு பெண் விஷயம் விளம்பரமாக வேண்டாம் என்றுதான் திலீப்பைக் காட்டிக் கொடுக்கவில்லை என்று அறியவந்த போது நெகிழ்ச்சியாக இருந்தது.

கல்யாணத்துக்குப் பிறகும் திலீப்பின் இத்தகைய வீரப் பராக்கிரமங்கள் தொடர்ந்த வண்ணம் இருந்தன. ஆட்டோ டிரைவர், ஓட்டல் சர்வர், ரயில்வே அதிகாரிகள் என்று என் முன்னிலையில் ஏதாவது நடத்தாமல் விடுவதில்லை அவர்.

நாம் காதல் கல்யாணம் செய்து கொண்டவர்கள் இல்லை திலீப். நம் பெற்றோர்களாகவே தீர்மானித்துக் கொண்டார்கள், உனக்கு நான் எனக்கு நீ என்று. உன்னைக் கேட்டார்களா என்று எனக்குத் தெரியாது. என்னைக் கேட்கவில்லை. இத் தீர்மானத்தில் நான் மதிக்கப்படாததாலேயே நான் மனுஷி அல்லாமல் ஜடப் பொருளாகி விட்டேன். அதற்காக உன் மேல் வெறுப்பு என்று இல்லை. உன் மீது எனக்கு அதீத விருப்பு கிடையாது. அல்லது அப்படி ஒன்று ஏற்படுவதற்கான நிகழ்வுகளோ, காரணங்களோ இந்த நிமிஷம் வரை அமையவில்லை. புரிந்து கொள்ள முயற்சி செய் என் கணவா!

நீயாகவே செயற்கையாக அவ்வப்போது ஹீரோ வேஷம் போட முயன்று ஏதாவது செய்யும் போதெல்லாம் எனக்குள் எதிர்மறையான எண்ணங்களே ஓடுவதைத் தவிர்க்க முடியாமல் தவிக்கிறேன் தெரியுமா?



"சாரி! ரொம்ப நேரம் காக்க வைத்து விட்டேனா?" என்றபடி உள்ளே நுழைந்தார் மானேஜர். கையில் டிராப்ட். அவர் குரலின் வருத்தம் தோய அடிபட்ட உணர்வைக் கூடப் புரிந்து கொள்ளாமல் திலீப் "இட்ஸ் ஆல்ரைட்" என்றபடி வெளி வந்தது என்னவோ போலிருந்தது. அவருக்கு நன்றி கூறி இருக்கலாம் என்று பட்டது.

பாங்க்கை விட்டு வெளியே வரும் முன் திலீப் டெல்லர் கவுன்ட்டர் அருகே சென்று "ஹலோ! இந்தா இருக்கு நீங்க தர முடியாதுன்னு சொன்ன டிராப்ட்" என்று காட்ட அவன் பதில் சொல்லாமல் புன்னகை செய்துவிட்டு, தன் வேலையைத் தொடர்ந்தான்.

"வழியறான் பாரு" என்று முணுமுணுத்தபடி நகர்ந்தார் திலீப். காரில் அமர்ந்தோம். சாதனை செய்த பெருமிதத்துடன் என்னைப் பார்க்க, இவ்வளவு இடைவெளியில் அந்த கிளார்க் முதலிலேயே சொன்ன அரைமணி நேரம் ஆகியிருந்ததைச் சுட்டிக் காட்டத் தான் தோன்றியது எனக்கு.



10

ப்ரபாகர் ராவ் மிகவும் பரபரப்பாகவும் ஆத்திரமாகவும் இருந்தார். "சே ஒரு பெண் இப்படி நம்மை ஏமாற்றிவிட்டுத் தப்பித்துப் போய்விட்டாளே" என்று சங்கரிடம் அங்கலாய்த்தார்.

"இப்பக் கூட எனக்கு அவ நம்மை ஏமாற்றும் நோக்கத்தில சிங்கப்பூர் போயிருப்பான்னு நம்பத் தோணலை ஸார்" என்றார் சங்கர்.

"ஏன்?"

"அவ கண்களில் குற்றமில்லை."

"பெண்களின் கண்கள் எத்தனையோ குற்றங்களை மறைக்க வல்லது. லேசில நம்பிடாதீங்க."

"எனக்கு அத்தனை அனுபவம் இல்லை ஸார்!" – சங்கர் ஒரு பிரம்மசாரி.


"எம்ஜி ரோடில பாஸ்போர்ட் ஆபீஸ்ல போய் டிட்டெய்ல்ஸ் வாங்கிடுங்க. அப்புறம் சென்னைல சிங்கப்பூர் கான்சலா, ஹை கமிஷனா அங்க விசாரிச்சு, அவங்க இமிக்ரேஷன் அத்தாரட்டிஸ்க்கு தகவல் சொல்லுங்க. உடனே அடுத்த ப்ளைட்டில திருப்பி அனுப்பிச்சுருவாங்க."

"அவங்களுக்கு நிஜமாவே நடன நிகழ்ச்சி இருக்குது. கவர்மெண்ட் இன்விட்டேஷன் பார்த்தேன். அதனால..."

"அதனால?"

"விட்டுப் பிடிக்கலாம்னு...."

"உங்களுக்குத் தெரியாது சங்கர். அங்கிருந்து ஆஸ்திரேலியாவோ, லண்டனோ, கனடாவுக்கோ போய்ட்டா அப்புறம் கேஸ் சிக்கலாயிரும். அதனால பழி பாவம் பார்க்கக் கூடாது. உடனே மெஸேஜ் அனுப்பிச்சுருங்க" என்றார்.



கமிஷனர் ஆபீசில் அன்று இந்த கேஸைப் பற்றிய ஒரு ப்ரீஃபிங் இருந்தது. அறிக்கை கேட்டிருந்தார்கள். அதை விரைவில் கணிப் பொறியில் கொடுத்து அச்சடித்துக் கொடுக்கச் சொன்னார். தம் அலுவலகத்தை விட்டு வெளியே வந்தபோது, அவருக்கு ஒரு கவலை ஏற்பட்டது. இந்தக் கொலைக் குற்றம் கண்டு பிடிக்கப்படாமல் குறைக்கேஸாகப் போய் நாளடைவில், கோப்புகளில் உறங்கப் போகிறது. தம் போலீஸ் திறமைக்கு களங்கம் வரப் போகிறது. அல்லது இலாகாவை சங்கடத்தில் ஆழ்த்தப் போகிறது என்று. அவர் நினைத்தபடியே நடந்தது.

கமிஷனர் செட்ரிக் டிசோஸா மிகுந்த கோபத்திலிருந்தார். "ராவ், சைன்டிஸ்ட்டு மர்டர்ல ஏன் யாரையும் இன்னும் அரஸ்ட் பண்ணலைன்னு சீப் செக்ரட்ரிகிட்டிருந்து நோட் வந்திருக்கு. பத்திரிகைக்காரங்க துளைக்கிறாங்களாம். என்ன பதில் சொல்லப் போறீங்க?"

"யாருன்னு சரியா இன்னும் கண்டுபிடிக்க முடியலை ஸார்."

"யாரார் பேர்ல சந்தேகம்?"

"இறந்து போன டாக்டர் ஆனந்துடைய கலீக் டாக்டர் சோமசுந்தரம்னு ஒருத்தரும், கூட வேலை செஞ்ச சோனாலின்னு ஒரு பெண்ணும்தான் ஸார் முக்கியமான சஸ்பெக்ட்ஸ்."

"சுவத்தில எதோ எழுதி வச்சதா சொன்னாங்களே?"

"சுவத்தில இல்லை ஸார். அது பேப்பர் காரங்க கற்பனை. கண்ட்ரோல் ரூமுக்கு அவர் போன் பண்ணப்ப, சோமுன்னு ஒரு வார்த்தை சொல்லிருக்கார். அது கூட அவர்தான் போன் பண்ணதா நிச்சயமா இப்ப சொல்ல முடியலை."

சங்கர் அவரை வியப்புடன் பார்த்தார். ஆனந்த் இறந்த சமயத்துக்கு சற்று முன் பதிவாகியிருக்கும் அந்தச் செய்தி, விமான நிலையத்தில் விமானம் இறங்கும் சப்த நேரம், இவைகளை வைத்து அந்த போன்கால் ஆனந்த்தான் செய்திருக்க வேண்டும் என்று தாம் கண்டுபிடித்ததில் சங்கர் உறுதியாக இருந்தார்.

"அப்ப சோமசேகரை அரஸ்ட் பண்ணுங்க."

"சோமசேகர் இல்லை. சோமசுந்தரம் ஸார் அவர்



''எப்பவும் வார இதழ்களில் சென்ட் வாசனை பூசித் தான் அனுப்பு வாங்க. இதில் மசாலா வாசனை வருதே...!''

''இந்த வாரம் உணவு ஸ்பெஷல் ஆச்சே.. அதனால் தான்!''

– வி.ஆர். கிருத்திகா

பேரு. சோனுவாகவும் இருக்கலாம். சோனு சோனாலி.''

''எல்லாமே சந்தர்ப்ப சாட்சியங்கள்?''

''ஆமா!''

''அந்தப் பெண் எங்க இப்ப?''

''சிங்கப்பூருக்கு ஒரு நடன நிகழ்ச்சிக்காகப் போயிருக்காங்க.''

''நாட்டை விட்டு வெளியே போக அனு மதிச்சிங்களா? எங்கயோ கேஸ்ல ஓட்டை இருக்கு. சி.எம். ரொம்ப கவலைப்படறார். விதான் சபாவில் ஒரு கவன ஈர்ப்புத் தீர் மானம் வரப்போவுதுன்னு சொல்றாங்க. கொஞ்சம் அரசியல் உள்ள வந்துருச்சு. யாரையாவது கைது பண்ணித் தொலைங்க ராவ்.''

செக்ரடரியின் நெற்றிப் புருவங்கள் கோபத்தில் இணைந்தன.

''இல்லை மழுப்பலா ஒரு அறிக்கை கொடுங்க. சும்மாவே இருந்தா எப்படி?''

உள்ளே ப்யூன் கார்டு கொண்டு வந்து, கொடுக்க, அதை கவனித்து –

''வந்துட்டாங்க பாருங்க. 'ப்ரஜாவாணி' ரிப்போர்ட்டர். என்ன சொல்றது அவர் கிட்ட? வரச்சொல்லுப்பா.''

சேஷகிரி ராவ் இருபத்தைந்து வருஷம் அனுபவமுள்ளவர். எத்தனையோ போலீஸ் கேசுகளையும் கொலைகளையும் தமது நகர் வலத்திலும் கோர்ட் வளாகத்தின் காற் றோட்டமில்லாத காரிடாரிலும் பார்த்தவர். சுமுகமாகவே கேள்விகள் கேட்டார்.

''கமிஷனர் ஸார், இந்த முறை நீங்க தப் பிக்க முடியாது.''

''என்ன?''

''என் டாட்டர் கல்யாணத்துக்கு வந்தே ஆகணும்.''

''அதான் ஆய்டுச்சே.''

''இது இன்னொரு டாட்டர்.''

''உங்களுக்கு எத்தனை டாட்டர் ராவ்?''

''மூணு. என்ன இது, ஆனந்த் கேஸ்ல இப்படி போட்டுக் குழப்பிருக்கிங்க?''

''இவர்தான் பார்க்கறார். இவரைக் கேளுங்க.''

''ஓ ப்ரபாகர் ராவ்!''

''ஆமாம்.''

''என்னங்க, இதில பெரிய அரசியல் இருக்கறதாவும் வெளிநாட்டு சதியெல்லாம் இருக்கறதாவும் கூடவே ஒரு செக்ஸ் ஸ்காண் டல் இருக்கறதாகவும் பேச்சு அடிபடுது.''

''ராவ் உங்களுக்குத் தெரியாததா! குற்ற வாளியைக் கண்டு பிடிக்க சற்று தாமதமாச் சுன்னா இந்த வதந்திங்கல்லாம் வரத்தான் செய்யும்.''

''விவகாரம் அசெம்பிளி வரை போவு தாம். கௌடா அதை வச்சுகிட்டு – அரசைக் கலைக்கப் போறாராம். அது வதந்தியில்லை. உள்துறை அமைச்சர் மேல ஒரு கெடு. அவர் ராஜினாமா வரைக்காவது இது வந்தே தீரும்.''

''ப்ரபாகர் ராவ் உங்க பேரு பெரிசா அடி படப் போவுது பேப்பர்ல'' என்றார் கமி ஷனர்.

''வேண்டாம் ஸார். நீங்களே ஸ்டேட் மெண்ட் கொடுத்துருங்க.''

''என்ன கண்டு பிடிச்சிருக்கிங்க இது வரை?'' என்று கேட்டார், சேஷகிரி ராவ்.

அவருக்கு ஒரு பேப்பர் தட்டில் உப்பு பிஸ்கட் கொண்டு வைக்கப்பட்டது. ''இந்த உப்பு பிஸ்கட் மாத்த மாட்டிங்களே.... என்ன பண்றது? வரவங்களுக்கெல்லாம் டயபடிஸ்.''

''ப்ரபாகர் ராவ் கேஸ்ல நிறைய லீடு கிடைச்சிருக்கு. ஆனா இன்னம் திட்ட வட்டமா கைது பண்ற அளவுக்கு சாட்சியங் கள் கிடைக்கலை.''

''டாக்டர் ஆனந்தை அவருடைய லாப் டிரக்டரே கொன்னிருக்கலாம்னு சொல் றாங்க?''

''இதென்ன புது குண்டு!''

''ஆமாம். ஆனந்த் கொடுத்த பல ஆராய்ச்சித் திட்டங்களுக்கு அவர் சம்மதிக் காம கிடப்பில போட்டிருந்தாராம். இதை அவர் மேலிடத்துக்கு அம்பலப்படுத்தறதா தெரிஞ்சு உடனே ஆளுங்களை வச்சுகிட்டு–''

''உங்களுக்கு நல்ல இமாஜினேஷன் ராவ்.

டிரக்டர் பாகிரத் பெரிய சாயி பாபா பக்தர்."

"ஸோ வாட்!"

"கற்பனையைப் பறக்க விடாதீங்க."

"சரி. கற்பனை இல்லாத ஒரு உண்மை சொல்றேன். இந்த கேசை சிபிஐ கிட்ட கொடுக்கப் போறார் முதல்வர். அது தெரியுமா உங்களுக்கு."

"தெரியாது!" என்றார் கமிஷனர். அவர் முகம் கறுத்தது.

"எங்களுக்குத் தெரியும். விதான்சபாவில் தற்போதைக்கு அதன் மேல விவாதத்தை நிறுத்த அதான் அவருடைய உத்தி."

"உங்களுக்கு எல்லாம் தெரியும்!"

"இது பற்றி 'வாணி'யில ஒரு கட்டுரை விரிவா எழுதப் போறேன். படிச்சுப் பாருங்க!"

"தயவு செய்து வதந்திகளை மட்டும் எழுதாதீங்க."

"வதந்திகள் நாளைய நிஜங்கள். இந்த கேசில பல கோணங்கள் இருக்குது கமிஷனர் சார். போலீஸ் குற்றம் மட்டும் இல்லை. அரசியல் சதி, சாதி எல்லாம். வரேன். அடுத்த முறை வரும்போது முந்திரி பிஸ்கட் வாங்கி வெச்சாத்தான் வருவேன், இந்த ஆபீசுக்கு!" என்று எழுந்து சென்றார்.

அவர் போனதும் கமிஷனர் ப்ரபாகர் ராவை கவலையுடன் பார்த்தார்.

"கேட்டிங்கல்ல, எப்படி போயிட்டிருக்குது பாருங்க."

"ஸார் சிபிஐ வருமா ஸார் இதில."

"ஒரு வாரத்தில!"

அப்போது போன் மணியடித்தது. அதை எடுத்துக் கேட்ட அவர் முகம் இறுகியது.

"எஸ்ஸர்! எஸ்ஸர்! நிச்சயம் ஸார்! ம்! வெள்ளிக்கிழமைக்குள் ஸார். சரி ஸார்!" போனை வைத்து, "சி.எம். வெள்ளிக்கிழமைக்குள்ள கேசை ஒரு வழியா முடிச்சாகணும். அதுக்குள்ள கூடுதலா போலீஸ் படையைப் போடலாம்னு."

"தேவையில்லை ஸார். வெள்ளிக்கிழமைக்குள்ள முடிச்சுர்றம் ஸார்."

வெளியே வந்தபோது சங்கர், "எப்படி ஸார் நாம் ஒரு பெரிய கவரைன்னா சந்திச்சிருக்கோம் இதுவரை."

"தாண்டிக் குதிக்க வேண்டியதுதான்!"

நிருபதுங்கா ரோடில் தமது அலுவலகத்துக்கு வந்தபோது அவருக்கு ஒரு செய்தி காத்திருந்தது. சிங்கப்பூரிலிருந்து ஒரு பெண் இரண்டு தடவை போன் செய்ய முயற்சித்ததாகவும் ரிட்ஸ் ஓட்டலில் தங்கியிருப்பதாகவும்."

"பேர் சொன்னாங்களா?"

"சோனாலி. உங்க டைரக்ட் நம்பர் வாங்கிக்கிட்டாங்க."

உடனே முயல்வதற்கு முன் போன் மணியடித்தது.

"அவங்கதான் ஸார்."

"இன்ஸ்பெக்டர் ப்ரபாகர்?"

தாம் இன்ஸ்பெக்டர் இல்லை என்று விளக்கச் சமயமில்லை. "சொல்லுங்க சோனாலி, என்ன விஷயம்?"

"நான் திரும்ப பெங்களூர் வந்தா கைது பண்ணுவிங்களா?"

"எதுக்குக் கைது பண்ணணும்? நீங்கதான் குற்றம் எதும் செய்யலியே."

"ஆனா பொய் சொல்லிட்டனில்லை?"

"என்ன பொய்?"

"அந்தத்



துப்பாக்கியை நான்தான் வாங்கினேன்!"


"பின்ன ஏன் முதல்ல வாங்கவே இல்லைன்னு சத்தியம் அடிச்சுச் சொன்னிங்க?"

"பயத்திலதான்! நான் முன்னால உங்ககிட்ட கொடுத்த வாக்குமூலத்தை வாபஸ் வாங்கும்படியா என் லாயர் சொல்லிருக்கார். என்னை இங்க கைது செய்யாம இருந்தா, நான் நேரில அடுத்த ப்ளைட்ல திரும்ப வந்து, நடந்தது எல்லாத்தையும் சொல்லிடறேன்."

போனை வைத்து, "சங்கர், சிங்கப்பூர் போறியா? கேஸ் முடிஞ்சுருச்சு!" என்றார் ப்ரபாகர் ராவ்.


(தொடரும்)

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager; Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax : 2345621
Annual Subscription : India Rs. 250/-; Overseas Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India Rs. 125/-; Overseas Rs. 800/- (Air Mail)


தீபாவளி முத்துக்கள்!
மூழ்கியெடுக்க முந்துங்கள்!
இந்த தீபாவளிக்கு
குமரன் சில்க்ஸ்
உங்களுக்காக
வழங்குகிறது ஜவுளி
ரகங்களில்
என்னென்ன உண்டோ
அவை அனைத்தும்
ஒரே கூரையின் கீழ்!
ஆடைகளில் எல்லோருக்கும் எல்லாமுமே.
குமரன் சில்க்ஸ்
558-560, ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர் - 1. போன் : 391555
73-74, புது மார்கெட் வீதி, திருப்பூர் - 4. போன் : 742888
ஜனரஞ்சகமான ஜவுளி மாளிகை


குழந்த
இருக்

ஆரோக்கியமாக
உதவுவது எது ?



அன்னையின் ஸ்பரிஸம். குழந்தையின் இயற்கையான நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவக்கூடும். மியாமி ஸ்கூல் ஆப் மெடிஸன் எனப்படும் பல்கலைக் கழகம் ஸ்பரிஸம் பற்றி விஞ்ஞானத்தின் அடிப்படையில் ''டச் தெரப்பி'' மீது ஆய்வுகளை நடத்தியது. இதில், அன்னையின் ஸ்பரிஸத்திற்கும் குழந்தையின் நோய் எதிர்ப்பு சக்திக்கும் நேரடியான தொடர்பு உண்டு என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. ஸ்ட்ரெஸ் ஹார்மோன்களை (கேட்கோலமைன்ஸ்) கட்டுப்படுத்துவதால் குழந்தைக்கு இறுக்க உணர்வு குறைகிறது. அட்ரீனல் ஹார்மோன்களும், இயற்கையான பாதுகாப்பு உயிரணுக்களும் அதிகமாக சுரக்கின்றன. இதனால், குழந்தை நோயை சமாளிக்கிறது. இன்ஃபெக்ஷனை எதிர்த்து போராடவும், இரத்த ஓட்டத்தை அதிகரிக்கவும் முடிகிறது. அதற்கு, பாதுகாப்பான உணர்வு முழுவதுமாகத் தோன்றுகிறது. உங்கள் குழந்தையை அதிகம் தொடுங்கள். அளவிலா அன்பை அதற்கு காட்டுங்கள். அவனை அதிகம் தொடுங்கள். அளவிலா அக்கறை காட்டுங்கள். அன்னையர் மட்டுமே அறிந்த அளவிட முடியாத பல அனுபவங்களை, உங்கள் சிசு பெற்றிட அந்த பிஞ்சுக் குழந்தையை அதிகம் தொடுங்கள்.

உங்கள் ஸ்பரிஸத்தின் சக்தியை பற்றி மேலும் அறிந்து கொள்ள எழுதுங்கள் :
பேபி கேர் அட்வைஸர், Johnson & Johnson , 30, ஃபோர்ஜீத் ஸ்ட்ரீட், மும்பை 400 036.



johnson's baby உங்கள் குழந்தையின் எதிர்காலம்; உங்கள் இன்றைய அரவணைப்பில்.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392/ 98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka

